# திருவிளையாடல் புராண கீர்த்தனைகள்

இயற்றியவர்
D.பட்டம்மாள்

## 1 இந்திரன்பழி தீர்த்த படலம்

தேவலோகத்தில் **இந்திரன்** தேவமாந்தர்களின் ஆடலிலும் பாடலிலும் களித்திருக்கும் சமயம் உலகின் குருவான **பிரகஸ்பதி** அங்கு வந்தார். அவரை கவனிக்காமல் அவமதித்ததினால் இந்திரனின் செல்வாக்கு குறைந்தது. எங்கு தேடியும் தன் குரு கிடைக்காததால் இந்திரன் ப்ரம்மாவிடம் சரண்டைந்து நடந்தவற்றைக் கூறி தனக்கு ஓர் வழிக்காட்ட வேண்டினான். இந்திரனும் ப்ரம்மாவின் ஆலோசனைப்படி பிரகஸ்பதி கிடைக்கும் வரை **அரக்கன் துவஷ்டா** என்பவரின் மகனான **விஸ்வரூபனை** தேவர்களின் குருவாகக் கொண்டான். அவன் அறிவும் ஒழுக்கமும் நிறைந்த மூன்று தலைகளைக் கொண்டவன்.

பிரகஸ்பதியை சமாதனம் செய்ய இந்திரன் யாகம் செய்ய தீர்மானத்தான். ஆனால் துவக்ஷ்டா அரக்கர் குலத்தைச் சேர்ந்தவர் என்பதால் விஸ்வரூபன் அரக்கர்கள் வாழ்வதற்கு ஏற்றவாறு மந்திரத்தினை மாற்றி யாகம் செய்தார் . இதனை தன் ஞான திருஷ்டியால் அறிந்த இந்திரன் விஸ்வரூபனை வஜ்ராயுதத்தால் தாக்கி அவனை அழித்தான்.இந்திரனுக்கு ப்ரம்மஹஸ்தி பாபம் பற்றிக்கொண்டது. இந்திரனின் பாபத்தைப் போக்க எண்ணம் கொண்ட தேவர்கள் அதனை பெண்களுக்கு பூப்பாகவும், மரத்தில் பிசினாகவும், தண்ணீருக்குள் நுரையாகவும், மண்ணில் உவர்ப்பாகவும் கழியும் படி செய்தனர்.

கோபம் கொண்ட விஸ்வரூபனின் தந்தையான துவஷ்டா யாகம் ஒன்றினை செய்து இந்திரனை அழிக்க விருதிகாசுரன் என்ற ஒரு அரக்கனை உருவாக்கினார். இருவருக்கும் கடுமையான போர் நடந்து. அதில் தோற்ற இந்திரன் மீண்டும் ப்ரம்மனிட ன் தஞ்சம் புகுந்தான். ப்ரம்மா அவனை விக்ஷ்ணு பகவானிடம் அழைத்துச் சென்றார். வி ஷ்ணுவும் இதற்கொரு உபாயம் கூறினார். திருப்பாற் கடலைக் கடையும் சமயம் தேவர்களும் அசுரர்களும் தங்களின் ஆயுதங்களை ததீசி என்ற முனிவரிடம் ஒப்படைத்து விட்டு சென்றனர். ஆனால் அவற்றை யாரும் வந்து கேட்காத்தால் அவர் ஆயுதங்கள் அனைத்தையும் விழுங்கி விட்டார் .அவை அனைத்தும் ஒன்று சேர்ந்து அவரது முதுகு தண்டாக பொருந்திவிட்டது. விஷ்ணு பகவான் அதனக் கொண்டு விருத்திகாசுரனை கொல்ல ஓர் உபாயம் கூறினார் .இந்திரனும் அதனை ததீசி முனிவரிடம் வேண்ட, அவனுக்கு உதவ எண்ணம் கொண்ட முனி, சிவபெருமானை தவம் செய்து சிவலோகம் அடைந்தார். அவரது முதுகு தண்டில் விஸ்வகர்மா வஞ்சிராயுதம் செய்துக் கொடுத்தார். இதனைக் கொண்டு இந்திரன்அசுரனைத் தாக்க, அவன் கடலில் ஒளிந்துக் ண்டான். மீண்டும் இந்திரன் ப்ரம்மாவிடம் தஞ்சம் புகுந்தான். ப்ரம்மா இம்முறை அகத்தியரிடம் அழைத்துச் சென்றார் . அகத்திய முனி கடலை உளுந்தளவு சிறியதாக்கி குடித்து விட்டார் . இப்போது வெளிப்பட்ட அரக்கன் விஸ்வரூபனை இந்திரன்

வஞ்சிராயுதத்தால் தலையில் தாக்கி அழித்தான். இந்திரக்கு மீண்டும் ப்ரம்மஹத்தி தோஹம் பற்றிக்கொண்டது. அத்தோஷத்தால் துன்புற்ற இந்திர ன் தாமரைத் தண்டில் ஒளிந்துக்கொண்டான். அரசன் இல்லாமல் தேவலோகம் நலிவுற்றது .இந்நிலையில் நகுடன் என்ற அரசன் அஸ்வமேத யாகம் செய்து இந்திர பதவியை அடைந்தான். நகுட ன் இந்திராணியை அழைக்க அவள் பிரகஸ்பதியை சரண் அடைந்து தன்னை காக்கும் படி பிரகஸ்பதியும் அவனை பாம்பாக்கி விண்ணினின்று மண்ணில் விழச்செய்தார்.

மீண்டும் தேவலோகம் அரசனின்றி களையிழந்தது. தேவர்கள் பிரகஸ்பதியை தங்களை இந்நிலையிலிருந்துக் காக்க வேண்டினர். பிரகஸ்பதியும் இந்திரனின் தோஷம் நீக்கி தே வர்களைக் காக்க எண்ணம் கொண்டார். இந்திரனை லோகம் அழைத்து
வந்து கடம்ப வனத்தில் ஒரு லிங்கத்தினையும், குளத்தினையும் காட்டினார். அந்தக் குளத்தில் குளித்து, லிங்கத்திற்கு பூஜை செய்யும் படி கூறினார். இந்திரன் அங்கு
பூஜை செய்ய மலர் கிடைக்காததால் வருந்தினான். இறைவன் அருளால் குளத்தில் பொற்றாமரை மலர்கள் மலர்ந்தன. அம்மலர்களைக் கொண்டு பூஜை செய்ய
அவனுடைய பிரம்மஹத்தி தோஷம் நீங்கியது

விஸ்வகர்மா மூலம் அவ்விடத்தில் லிங்கத்திற்கு எட்டு யானைகள் தாங்கும் மானத்தினை உருவாக்கினான். இந்திரனும், இந்திரானியும், தேவர்களும் இறைவனை வழிபட்டனர். இந்திரன் மனமாற ஈசனை பூஜித்து இந்திர லோகம் அடைந்தான்.

**பல்லவி**

குருவைஅவமதித்துஅழிந்துசரணடைந்த
அமரேசனைஆட்கொண்டசிவனேசரணம்

**அனுபல்லவி**

கருத்தில்கபடங்கொண்டவிஸ்வரூபனைவீழ்த்தியப்பின்
விருத்திகாசுரனையும்கொன்றபாபம்தீர்த்தவனே

**பல்லவி**

அகத்தியமுனிகொண்டுஅசுரனைக்காணச்செய்தாய்
அடியார்ததீசியிடம்ஆயுதம்பெறச்செய்தாய்
ககனத்தினின்றுநகுடனைவீழச்செய்தாய்
கடம்பவனபூஜைக்குகனககமலம்தந்தாய்

## 2 வெள்ளை யானை சாபம் தீர்த்த படலம்

காசியில் துர்வாச முனி ஓர் சிவலிங்கம் வைத்து பூஜித்து வந்தார். ஒரு சமயம் சிவபெருமான் முடியிலிருந்து பொற்றாமரை மலரொன்று கீழே விழ அதனை துர்வாச முனி தன் கரத்தில் ஏந்தி தேவலோகம் எடுத்துச் சென்றார். அப்போது இந்திரன் அரக்கர்களை வென்று தன் ஐராவதமான வெள்ளை யானை மீது பவனி வந்துக் கொண்டிருந்தான். துர்வாச முனி இந்திரனை ஆசீர்வதித்து அம்மலரை இந்திரனிடன் கொடுத்தார். அதனைப் பெற்ற இந்திரன் அம்மலரை ஐராவத்தின் தலை மீது வைத்தான். அவ்வானை அம்மலரை கீழே தள்ளி காலால் மித்தது.

அதனைக் கண்டு கோபம் கொண்ட முனிவர் செல்வச் செருக்கு கொண்ட இந்திரனை பாண்டிய வீரனொருவன், தனது சக்ராயுதத்தால் தாக்கும் போது அவனது தலை சிதறும் என்றும், வெள்ளை யானை காட்டானையாக காட்டில் திரியுமாறு சபித்தார். இந்திரன் துர்வாச முனியிடம் தன் செயலுக்கு வருந்தி மன்னிப்பு கோரினான். இது கண்டு மனமிரங்கிய அவர், பாண்டியன் இடும் ஆயுதம் தலையைத் தாக்காது அவனது கீரிடத்தை மட்டும் பறித்துச் செல்லும் என்று கூறினார். காட்டானையாக மாறிய ஐராவதம் நூறு ஆண்டுகள் காட்டில் திரிந்து பின் சுய நினைவு பெறும் என்று சாபமிட்டார்.

காட்டில் சுற்றித் திரிந்த அந்த வெள்ளை யானை இந்திரனால் உருவாக்கப்பட்ட கடம்பவனம் அடைந்தது. அதற்குள் நூற்றாண்டுகள் கழிந்ததால் தன்னுடைய சாபம் நினைவில் வர பொற்றாமரை தடாகத்தில் நீராடி தனது சுய உருவு பெற்றது. தனது துதிக்கையால் பொற்றாமரை தீர்த்தத்தை முகர்ந்து ஈசனுக்கு அபிஷேகம் செய்து பொற்றாமரை மலரால் பூஜை செய்தது. இதனால் மனமகிழ்ந்த ஈசன் வேண்டிய வரமளிப்பதாக கூறினார்.

ஐராவதம் அக்கோயிலை தாங்கும் எட்டு யானைகளுடன் தான் ஒன்பதாவது யானையாக இருக்க அருள வேண்டியது. ஆனால் இறைவனோ தன்னிடம் அன்புக் கொண்ட இந்தரனிடம் செல்வதே தனக்கு மகிழ்ச்சி தரும் என்று கூறி பல வரங்கள் அளித்தார். பின் வெள்ளை யானை மேற்கு திசையில் ஐராவதபுரம் அமைத்து அதில் ஐராவத்தீர்த்தையும் அமைத்து இந்திரேசன் என்ற சிவலிங்கத்தையும் பிரதிஷ்டை செய்து அன்போடு பூஜை செய்தது வந்தது. பின்பு இந்திரனால் அனுப்பிய தேவர்களுடன் இந்திரலோகம் அடைந்தது.

**பல்லவி**

கருணையை என்னென்று சொல்வேன்

கடம்பவனத் துறையும் கயிலேசனே

**அனுபல்லவி**

துருவசமுனி உன்னை பூசித்து தந்த ஓர்

மலரை மிதித்த வெள்ளையானை சாபம் தீர்த்தோனே

**சரணம்**

சாபம் தீர்ந்தயானை தன் தவறுக்கு வருந்தி

ஐராவதபுரத்தில் இந்திரேசனாக பூசிக்க

தாபம் கொண்ட இந்திரன் தானே அழத்திட

ஆனை அமரலோகம் அடைந்திடச் செய்தோனே

## 3 திருநகரம் கண்ட படலம்

மணவூரில் வசித்து வந்த தனஞ்ஜனயன் என்னும் வணிகன், வியாபார நிமித்தம் சென்று திரும்புகையில் இருட்டிவிட்டதால் கடம்பவன காட்டிலேயே தங்க நேர்ந்தது. அப்போது நான்கு கொம்புகளைக் கொண்ட எட்டு யானைகள் ஒரு விமானத்தை சுமந்து சென்றது. அதனுள் ஒளி வடிவமான சொக்கநாதர் எழுந்தருளி இருப்பதைக் கண்டு வணங்கி மகிழ்ந்தான். அன்று சோம வாரமாகையால் தேவர்கள் நள்ளிரவில் நான்கு ஜாமத்திலும் பூஜை செய்வதைக் நேரில் கண்டு மகிந்தான்.

மணவூர் திரும்பிய தனஞ்ஜனயன் குலசேகர பாண்டியனிடம் தான் கடம்பவனத்தில் கண்டதைக் கூறினான். அன்றிரவு சொக்கநாதரும் சித்தர் வடிவில் மன்னரின் கனவில் தோன்றி, கடம்பவனத்தை அழித்து அதனை நகரமாக நிர்மாணிக்குமாறு கூறி மறைந்தார்.

சொக்கநாதரின் ஆணைப்படி பாண்டிய மன்னன் காடுகளை வெட்டி நிலத்தை செப்பம் செய்து நகரம் அமைப்பதுப் பற்றி ஆராயும் சமயம் சொக்கநாதர் மறுபடியும் சித்தர் வடிவில் தோன்றி சிவாகம விதிப்படி ஆலயம், மண்டபம், கோபுரம், நகரம் முதலியன அமைக்க வழிமுறைகளைக் கூறி மறைந்தார். பாண்டியனும் சொக்கநாதர் கூறிய படி நகரை உண்டாக்கினான். பின்னர் அந்நகருக்கு சாந்தி செய்ய எண்ணிய சமயம், சோமநாதர் தன் சடையிலுள்ள சந்திரத்தினின்று அமுதத்தைச் சிந்தி அருள அந்நகரம் தூய்மையானது. அவ்வமுதம் நல்ல மதுரமான தன்மை உடைதாக இருந்தமையால் அந்நகரம் மதுரா நகரம் என்று அழைக்கப்பட்டது.

### பல்லவி

தனஞ்ஜயனுக்கு உன் தரிசனமும் தந்துன்னைத்
தேவர்கள் பூஜிக்கும் காட்சியைக் காணச் செய்தாய்

### அனுபல்லவி

கனவில் குணசேகரன் முன் சித்தராக வந்து
கடம்பவனம் மாற்றி நகரமாக்கிடச் செய்தாய்

### சரணம்

சாந்தி செய்திட தன் சடையில் தரித்த
சந்திரனின் புத்தமுதம் சற்றே சிந்தினாய்
காந்தி மின்ன எங்கும் மதுரமானதே
காடும் அழிந்து மதுராநகர் ஆனதே

**4 தடாதகைப் பிராட்டியார் திரு அவதாரப் படலம்**

பாண்டிய மன்னன் மலையத்வஜனுக்கும் காஞ்சனமாலைக்கும் மணமாகி நீண்ட நாட்களாகியும் மகப்பேறு கிட்டவில்லை. அதனால் அஸ்வமேத யாகம் செய்ய எண்ணிய பாண்டியன் தொண்ணூற்றொன்பதையும் முடித்துவிட்டான். இன்னும் ஒன்றைச் செய்தால் தன் இந்திர பதவி பறிபோய்விடுமே என அஞ்சிய இந்திரன் பாண்டியனுக்கு மகப்பேறு பெற்றிட புத்திர காமேஷ்டி யாகம் செய்யுமாறு கூறினான். அதன் படி பாண்டிய மன்னனும் யாகம் செய்ய யாக குண்டத்திலிருந்து மூன்று தனங்களைக் கொண்ட மூன்று வயதுடைய ஓர் பெண் குழந்தை காஞ்சனையின் மடியில் வந்து அமர்ந்தது.

காஞ்சனை அக்குழந்தையை அங்கையர்கண்ணி என்று அழைத்தாள். அக்குழந்தைக்கு மீனாக்ஷி என்ற மற்றொரு பெயருண்டு. மீன் எப்போதும் கண் இமைப்பதில்லை. தன் குஞ்சுகளுக்கு தன் கண்களாலேயே இரையூட்டும். அது போல் அழகிய கண்களையுடைய இவள் தான் கண்யிமைக்காமல் தன் மக்களை பாதுகாக்கிறாள்.

பராசக்தியே மகளாக வந்ததை அறியாத பாண்டியன், மகனுக்குப் பதில் மகளாக இருப்பதோடல்லாமல் குழந்தைக்கு மூன்று தனங்கள் இருப்பதை எண்ணி வருந்தினான்.

அப்போது ஓர் அசரீரி மகள் என்று வருந்தாமல் மகனைப்போல் எல்லா சடங்குகளும் செய்து வளர்க்குமாறு கூறியது. மேலும் தடாதகை எனப்பெயரிட்டு முடியும் சூட்டுமாறும், அவளுக்கு தன் மணாளனின் தரிசனம் ஏற்ப்பட்டதும் அவளது மூன்றாவது தனமும் மறையும் என கூறியது.

மலையத்வஜன் அவ்வாறே அம்மைக்கு எல்லா சடங்குகளும் செய்து முடிசூடினான். இவ்வாறு கன்னிப் பருவத்திலேயே தடாகைப்பிரட்டியார் நல்லாட்சி புரிந்ததால் பாண்டிய நாடு கன்னி நாடு எனப்பெயர் பெற்றது.

**பல்லவி**

மகப்பே றின்றித் தவித்த மலையத்வஜனுக்கு

மகளாய் மகேஷ்வரியை அவதரிக்கச் செய்தாய்

**அனுபல்லவி**

மகள்தானே என நினைத்து மனங் கலங்கிடாமலே

மகனாகக் கொண்டவளை வளர்த்திடச் சொன்னாய்

**சரணம்**

தனம் மூன்றுடைய தடாதகையின் தந்தையிடம்

தகுந்த மணாளனின் தரிசனம் கண்டதுமோர்

தனமும் அந்தக்கணமே மறைந்திருடும் என்றுசொல்லி

கன்னிக்கே முடிசூட்டி உன்னடி அடையச் செய்தாய்

**5 திருமணப் படலம்**

தடாகைப்பிரட்டியார் மனுநூலில் உரைத்தப்படி நல்லாட்சி செய்து வந்தாள். அவள் திருமணப் பருவம் அடைந்ததும் அவள் தாய் காஞ்சனமாலை கவலைக் கொண்டாள். தகுந்த காலம் வரும் போது திருமணம் தானே நடக்கும் என்று தாயிற்கு நல்ல வார்த்தைக் கூறி தன் **திக்விஜயத்தை** தொடங்கினாள். தன் படையுடன் எல்லாத் **திக்கிற்கும்** சென்று வென்று, **தேவலோகம்** உள்ளிட்ட எல்லா இடங்களையும் வென்று கையிலாயம் அடைந்தாள்.

கையிலாயம் அவள் வந்ததை **சிவகணங்கள் நந்தி** தேவரிடம் கூறினர். நந்தி சிவகணங்களை தடாகைப்பிரட்டியாரிடம் போரிடுமாறு கூறினார். அவளிடம் சிவகணங்கள் தோற்றன. நந்தி தேவர் சிவபிரானிடம் நடந்தவற்றைக் கூற சிவபெருமானே போர்களம் அடைந்தார். அங்கு பிராட்டியார் பெருமானைக் கண்டாள். அவள் உள்ளத்தில் நாணம் மேலிட அவள் மூன்றாம் தனமும் மறைந்து. அச்சமயம் மந்திரி **சுமதி** அசரீரியின் வாக்கினை நினைவுக் கூர்ந்தார்.

உடனே அம்மைக்கு அவரே தன் மணாளன் என்பதை உணர்ந்தாள். சோமவாரத்தில் நல்ல முகூர்த்தத்தில் மதுரையில் அவளை மணமுடிப்பதாகக் கூறினார் ஐயன். குறித்த நன்னாளில் திருமால், ப்ரம்மா மற்றும் முப்பத்து முக்கோடி தேவர்களுடன் மதுரை மாநகர் அடைந்தார். அச்சமயம் காஞ்சனமாலை பெருமானை அடைந்து தடாதகைப் பிராட்டியாரை மணப்பதுடன் பாண்டிய நாட்டையும் ஆள வேண்டும் என விண்ணப்பித்தாள்.

பொன்னாலும் மணியாலும் அலங்கரிக்கப்பட்ட மணி மண்டபத்தில் **ப்ரம்மா** தீ வளர்த்து நான்கு வேதங்கள் ஓத, வேத முறைப்படி சடங்குகளை செய்து வைத்தார். சங்கங்கள் முழங்க முரசுகள் ஒலிக்க திருமால் நீர்வார்த்து பிராட்டியாரை பெருமானுக்கு தாரை வார்த்துக் கொடுத்தார். சிவபெருமான் தடாகைப்பிரட்டியாருக்கு மங்கல நாணைப் பூட்டினார்.

**சுந்தரபாண்டியன்** என்ற பெயர் கொண்டு சிவபெருமான் மதுரை நகரை அரசாண்டார்

**பல்லவி**
உலகம் யாவையும் வென்று உந்தன்
கயிலை வந்த டைந்தாள் தடாதகை
**அனுபல்லவி**
மலர்ந்த முகத்துடன் வந்த உன்னைக் கண்டதும்
மங்கை கொங்கை மறைந்த மர்மம்கண்டாள் மந்திரி சுமதி
**சரணம்**
காஞ்சனமாலை தன் பெண்ணையும் மதுரை
மண்ணையும் ஏற்கச் சொல்லி உன்னை இறைஞ்ச
வாஞ்சையாய் திருமாலும் தாரை வார்க்கத் திரு
மாங்கல்ய தாரணம் செய்தாய் தடாதகைக்கு

## 6 வெள்ளியம்பலத்தில் திருக்கூத்தாடிய படலம்

தடாதகைப்பிராட்டியாரை சுந்தர பாண்டியனாய் சிவபெருமான் திருமணம் முடிந்த பின்னர் திருமணத்திற்கு வந்த அனைவரையும் விருந்துண்ண அழைப்பட்டனர். அச்சமயம் **பதஞ்சலி முனிவரும் வியாக்ரபாதரும்** பெருமானின் திருநடனத்தை தரிசித்த பின்னரே உண்பது தான் நியமம் எனக்கூறி மறுத்து விட்டனர். உடனே சிவபெருமாளும் அங்கேயே மதுரையம் பதியில் ஆடிக்காட்டுவதாக வாக்களித்தார்.

**இந்திரனின் விமானத்தில்** ஓர் **வெள்ளியம்பலமும்**, அதனுள் ஓர் **மாணிக்கப்பீடமும்** தோன்றியது. **திருமால்** இசைக் கருவி இசைக்க **நந்திதேவர்** மத்தளம் அடிக்க, **நாரதரும், தும்புருவரும்** இசை பாட, **ப்ரம்மா** யாழில் சாமவேதம் ஓத தம் பத்து கரங்களிலும் ஆயுதங்கள் தாங்கி தத்தோம் தத்திதோம் என உமையாளை நோக்கி புன்னகைத்து களி நடனமாடினார் . பின்பு முனிவர்களின் விருப்பப் படி, அக்கோலத்தைக் கண்டவர்களுக்கு பிறவாவரமும் தந்து, அத்தலத்தில் நடராஜர் கோலத்துடனேயே நின்று அருளினார்.

**பல்லவி**
திருநடனம் செய்தாய் வெள்ளியம் பலத்தில்
பதஞ்சலியும் வியாக்ர பாதரும் வேண்ட
**அனுபல்லவி**
திருமால் இடக்கைமுழங்க நந்தி மத்தளமடிக்க
நாரதர் இசைபாட நானிலம் போற்றிட
**சரணம்**
பத்துக்கைகளிலும் பற்பல ஆயுதமும் தாங்கி
சுத்த வெண்ணீறுபூசி சுத்திய அரவமுடன்
தத்தைமொழியாளை நோக்கி மெத்தவே புன்னகைத்து
தத்தித்தோம் என்றாடி முக்தித‌னைத் தந்தாய்

## 7 குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

சுந்தரருக்கும் தடாதகைக்கும் திருமணம் முடிந்த பின்னர் முனிவர்கள், அரசர்கள், வேதியர்கள் அனைவரும் அமுதுண்டு மகிழ்ந்தனர். அன்னை ஐயனை அணுகி, முப்பத்து முக்கோடி தேவகணங்களை முன்னிட்டு சமைத்த பண்டங்கள், இமயமலையளவு மிஞ்சி வீணாகின்றன என்று கூறி வருந்தினாள். உடனே ஐயன் விளையாட எண்ணம் கொண்டு, பக்கத்தில் குடைபிடைக்கும் **குண்டோதரன்** வயிற்றில் **வடவாக்னியைப் புகு**த்தி, அவனுக்கு அசுரப்பசியை உண்டாக்கினார். அன்னையிடம் பசியுள்ள இவனுக்கு ஒரு பிடி சோறு தருமாறும், பின்னர் மிச்சமுள்ளவர்களையும் அனுப்புவதாக கூறினார்.

குண்டோதரன் அன்னத்தை தொட்டதைத்தான் யாவரும் கண்டனர். சமைத்த பண்டங்கள் அனைத்தும் பாத்திரத்துடன் மறைந்தனர். அரிசி,பால், தயிர், நெய், தேன், பழங்கள்,தேங்காய், பணியாரங்கள், பச்சை காய்கறிகள், மற்ற பண்டங்கள் யாவற்றையும் உண்டு தீர்த்தான். மனிதர்களையும் விழுங்கிவிடுவானோ என அஞ்சிய சமையல்காரர்கள் அன்னையிடம் ஓடி வந்து முறையிட்டனர்.

அன்னையும் செய்வதறியாது ஐயனிடம் முறையிட சென்றாள். குண்டோதரன் உண்டது போக மிச்சம் ஏதேனுமிருந்தால் மற்ற கணங்களை அனுப்புவதாக ஐயன் கூறினார். அன்னை குண்டோதரனின் பசியே இன்னும் அடங்கிய பாடில்லை, அப்படியிருக்க மற்ற கணங்களை அனுப்பினால், அவர்கள் இந்த உலகத்தையே விழுங்கி விடுவார்கள் என்றும், பின் ஐயருக்கு காலருத்திரர் என்ற பெயர் நிலைத்துவிடும் என்றாள். அச்சமயம் குண்டோதரனும் அங்கு வந்து இமயமலையளவு அன்னம் உண்டும் தன் பசி அடங்கவில்லையே என்று முறையிட்டு தன்னைக் காக்கும் படி கண்ணீர் விட்டு அழுதான்.

**பல்லவி**

சமைத்தப்பண்டம் வீணாவதாக உன்னிடம் சொல்லி
வருந்தித் தவித்தாள் தடாதகை பிராட்டி

**அனுபல்லவி**

அமைதியாக குண்டோதரன் வயிற்றில் வடவாக்கினியை
புகுத்தி அமுதுண்டிட அனுப்பி வைத்தாயே

**சரணம்**

வெட்கம்கொண்ட தேவியிடம் மற்றகணங்கள் உண்ண
மிச்சம் உள்ளதா என்று கேலி செய்தீரே
மட்டில்லா கோரப்பசி தாங்காமல் குண்டோதரன்
கண்ணீர் விட்டே அழுதுத்தவிக்கச் செய்தீரே

## 8 அன்னக்குழியையும் வைகையையும் அழைத்த படலம்

குண்டோதரனின் நிலைக்கண்டு ஐயன், அன்னையை நோக்கி, குறும்பாகச் சிரித்து, **அன்னபூரணியை** எண்ணி நான்கு பக்கமிருந்து **பூமியைக்** கிழித்துக் கொண்டு **நான்கு குழிகளில் தயிரன்னம்** பொங்கி எழுந்து. ஐயன் பசியார உண்ணுமாறு அருளினார்.

குண்டோதரன் **மூச்சுக் கூட** விட முடியாமல் வயிரார உண்டு களைத்து பூமியில் வீழ்ந்தான். இப்போது தாகம் அவனைப் பற்றிக் கொண்டது. **கிணறு, குளம், குட்டை** இவற்றிலுள்ள நீர் அனைத்தையும் குடித்தும் அவன் தாகம் தணியவில்லை. தாகம் தீராமல் தவித்த குண்டோதரன் ஐயன் பாதத்தில் வீழ்ந்து அலறினான்.

உடனே சோமசுந்தர கடவுள் தம் **திருமுடியிலிருக்கும் கங்கையை** மதுரை மாநகர் நோக்கி விரைந்து வருமாரு கட்டளையிட்டார். கங்கையும் தன்னிடத்து வருவோர் மூழ்கினாலும், தீண்டினாலும் அவர்கள் வினையகல அருள வேண்டி கனவேகத்துடன் நதி வடிவாய் வந்தாள். தவிக்கும் குண்டோதரனிடம் நீரை பருகுமாரு பணித்தார். நீர் அருந்தி தாகம் தணிந்த குண்டோதரன் ஆனந்தமாக இசைப் பாடி கூத்தாடினான். இசைக் கேட்டு மகிழ்ந்த ஐயன் குண்டோதரனை பூதகணங்களுக்கு தலைமை வகிக்கும் பதவியை அளித்தார்.

இந்த கங்கைக்கு குண்டோதரன் கை வைத்துக் குடித்ததால் **வைகை** என்றும், சிவனது சடா முடியிலிருந்து வந்ததால் **சிவகங்கை** எனவும், ஞானத்தை நல்குவதால் **சிவஞான தீர்த்தம்** எனவும், வேகமாக வருவதால் **வேகவதி** எனவும், மதுரையை சுற்றி மாலை போல் வருவதால்
**கிருத மாலை** எனவும் பல பெயர்கள் பெற்றது.

**பல்லவி**
புன்னகையுடன் தேவியை நோக்கி அன்னபூரணி
அருளால் தயிரன்னம் குண்டோதரனுக்குக் களித்தாய்
**அனுபல்லவி**
அன்னமுண்ட குண்டோதரன் அரும் பசியடக்கி
ஆறாத தாகங் கொண்டு அலைந்து திரிந்தான்
**சரணம்**
நங்கை கங்கையை மாநதியாக மதுரையில்
வந்திடச்செய்தாயே சுந்தரேசா
தங்களைப் பணிந்து குண்டோதரனை பூத
கணங்களுக்கே தலைவராக்கினீர்

**9 ஏழுகடல் அழைத்த படலம்**

சோமசுந்தர்ருடன் தடாதகைப்பிராட்டியாரின் திருமணம் முடிந்த பின்னர் **கௌதம முனி**வரிடம் **காஞ்சனமாலை** பிறப்பற்ற நிலையை அடையும் முறையைக் கூறுமாறு வேண்டினாள். பிறப்பற்ற நிலைமையை அடைய உள்ள மூன்று மார்கங்களை அவளுக்கு விளக்கி கூறினார்.

முன் பிறவியில் செய்த நல்ல தவத்தால் லோகநாயகியை மகளாகப் பெற்று, பின் சிவபெருமானையே மருமகனாகப் பெற்ற அவள் பெரும் பாக்கியம் பெற்றவள் என்றார்.

இருப்பினும் முனிவரிடம் **மனம், வாக்கு, காயம்** ஆகிய மூன்றினால் பிறப்பற்ற நிலை அடையும் வழி முறைகளைக் கூறுமாறு வேண்டினாள்

தர்மம் செய்தல், எப்போதும் உண்மையையே பேசுதல், இறைவனை தியானம் செய்தல் மற்றும் ஆசைகளை அடக்குதல் இவை மனத்தைப் அடக்கும் **முதல்** மார்கமாகும்.

எப்போதும் சிவநாமம் ஓதுவது, வேத நூல்களைப் படிப்பது பின்னர் வேள்விகள் செய்வது வாக்கின் மூலம் செயல்ப்படுவது **இராண்டாம் மார்கமாகும்.**

**மூன்றாம்** மார்கத்தில் காயமாகிய அதாவது நமது உடலை வருத்திக் கொண்டு இறைவனை அடையும் முறையை விளக்கினார். யாத்திரை சென்று சிவபெருமானை வழிபட்டு பல புண்ணிய ரதீர்த்தங்களில் நீராடுவது மிகுந்த புண்ணியத்தை சேர்க்கும். மேலும் எல்லா **நதிகளும் ஒன்று சேரும் கடலில் நீ**ராடுவது மிகுந்த பலனை அளிக்கும் என்றார்.

இதனைக் கருத்துடன் கேட்ட காஞ்சன மாலைக்கு கடல் நீராட விருப்பம் உண்டாற்று. தன் விருப்பத்தை மகளிடம் தெரிவித்தாள். தேவியும் சுந்தரமூர்த்தியிடம், தன் தாய்க்கு கடல் நீராடத் தோன்றிய விருப்பத்தை நிறைவேற்றுமாறு வேண்டினாள். ஐயனும் திருவுள்ளம் கொண்டு ஒரு கடலுக்கு பதில் ஏழு கடல்களையும் அழைத்தார். அவர் அழைத்த மாத்திரத்தில் அவை யாவும் மதுரைக்கு வந்தன.

எங்கும் பேரிரைச்சல். மக்கள் கண்களுக்கு கடல்கள் தெரியவில்லை, ஆயின் அதன் ஓசையைக் மட்டும் கேட்டனர். மக்கள் ஊழி காலம் வந்து விட்டதோ என்று பயந்து சுந்தரேசனை காக்கும் படி சரண்ணடைந்தனர்.

உடனே ஐயனும் **ஏழு கடல்களையும்** மதுரை மாநகரின் கீழ்திசையிலுள்ள ஒரு **கிணற்றில்** ஏழு நிறங்களோடு அடக்கினார். அட்டமூர்த்தியான சிவபெருமானுடன் இணைந்து எட்டு வண்ண வான வில்லைப் போல எழிலைப் பெற்றது. கிணற்றில் நீர் நிரம்பி இருப்பதைக் கண்டு மக்கள் மகிழ்ந்தனர். காஞ்சனமாலை தன் பரிவாரங்களுடன் கிணற்றுக்குச் சென்றாள்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு கிழக்கு கோபுரத்திற்கு எதிரேயுள்ள புதுமண்டபத்திற்கு அருகிலுள்ள தெரு **ஏழு கடல் தெரு** என்ற பெயரில் இன்றும் உள்ளது.

**பல்லவி**
காஞ்சனமாலையும் கௌதர் சொல் கேட்டு
கடல் நீராட ஆசை கொண்டாள்
**அனுபல்லவி**
வாஞ்சயுடன் தாய்க்கு வைகையைப் போல் கடலையும்
வரவழைக்க வேண்டினாள் தடாதகை உன்னிடம்
**சரணம்**
ஏழுகடலையும் ஓர் வாவியுனுள் வரச் செய்தாய்
எழுந்த பேரொளியும் அடங்கச் செய்தாய்
ஏழுகடல் நிறங்களும் இரண்டரக் கலந்துன்
எட்டுவண்ணம் போல் வாவியும் எழிலைப் பொழிந்தது

## 10 மலையத்துவசனை அழைத்த படலம்

சாஸ்திரத்தில் கணவனது கையையோ, மகனது கையையோ, பசுங்கன்றின் வாலைப் பற்றிக் கொண்டோ புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவது முறையென்று கூறப்பட்டுள்ளது.

இதனை அறிந்த காஞ்சனமாலை தானும் தன் கணவனுடன் நீராட ஆசைக் கொண்டு தன் மகளிடம் முறையிட்டாள். தேவியும், ஐயனிடம் தன் தாயின் ஆசையை நிறைவேற்றுமாறு வேண்டினாள் .

ஐயனும் இந்திரன் மூலம் மலையத்துவஜனை தெய்வவிமானத்தில் ஏழ்கடல் அடங்கிய கிணற்றின் அருகில் வந்திறங்குமாறு செய்தார். புதல்வியைக் கண்ட மலையத்துவஜன் புளகாங்கிதம் அடைந்தான். கணவனைக் கண்ட காஞ்சனமாலை எல்லையில்லா ஆனந்தமடைந்தாள். மலைத்துவஜனும் காஞ்சனமாலையும் அந்தணர் கூறிய அறநெறிப்படி, களிப்புடன் நீராடி, கரை ஏறி, பந்த பாசங்கள் அற்றவர்களாயினர். அம்மையப்பனின் வடிவுக்கண்டு மகிழ்ந்தனர். நீலகண்டமும், நெற்றிக்கண்ணும் கொண்ட சிவ சொரூபத்தை உலகத்தார் கண்டு வியந்தனர்.

மலையத்துவஜனும், காஞ்சனமலையும் ஐயனின் ஆணைப்படி இந்திரனின் தெய்வ விமானத்தில் ஏறி ஹர ஹர என்ற கோஷம் முழங்க சிவலோகம் அடைந்து பிறவா பெருவாழ்வுப் பெற்றனர். தடாதகைப் பிராட்டியார் தன் பெற்றோருக்கு நற்கதி காட்டியதற்காக நன்றி தெரிவித்து நம் வம்சவிருத்திக்கு அருள் வேண்டினாள்.

**பல்லவி**
கணவனோ மகனோயின்றி கன்றின் வாலைப் பிடித்தே
கடல் நீராட கலங்கினாள் காஞ்சனை
**அனுபல்லவி**
கணமே ஏழ்கடல் வாவிக்கரையில் மலையத்துவஜன்
காஞ்சனமாலையும் நீராட கடுகி வரச் செய்தாய்
**சரணம்**
கணவன் கைப்பற்றியே கடல் நீராடி உன்
காட்சியையும் அவள் காணச் செய்தாய்
கணவனுடன் அவள் கனக விமானந்தன்னில்
கயிலை யடைந்திட கருணை செய்தீரே

## 11 உக்கிர பாண்டியன் திருஅவதாரப் படலம்

மலையத்துவஜனுக்கு பிறைசூடிய பெருமான் மருமகனாய் வந்து நாட்டில் நல்லாட்சி நடத்தும் சமயம் தடாதகைப் பிராட்டியின் விருப்பத்திற்கு இணைங்கி, தன் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய முருகப்பெருமானையே தடாதகையின் கருவில் உதிக்கச் செய்தார். தங்கச் சிலையையொத்த குமரனை ஈன்ற பிராட்டியார் அகமகிழ்ந்தாள். தேவர்கள், முனிவர்கள், நாட்டின் மக்கள் யாவரும் குழந்தையின் அழகைத் கண்டு வியந்து மகிழ்ந்துக் கொண்டாடினர். நாடு விழாக் கோலம் பூண்டது.

இந்திரன், வருணன், மலையரசன் முதலியோர் அச்சம் கொள்ளும் ஆற்றல் படைத்ததின் காரணத்தினால் குழந்தைக்கு உக்கிரவர்மன் என்று சுந்தரபாண்டியன் பெயர் சூட்டினார். ஐந்துவயதிலேயே பூணூல் விழாவையையும் முடித்தார். வியாழ பகவானை குருவாக்கி சகலகலை களையும் பயிற்றுவித்தார். பெற்றோரும் மற்றோரும் மகிழ எட்டு வயதிலேயே யாவையும்கற்றுணர்ந்த பண்டிதரானான் உக்கிரவர்மன். பதினாறாம் வயதிலேயே முப்பத்திரண்டு லக்ஷணங்களும் பொருந்திய குமரனாக திகழ்ந்தான்.

இத்தருணத்தில் அவன் நல்லாட்சி செய்வான் என்று உணர்ந்த சுந்தரபாண்டியன், உக்கிரவர்மனுக்கு முடிசூட்டுவதற்கு முன், திருமணம் செய்ய எண்ணி, மந்திரி சுமதியுடன் ஆலோசனை செய்தார்.

**பல்லவி**
குலம் விளங்க உன்னைத் தடாதகை வேண்ட
குமரனே திருஉருவில் கருவாய் இலங்கச் செய்தாய்
**அனுபல்லவி**
நலம் மிகுந்த பாலன் உக்ரவர்மனுக்கு
நற்கலைகள் பயில வியாழனை அமைத்தீர்
**சரணம்**
முப்பத்திரண்டு லக்ஷணம் கொண்டு
மூவுலகம் போற்றும் சிறப்புடன் விளங்க
முப்புரிநூல் அவனுக்கு முறைப்படி செய்து
முடிசூடும் முன்னே திருமணம் செய்ய எண்ணினீர்

**12 உக்கிர பாண்டியனுக்கு வேல், வளை, செண்டு கொடுத்தப் படலம்**

வேத முறைப் படி உக்ரவர்மனுக்கு தன் மகள் காந்திமதியை தாரைவார்த்துக்கொடுத்தான் மணவூரின் மன்னனான சோமசேகரன்.

சிறிது காலம் சென்றபின் சுந்தரர் உக்ரவர்மரிடம் **வேல், வளை, செண்டு** மூன்றையும் கொடுத்தார். மதுரையை கடல் ஆட்கொள்ளும் சமயம் இந்த வேலை  கொண்டுத் தாக்கினால் கடல் உள்ளடங்கும் என்றும், இந்திரன் உக்ரவர்மனிடம் கொண்ட பொறாமையால் இடைஞ்சல் செய்யும் போது வளைக் (சக்கரம்) கொண்டு அவன் மகுடத்தில் தாக்கினால் அவன் அடங்குவான் என்றும், மலையரசன் அகங்காரம் கொண்டு தாக்கும் பொழுது செண்டினால் (கதை) அடிக்குமாறும் கூறினார்.

உக்கிரமனும் தந்தையை வணங்கி மூன்றையும் பெற்றுக் கொண்டான்.

ஓர் நன்னாளில் முடிசூடிய பின்னர் சிவகணங்களுடன் தன் வடிவம் தாங்கி, தடாதகைப் பிராட்டியுடன் திருக்கோயிலுள் சென்று, திருகொலுவீற்றிருந்து அருளினார்.

**பல்லவி**
சோமசேகரன்கனவில்மகள்காந்திமதியை
உக்ரவர்மனுக்குமணம்செய்திடச்சொன்னாய்
**அனுபல்லவி**
மாமதுராநகரில்தேவரும்மூவரும்
யாவரும்மகிழ்ந்திடதிருமணம்நடந்தது
**சரணம்**
திருமுடியும்உக்ரவரமனுக்குச்சூட்டிகடல்
அரசனையும்இந்திரனையும்எதிர்க்கவேல்வளையம்தந்தாய்
மேருவைஎதிர்க்கசெண்டும்கொடுத்துப்பின்
திருக்கோயிலினுள்சென்றுகொலுவீற்றிருந்தாய்

**13 கடல்வற்றவேல்விட்டபடலம்**

உக்கிரவர்மன் சிறப்புடன் ஆட்சி செய்யும் தருணம் தொண்ணூற்றாறு அச்வமேதயாகம் செய்து முடித்தார். இதை அறிந்த இந்திரன், மன்னன் மீது பொறாமைக் கொண்டு ஊழிக்காலத்தில் கடலைப் போல பொங்கி மதுரையை அழிக்கும்படி கடல் அரசனான வருணனை ஏவினான். பின் விளவை அறியாத வருணனும், பெரு வெள்ளமாய் மதுரையை அழிக்கவந்தான். எதனையையும் அறியாத ஆழ்ந்த நித்திரையிலிருக்கும் மன்னர் கனவில், சித்தர் வடிவில் தோன்றிய அம்பலவாணர், நகரை அழிக்கும் நோக்கமுடன் கடலானது பொங்கி வருவதை கூறி, வேல் படையை எறிந்து அடக்குமாறு கூறினார்.

உடனே அமைச்சர்களுடன் அங்கு சென்று மன்னர் வியந்து நிற்கையில், ஐயன் மீண்டும் சித்தர் வடிவில் தோன்றி, காலம் தாழ்த்தாமல் விரைந்து வேல் படையை எறிந்து உலகை விரைந்து காக்கும்படி அருளினார். அதன் படி உக்ரவர்மனும் வேலை வலப்புறமாக சுழற்றி எறிந்தான். அதன் கூர்முனைப் பட்டவுடன், கடல் நீர் வற்றியது. இந்திரனின் சூழ்ச்சி தோற்றது.

சித்தர் மறைந்து உமாதேவியுடன் ரிக்ஷபவாகனத்தில் சிவனாககாட்சி அளித்து திருக்கோயில் புகுந்து அருளினார்.

உக்கிரமவர்மன் கடலுக்கும் மதுரை நகருக்கும் இடையிலுள்ள ஊர்களை தெய்வத்திற்கு உரிமையாக்கி நல்லாட்சி புரிந்துவந்தான்.

**பல்லவி**
யாகம்பலசெய்தஉக்ரவர்மன்மீது - பொ
றாமைக்கொண்டஇந்திரன்மாநகரைஅழித்திடவே
**அனுபல்லவி**
வேகமாய்நள்ளிரவில்கடலைப்பொங்கச்செய்து
விரைவில்அழிக்கச்சொன்னான்வருணனிடம்
**சரணம்**
கனவில்சித்தராய்வந்துகடல்மீது
வேற்படையைஎறியச்சொன்னாய்உக்ரவர்மனிடம்
தனயனுக்குஉன்தரிசனமும்தந்து
திருக்கோயிலினுள்சென்றுகொலுவீற்றிருந்தாய்

**14 இந்திரன்முடிமேல்வளைஎறிந்தபடலம்**

உக்ரவர்மன்செங்கோல்செலுத்திவரும்காலத்தில், மழையின்றி பயிர்கள் கருகின. சேர, சோழ, பாண்டிய மூன்று நாடுகளும் வறுமையில் வாடிவதங்கின. \

மூவேந்தர்களும் அகத்திய முனிவரிடம் சென்று, நாட்டின் நிலைமையைக் கூறினர். கிரகங்களின் இடம் சரிவர அமையாததால் தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் வாடநேரிடும் என்றும், இதைத்தவிர்க்க, மழையை பொய்விக்கும் இந்திரனிடத்துச் சென்று வேண்டுமாறு கூறினார்.

மூவேந்தரும் இந்திரனுக் காண எவ்வாறு விண்ணுலகம் செல்வது என்று வினவ, சோமவார விரதமிருந்து, வெள்ளியம் பலத்தானின் திருவருளைப்பெற்று, விண்ணுலகம் செல்லலாம் என்று கூறி, இவ்விரதத்தை அனுஷ்டிக்கும் முறையையும் கற்பித்தார் அகத்தியர். அவர் கூறியபடி மூவேந்தரும் பொற்றாமரைக் குளத்தில் நீராடி, சோம வார விரதத்தை அனுஷ்டித்தனர்.

அவ்விரத்தின் பயனைப் பெற்று ஆகாய மார்க்கமாகப் புறப்பட்டுச் இந்திரலோகம் சென்றனர்.

இதனை அறிந்த இந்திரன், மூவரும் அமர தனது சிங்காசனத்திற்கு தாழ்த்திருக்குமாறு மூன்று ஆசனங்களைப் போட்டுவைத்தான். சேரனும், சோழனும்அவரவர்ஆசனங்களில்அமர,பாண்டியன் மட்டும் இந்திரனுடைய சிங்கானத்தில் ஏறி, அவனோடு சரிசமமாக அமர்ந்தான்.

இந்திரன் பாண்டியனிடத்துப் பொறாமைக்கொண்டான். சேர, சோழ, மன்னர்கள் வந்த விவரம் கேட்டு அவர்களின் நாடுகளுக்கு மட்டும் மழை பெய்ய அருளி, அவர்களுக்கு பரிசும் கொடுத்து அனுப்பினான்.

இதுவரை பேசாதிருந்த உக்ரவர்மனுக்கு, பல கிங்கரர்களாலும் சிரம்பட்டே தூக்கமுடிந்த முத்தாரம் ஒன்றை அளித்தான். பாண்டியனும் அதனை மலர் மாலையைப் போல் தனது கழுத்தில் எளிதாக எடுத்து அணிந்துக் கொண்டான். இந்திரன் வியப்படைந்து பாண்டியனை இன்று முதல் உலகம் 'ஆரம் தாங்கும் பாண்டியன்' என்று புகழ்ந்தான். இதனைப் பொருட்படுத்தாமல் பாண்டியன் மதுரை வந்தடைந்தான்.

சேர, சோழநாடுகளில் மட்டும் இந்திரன் அருளால் மழைப் பொழிந்து நாடுசெழித்தது. பாண்டியநாடுமட்டும்மழையின்றிதவித்தது. பாண்டியன் ஒரு நாள் பொதிகை மலைச்சாரலில் வேட்டையாடும் பொழுது, அங்கிருந்த 'புட்கலாவருத்தம், சங்காரித்தம், துரோகம், காளமுகி 'என்னும் மேகங்களையும் சிறைப் பிடித்தான்.

ஒரு மனிதனுக்கு இவ்வளவு வலிமையா என்று வியந்த இந்திரன், பொறாமைக் கொண்டு மதுரையை சூழ்ந்துக் கொண்டு பாண்டியனுடன் கடுமையாகப் போரிட்டான். கடைசியில் இந்திரன் வஜ்ரபடையைத் தொடுக்க, பாண்டியன், தன் கையிலிருந்த வளையை சுழற்றி விரைந்து வீசினான். அவ்வளை வஜ்ரபடையை வீழ்த்தி இந்திரனுடைய மகுடத்தை தள்ளிச் சிதைத்தது.

நாணம் கொண்ட இந்திரன் பாண்டிய நாட்டிற்கு மழைவளம் தருவதாக கூறி, தன் மேகங்களை விடுவிக்குமாறு வேண்டினான். முதலில் உக்ரவர்மன் இதை நம்பவில்லை. பின் இந்திரனுடைய நண்பன் வேளாளன்  பிணைக் கொடுக்க நான்கு மேகங்களையும் உக்ரவர்மன் சிறைவிடுத்தான்.
பாண்டியநாட்டிலும்மும்மாறிபெய்துபழையபடிநாடுவளம்பெற்றது.

**பல்லவி**
அகத்தியர்சொற்படிசோமவாரவிரதமிருந்து
அமரேசனிடம்சென்றனர்மழைவேண்டிமூவேந்தரும்
**அனுபல்லவி**
நிகராய்உக்ரன்அமரன்அருகிலமர்ந்துஅவன்தந்த
கனமானமுத்தாரத்தைமலர்மாலைப்போல்அணிந்தான்
**சரணம்**
மேகங்களைஉக்ரன்சிறையில்அடைக்கச்செய்தாய்
அமரேசன்மீதுவளைவீசிடச்செய்தாய்
ஏகமாய்உன்னைபூஜித்ததால்இந்திரன்
தலைசிதறாமலேமுடிசிதறச்செய்தாய்

**15 மேருவைச்செண்டால்அடித்தபடலம்**

சோமவார விரத பலத்தால் உக்ரபாண்டியனின் மனைவி காந்திமதி வீரபாண்டியன் என்ற மகனைப் பெற்றாள்.

மீண்டும் நாட்டில மழைவளம் குறைந்து, உயிர்கள் உண்ண உணவின்றித் தவித்தன. சோதிடர்களும் கிரகங்கள் அனைத்தும் சூரியனை நோக்கி நிற்பதால் ஓராண்டிற்கு இந்நிலைமை நீடிக்கும் என்றனர்.

அன்றிரவே சோமசுந்தர கடவுள் உக்ரபாண்டியனின் கனவில் சித்தராகத் தோன்றி, தற்பொழு நிச்சயம் மழை பெய்யாது எனவும், அதனை எண்ணி வருந்தாமல், மேரு மலை அதன் பக்கத்தில் உள்ள குகையில் அளவற்ற செல்வத்தை சேமித்துவைத்துள்ளதாக கூறினார். அதனால் செருக்குக்கொண்டிருக்கும் மேருவை, செண்டால் அடித்து, அந்த பொன்னை வேண்டு மளவு எடுத்துக் கொண்டு அவனது அடையாளத்தை பொறித்து வருமாறுகூறினார்.

அதன் படி உக்ரமன் பல நாடுகளை எல்லாம் கடந்து காசியில் கங்கையில் நீராடி, விசுவநாதர் பெருமானை வணங்கி, மேருவை அடைந்தான். பின்னர் மேருவை வலம் வந்து உடனே தன்முன் வரும்படி அழைத்தான். மேரு காலம் தாழ்த்தியது. கோபம் கொண்ட மன்னன் அதன செண்டாலடித்தான். மேருமலை துடித்து. அருகிலுள்ள மலைகளெல்லாம் நடுங்கின. உடனே மேருவானது எட்டுதோள்களுடனும், நான்குதலைகளுடனும், வெண்குடையுடன் பாண்டியன் முன் தோன்றியது. மேரு மலையானது தான் ஒரு பெண்ணின் மயக்கத்தால், அம்மையப்பனை தினமும் வணங்குவதை மறந்ததால் தான், இந்நிலையை அடைந்ததாகக் வருத்தத்துடன் கூறி, இதற்கு கைமாறாக அங்கிருக்கும் அளவற்ற பொன்னை அளித்தான். சித்தர் கனவில் கூறியபடி பொன்னை வேண்டுமளவு எடுத்துக்கொண்டு, அங்கு தன் அடையாளத்தை குறியிட்டு தன் நாடு வந்தான் பாண்டியன்.

மதுரை வந்த பாண்டியன் பொன்னை மக்களுக்கெல்லாம் வாரிவாரி வழங்கி அவர்களின் கஷ்டங்களை நீக்கி சுகமாய் வாழ்ந்து வந்தான். சிறிது காலம் சென்ற பின் மழை பெய்து நாடும் மீண்டும் பழைய நிலைமைக்கு வந்தது.

உக்கிரபாண்டியன் தன் மகன் வீரபாண்டியனுக்கு முடி சூடினான்.

**பல்லவி**
சோமவாரவிரதபலத்தால்சுந்தரிகாந்திமதியும்
சயந்தனன்என்னும்வீரபாண்டியனைப்பெற்றாள்
**அனுபல்லவி**
கோமகன்கனவில்மேருவைச்செண்டால்அடித்து
கோரினபொன்னைக்கொண்டுவறுமைநீங்கிடச்சொன்னாய்
**சரணம்**
பொன்னைக்கொண்டுஉக்ரன்மண்ணுயிரையெல்லாம்
தன்னுயிர்போல்காத்துஆட்சிபுரிந்தான்
தன்மகன்வீரபாண்டியனுக்குமுடிசூட்டி
உன்னடியடைந்துஉய்ந்திடச்செய்தாய்

## 16 வேதத்துக்குப்பொருள்அருளிச்செய்தபடலம்

பிரளத்தில் உலகம் அழிந்தபின் சிவபெருமான் திருமாலை உருவாக்கினார். அவர் உடலிலிருந்து ப்ரம்மா படைக்கப்பட்டார். சிவபெருமான் திருவாக்கினின்று பிரணவமும் வேதமும் பிறந்தன.

கண்ணுவர், கருக்கர் முதலான முனிவர்கள் அதன் பொருள் உணராது வேதத்தை ஓதினர். அவர்கள் தவவலிமை மிக்க அரபத்தர் எனும் முனிவரிடம் தங்களுக்கு வேதத்தினை விளங்குமாறு வேண்டினர். அரபத்தர், வேதத்தை அருளிய ஈசனே அதன் பொருளை உணர்த்துவார் என்றும், புண்ய நகரமான மதுரைக்குச் சென்று சோமசுந்தர கடவுளை வணங்குமாறு கூறினார். இருபத்திரண்டு எழுத்துக்கள் கொண்ட மேதாமந்திரத்தை செபித்து பயன் அடையுமாறு கூறி, அம்மந்திரத்தையும் அவர்களுக்கு உபதேசித்து அருளினார்.

கண்ணுவர் முதலானமுனிவர்கள்மதுரையைஅடைந்து, பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடி, கல்லால் ஆன மரநிழலில் எழுந்தருளியுள்ள தட்சிணாமூர்த்தி சன்னதியில் அமர்ந்து, கார்த்திகைபௌர்ணமி முதல் அடுத்த ஆண்டு கார்த்திகை பௌர்ணமி வரை ஓராண்டு காலம் அம்மையப்மனை பூஜை செய்து வழிப்பட்டனர். அதன் பயனாக ஐயன் முப்பத்திரண்டு லக்ஷணங்களும் பொருந்திய பதினாறு வயது நிரம்பிய பிராமணர் குரு வடிவில் காட்சி அளித்தார்.

வேதத்தின் பொருள்கள் மிகவும் ரகசியமானது. அதை அறிந்தால் இம்மைக்கும் மறுமைக்கும் பலன் அளிக்கும். வேதம் கரும காண்டம், ஞான காண்டம் என இரு வகைப்படும். கருமகாண்டம் சொக்கலிங்கத்தின் பூஜா விதிகளை விளக்குகிறது. ஞான காண்டம் சத்சிதானந்த அறிந்து வழியைகூறுகிறது.

வேத பொருள்களை எவரும் அறிந்துக் கொள்வது அரிதானதால், கருமமார்கத்தினாலோ ஞானமார்கத்தினாலோ அறிந்தால் அதுவே வேதத்தை அறிந்ததாகும் என்று கூறி அன்புடன் அவர்கள் முதுகில் தம் கரத்தால் தடவிக்கொடுத்து சிவலிங்கத்துள் சென்று மறைந்தார்.

**பல்லவி**
கண்ணுவரும்கருக்கரும்வேதப்பொருள்ளுணர
அரபத்தர்அருளியமேதாமந்திரம்ஓத
**அனுபல்லவி**
கண்டோர்அதிசயிக்ககல்லாலானமரத்தின்கீழ்
அமர்ந்தகுருமூர்த்தியாய்காட்சியளித்தாய்
**சரணம்**
வேதமும்ஒன்றேவேதப்பொருளும்ஒன்றே
அதுவேபரப்ரம்மம்சொக்கலிங்கம்என்று
வேதமும்அறியாஉன்னைகர்மஞானநெறியில்
கண்டிடலாம்என்றுசொல்லிமறைந்தாய்

**17 மாணிக்கம்விற்றபடலம்**

வீரபாண்டியன் மதுரையை சிறப்பாக ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு குழந்தை பாக்கியம் கிட்டவில்லை. சோமவார விரதத்தின் பலனாகவீரபாண்டியன் என்ற ஒரு சத்புத்திரனைப் பெற்றான்.வீரபாண்டியன் ஓர் நாள் வேட்டையாட சென்றபோது புலிக்கு இரையானான். இத்தருணத்தை சாதகமாக்கிக் கொண்ட பாண்டியனின் உறவினர்கள் அரண்மனையிலிருந்து ஆபரணங்களையும், மணி மகுடத்தினையும் கவர்ந்து சென்றுவிட்டனர்.

அமைச்சர்கள் வீரபாண்டியனின் மைந்தனுக் குமுடிசூட்ட எண்ணி, பொக்கிஷத்தை திறந்து பார்க்கையில், மகுடத்தைக் காணவில்லை. மற்றொன்று செய்வதற்கும் வேண்டிய பொன்னும் மணியும் இல்லாததால் திகைத்துநின்றனர்.

அமைச்சர்கள் வீரபாண்டியனின் புதல்வரையும் தம்முடன் அழைத்துக்கொண்டு சோமசுந்தர கடவுளைக் காண கோவிலுக்குள் சென்றனர். அப்போது ஈசனே, முத்தும், மணியும், பவளமும், இரத்தினங்களும் ஆபரணமாகத் தரித்து, நவரத்தின வணிகர் வேடம் தாங்கி, அவர்கள்முன்தோன்றிகுறைகளைக்கேட்டறிந்தார். பின் தான் கொண்டு வந்த வல்லாசுரனின் உடலின்உருப்புகளிருந்து தோன்றிய நவரத்தினங்களை கொடுத்து அருளி, வல்லாசுரனின் கதையையும் கூறினார்.

ஒரு சமயம் வலன் என்ற அசுரன் சிவபெருமானிடம், போரில் எவராலும் வெல்ல முடியாத வரத்தையும் தான் இறந்த பின்த ன் உடல் நவரத்தினங்களாக வேண்டும்எ ன்ற வாரத்தையும் பெற்றான். பின் இந்திரனுடன் போரிட்டு அவனைவென்றான்.

இந்திரன் வலனை சூழ்ச்சியால் வெல்ல எண்ணம் கொண்டான்.

வல்லனிடம் இந்திரன் சென்றபோது வலன் இந்திரனிடம் என்ன வரம் வேண்டும் என்று கேட்டான். பதிலுக்குஇந்திரன், தான் செய்ய விருக்கும் யாகத்திற்கு வலன் பசுவாக வரவேண்டும் என்று வேண்டினான். அதன் படி வலன் பசுவாகி வந்தான். யாகத்தில் இட்ட வல்லனின் உடல் இரத்தினங்களாக மாறின. அதனைக் கொண்டு மகுடம் செய்துமுடிசூட்டும்படிகூறியருளினார். அவனுக்கு அபிஷேகபாண்டியன் எனபெயரிடுமாறும் கூறினார். இவ்வாறு கூறிய ஈசன் ரிஷப வாகனத்தில் உமாதேவியுடன் காட்சியளித்து லிங்கத்துக்குள் மறைந்தார்.

அபிஷேக பாண்டியன் பல்லாண்டு நல்லாட்சி புரிந்து வாழ்ந்தான். சிறிது காலம் சென்றபின் பழைய பொக்கிஷமும் கிடைத்தன.

**பல்லவி**
புலிக்குஇரையாகியபொன்னுலகம்அடைந்த - வீர
பாண்டியனின்பொற்கிரீடம்களவானதே
**அனுபல்லவி**
நலிந்துஉன்னைச்சரண்அடைந்தமந்திரிகள்முன்
நவரத்தினவணிகனாய்வந்தாய்
**சரணம்**
இந்திரன்வலனைச்சூதால்பசுவாகமாற்றி - வதைக்க
அவன்உடல்நவரத்தினமாய்உன்அருளால்மாற
வந்தமணிகளால்மகுடம்செய்துமுடிசூட்டி
அபிஷேகமன்னன்என்றுபெயரிடச்செய்தாய்

**18 வருணன்விட்டகடலைவற்றச்செய்தபடலம்**

அபிஷேக பாண்டியன் சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில், சோமசுந்தர்ருக்கு வாசனை மிகுந்த பச்சைக் கற்பூர நீரால் நீராட்டி, கற்பூர சுந்தரர் என்று சொல்லிமகிழ்ந்தான்.

ஒரு சமயம் வாட்டமடைந்துள்ள இந்திரனிடம் வருணன் அதற்கான காரணம் கேட்டான்.

அதற்கு இந்திரன், சோமசுந்தரை பூஜிக்க, அபிஷேக பாண்டியன் பூஜித்து முடிக்கும் வரைதான் காத்திருக்க வேண்டியிருப்பது தமக்கு வருத்தை அளிப்பதாக கூறினான். இந்திரனிடம் இந்த லிங்கத்தை விடுத்து வேறு லிங்கத்தை வழிபட யோசனைக் கூறினான் வருணன். இந்திரன் தன்னுடைய பிரம்மஹத்தி தோஷத்தையும், வெள்ளை யானையின் சாபத்தையும் நீக்கியதால் தான் இச்சிவலிங்கத்தையே வணங்குவதாகக் காரணத்தை கூறினான்.

அப்படியானால் எவராலும் நீக்க முடியாத தன்னுடைய வயிற்று வலியை தீர்க்க ஈசனால் முடியுமா என்ற கேள்வியை எழுப்பினான் வருணன். இந்திரன் அதற்கு பிறவி நோயையே தீர்க்க வல்லவரான ஈசனால் முடியாதது உண்டோ? என்றான்.

ஐயனை சோதித்துப் பார்க்க எண்ணம் கொண்ட வருணன், கடலை அழைத்து மதுரையை அழிக்குமாறு ஏவினான். ஊழிகாலம் போல் கடலானது பொங்கி மதுரையை சூழ்ந்தது. பயம் கொண்ட மக்கள் மன்னனிடம் தஞ்சம் அடைந்தனர். மன்னனும் சுந்தரேசனை வேண்ட, தன் சடா முடியில் இருக்கும் நான்கு மேகங்களையும், மதுரையை அழிக்க வரும் கடலை வற்றும்வரை பருகும்படி கட்டளையிட்டார். அம்மேகங்களும் நீரைக் குடிக்க ஐயனின் திருவிளையாடலை எண்ணி யாவரும் மகிழ்ந்தனர்.

**பல்லவி**
பாண்டியனுக்குப்பின்உன்னைத்தான்பூஜிப்பதால்
நேரமாவதைச்வருணனிடம்சொல்லிவருந்தினான் - இந்திரன்
**அனுபல்லவி**
வேண்டிப்பூஜைபுரியவேறுலிங்கமில்லையோஎன்ற
வருணனிடம்உன்மகிமையைசோதித்தறியச்சொன்னாய்
**சரணம்**
கண்டோர்அஞ்சகடல்பொங்கச்செய்தான் - வருணன்
கலங்கினபாண்டியன்உன்காலைப்பிடித்திறைஞ்ச
தன்சடையினின்றுமேகம்நான்கினையும்அனுப்பிகடல்
தண்ணீர்அனைத்தையும்பருகிடச்செய்தாய்

## 19 நான்மாடக்கூடலானபடலம்

சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலை அறியாத கடலின் தலைவனான வருணன் அளவிலாத கோபம் கொண்டு, இடி யிடித்து பெரு மழை பொழியச் செய்தான். பாண்டியன் மக்கள் புடைச் சூழ ஈசனின் மலரடியில் வீழ்ந்தான்.

சோமசுந்தரக் கடவுள் தனது சடா முடியிலிருந்து மேகளையும் நான்கு மாடங்களாக்கி இடைவெளியின்றி மதுரை மாநகர் முழுவதையும் மூடிக்கொள்ளும் படி செய்தார். மக்கள் அனைவரும் மழையின் பாதிப்பின்றி இன்பக்கடலில் ஆழ்ந்தனர்.

தன்னுடைய தவற்றை உணர்ந்த வருண தேவன் பொற்றாமரை குளத்தில் நீராடி சோமசுந்தரக் கடவுளை முறையோடு பூஜித்து, இந்திரனின் கட்டளையால் தான் இவ்வாறு செய்ததாக் கூறினான். அவனது பூஜையில் மகிழ்ந்த ஈசன் அவன் வேண்டும் வரத்தை வினவ, தன்னுடைய பிழைகளை மன்னித்து, தன் வயிற்றுவலியை நீங்க அருள வேண்டினான்

ஈசனிடம் வரம் பெற்ற வருணன் வயிற்றுவலி நீங்கி மகிழ்ச்சியுடன் தன்னுடைய நகரமடைந்தான்

நான்கு மேகங்களும் நான்கு மலைகளைப் போல் வளர்ந்து நின்றன. அன்று முதல் மதுரை மாநகர் நான்மாடக் கூடல் எனஅழைக்கப்பட்டது.

**பல்லவி**
கோபம்கொண்டவருணன்ஏழுமேகங்கொண்டுகடலை
வற்றச்செய்தபின்மழைபெய்துமதுரையைஅழிக்கச்சொன்னான்
**அனுபல்லவி**
தாபமகற்றிடவேநான்குமேகத்தால்மதுரையைச்சுற்றி
மாடங்களாக்கிநகரைநான்மாடக்கூடமாக்கினீர்
**சரணம்**
நாணம்மிகுந்தவருணன்பொற்றாமரைக்குளத்தில்,
ஸ்நானம்செய்துதன்வயிற்றுநோய்நீங்கிட
காணகளிப்புடனேஉன்னைப்பூசித்தவனுக்கு
காட்சியளித்துகருணைசெய்தாய்

**20 எல்லாம் வல்ல சித்தரான படலம்**

அபிஷேக பாண்டியனும் அந்நாட்டு மக்களும் இம்மையிலும் மறுமையிலும் எல்லாப் பயனையும் பெற்றிட சோமசுந்தரக் கடவுளிடம் வேண்டினர். அவர்களுக்கு அருள திருவுள்ளம் கொண்ட ஈசன் ஓர் அழகிய சித்தர் வடிவு எடுத்து காண்போர் அதிசயிக்க தக்க சித்து வேலை செய்து வந்தார். மண்ணை பொன்னாக்குதல், முதியவனை இளைஞனாக்குதல், இளைஞனை முதியவனாக்குதல், ஊனத்தினை குணம் செய்தல், சிறுவர்களை முதியோர் ஆகுதல், மலடிக்கு மகப்பேறு அடையச் செய்தல், செல்வம் உடையவரின் செல்வங்களை ஏழைகளின் இல்லத்தில் சேர்த்தல் என பல சித்து வேலகளை செய்தார்.

இவற்றை கேள்வியுற்ற அபிஷேக பாண்டியன், சித்தரை அரச சபைக்கு அழைத்து வருமாறு ஆணையிட்டார். அழைத்து வரச் சென்ற அமைச்சர்களிடம் அரசனால் தனக்கு ஆவது ஏதுமில்லை என்று கூறி வர சித்தர் மறுத்துவிட்டார். அமைச்சர்கள் இதனை மன்னனிடம் கூற, இம்மை மறுமை பயனை வெறுத்த யோகிகள் இந்திரன், ப்ரம்மன், திருமால் இவர்களையே மதிக்க மாட்டார்கள், அப்படியிருக்க பூமியை ஆளும் மன்னர்களையா மதிக்கப் போகிறார்கள் என்று எண்ணினான் மன்னன்.

**பல்லவி**
அபிஷேகபாண்டியன்ஆண்டபொற்காலத்தில்
அனைவரும்சுகம்பெறதிருவுள்ளங்கொண்டாய்
**அனுபல்லவி**
அபிலாஷைபூர்த்திசெய்யஅத்புதம்பலசெய்யும்
அருள்மிகுசித்தராய்திருவேடம்கொண்டாய்
**சரணம்**
அத்புதங்களைக்காணஆவல்கொண்டமன்னன்
வித்தகரைவிரைவாய்அழைத்துவரச்சொன்னான்
சித்தருக்குஉலகில்எத்தகையோராலும்
எதுவும்தேவையில்லைஎன்றுஉணர்த்தினீர்

**21 கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்**

தன் அழைப்பை ஏற்று  சித்தர் வராமையால், அபிஷேக பாண்டியன் அவரைக் காண தானே  புறப்பட்டான். அன்று சங்கராந்தி. சோமசுந்தர்ரை தரிசித்து வலம் வருகையில் இறுமாப்புடன் வீற்றிருந்த சித்தரைக் கண்டு அவரது ஊரையும், பேரையும் கேட்டு அவருக்கு வேண்டுவது யாதுஎன்றும் கேட்டான் மன்னன்.

தாம் இருக்கும் தலம் இமயம் என்றும், பிச்சை எடுப்பவர்களே தம் சுற்றத்தார்கள் என்றும், **வித்தைகள்** பல செய்யும் சித்தர் தாம் என்று கூறினார். பாண்டியனிடம் தாம் பெறுவதற்குஒன்றுமில்லை என்று கூறி புன்னகைத்தார்.

சித்தரின் செருக்கைக் கண்ட பாண்டியன், வேளாளன் ஒருவன் கொண்டு வந்துக் கொடுத்த கரும்புஒன்றை சித்தரிடம் அளித்து, அதனை அருகிலிருக்கும் கல்யானையைக் கொடுத்து உண்ண வைத்தால், அவரை எல்லாம் வல்ல சித்தராகக் தான் ஏற்றுக் கொள்ள முடியும் என்றான். பின் அவர் கேட்பது எதுவானாலும் தான் அளிப்பதாக உறுதி கூறினான்.

மன்னனிடமிருந்து தனக்கு வேண்டுவது எதுவுமில்லை என்று கூறியபின், சித்தர் யானையை நோக்க, கல்யானையும் பிளறியபடி கரும்பை கடித்து ருசித்து தின்றது.

மீண்டும் சித்தர் யானையைக் கடைக்கண்ணால் பார்த்ததும், பாண்டியனது கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலையை பறித்து விழுங்கிவிட்டது. மன்னன் சித்தர் மேல் கோபம் கொண்டான். சித்தரை அடிக்க வந்த மெய் காப்பாளர்களை நோக்கி நில்லுங்கள் என்று புன்னகைத்ததும் வீரர்கள் அப்படியே அசைவற்று நின்று விட்டனர்.

சித்தரின் ஆற்றலையுணர்ந்த அபிஷேக பாண்டியன், அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கி மன்னிக்குமாறு வேண்டினான். அவரிடமிருந்து நற்புத்திரனை அடையவரம் பெற்றான். கல்யானையிடமிருந்து முத்துமாலையையும் திரும்பப் பெற்றான். அது சோமசுந்தரின் திருவிளையாடல் என அறியாது தான் அவரை சோதித்ததை எண்ணி வருந்தினான். பின்பு விக்கிரமன் என்னும் புதல்வனைப் பெற்று,

அவனுக்கு முடிசூட்டியபின் சிவலோகம் சேர்ந்தான் அபிஷேக பாண்டியன்.

**பல்லவி**
சித்தவேடம்தரித்தஉன்னைசோதிக்கபாண்டியன் - கல்
யானைக்குகரும்பளித்துவேண்டியதைக்பெறச்செய்தான்
**அனுபல்லவி**
சுத்தமாகயானையும்கரும்பைச்சுவைத்தபின்
மன்னன்முத்துமாலையையும்பறித்தேவிழுங்கிற்று
**சரணம்**
தாக்கவந்தவர்களைநில்லுங்கள்எனச்சொல்லி - கை
தூக்கமுடியாமல்செய்ததைக்கண்டமன்னன்
நாக்குழறஉன்னைத்தொழுதுபணிந்தபின்
நன்மகன்விக்கிரமனையும்பெற்றிடச்செய்தாய்

**22 யானை எய்த படலம்**

விக்ரம பாண்டியன் சோமசுந்தரரின் அருள் நிரப்பப் பெற்றிருந்தமையால், பகைக் கொண்ட சோழனால் நேர் வழியில் அவனைக் கொல்ல முடியவில்லை.அவனை சூழ்ச்சியால் கொல்ல திட்டமிட்டான் சோழன்.

அஞ்ஞானம், கிரவுஞ்சம், கோவரத்தனம், திரிகூடம், அத்திவெற்பு, சைலம், ஏமகூடம், விந்தம் என்னும் எட்டு மலைகளிலுள்ள சமணர்களிடம் விக்ரமனை கொன்றால், தனது ராஜியத்தில்பாதியை அவர்களுக்கு அளிப்பதாக கூறினான்.

சமணர்களும் அதற்கு உடன்பட்டு, அபிசார யாகம் செய்தனர். ஓம குண்டத்தில் எட்டி முதலான, தீய விறகுகளையும், வேமயண்ணையையு ம், நச்சுப் பிராணிகளின் ஊனையும், மிளகு பொடிகலந்த எண்ணையை யும் தீயில் வார்த்தனர். யாகத்தீயால் அருகாமையில உள்ள நந்தவனங்க ள், சோலைகள், காடுகள் கருகி அழிந்தன.

ஓமகுண்டத்திலிருந்து மத யானை ஒன்று வெளி வந்தது. அந்த யானை யிடம் சமணர்கள் மதுரையோடு விக்ரம பாண்டியனையும் அழித்து வருமாரு பணித்தார்கள். இமயமும்அஞ்சுமாறுவடவைத்தீநடந்துவருவ தைப்போலயானை பிளறிக் கொண்டு வந்தது.

பயந்த விக்ரம பாண்டியன் ஐயனை வணங்கி நிற்க, சமணர்களை எதிர்க்க தாமே வில்லேந்தி வந்து, யானையைக் கொல்வதாகக் உறுதி கூறினார். பின் நகரின் கீழ்திசையில் ஓர் அட்டாலை மண்டபம் அமைக்குமாறு திருவாக் கருளினார். விக்ரம பாண்டியனும் அதன் படி பதினாறு தூண்கள் கொண்ட அட்டாலை மண்டபம் அமைத்தான். காளைப் பருவமுடைய வேடுவச் சிறுவனாகத் தோன்றி யானையின் வரவிற்காக அந்த மண்டபத்தில் காத்திருந்தார் ஈசன்.

யானை சமீபித்ததும் சிங்கம் போல் கர்ஜித்துக் கொண்டு நரசிங்கக்னைப் பூட்டி, நாணை இழுத்து விட்டார். அக்கனையானது யானையின் மதகத்தைக் கிழித்து யானை கொன்றது.

யானை இறந்ததைக் கண்ட சமணர்கள் பதைத்தனர். இறந்த யானை யைக் கண்டு மகிழ்ந்தான்விக்ரமன். யானையின் உடலிலிருந்து பீறிட்டு வந்த ரத்தத்தைக் குடிக்க வந்த சமணர்களைபாண்டியன் விரட்டியடித்தான்.

அட்டாலை மண்டபத்தில் தங்கி, யானையைக் கொன்ற ஐயனை அங் கேயே வீற்றிருந்துஅருளுமாறு வேண்டினான் மன்னன். ஐயன் எறிந்த சிங்கக்கனையானது உக்கிர நரசிங்கராகஅங்கே எழுந்தருளியது.

பிரகலாதன் அங்கு தவம் செய்து, அழியா வரம் பெற்றதாக புராணங்கள் கூறுகின்றன.

**பல்லவி**
சமணர்களைக்கொண்டுஅபிசாரயாகம்செய்து
மதுரையோடுஅரசனையும்அழிக்கச்சொன்னான்சோழன்
**அனுபல்லவி**
நமனையொத்தயானைஓமகுண்டத்தினின்றும்
சமர்புரிந்திடவேசடுதியில்வந்தது
**சரணம்**
சிங்கத்வனியுடன்நரசிம்மக்கணைத்தொடுத்து
சீறினயானையைசிதைந்திடச்செய்தாய்
பொங்கும்குருதியையும்குடிக்காமல்சமணர்களை
விரட்டிவேந்தன்வேண்டிடஅங்குவீற்றிருந்தாய்

**23 விருத்த குமார் பாலரான படலம**

விக்ரமபாண்டியனுடையஆட்சிகாலத்தில்மதுரைமாநகரில்வாழ்ந்து வந்த விருபாக்ஷர் என்றஅந்தணருக்கும் அவர் மனைவி சுபவிரதைக்கும் தவப்புதல்வியாகப் பிறந்தாள் கௌரி. ஐந்துவயதிலேயே பிறவிப்பிணியை நீக்கும் வழியைத் தன் தந்தையிடம் கேட்க, அவரும் பராசக்தி மந்திரத்தை அவளுக்கு ஓதினார். கௌரியும் அதனை நாள் தவறாமல் ஜபித்து வந்தாள்.

விருபாக்ஷர் ஒரு நாள் தன் வீட்டிற்கு உஜ்சவிருதிக்கு வந்த ஓர் வைணவ பிரம்மசாரிக்கு, அவனது குலகோத்திரம் அறியாமல், எவரையும் கலந்தாலோசிக்காமல், தன் மகள் கௌரியைதாரைவார்த்துக் கொடுத்தார்.

வைணவர்களான தங்களுக்கு, சிவவேடமும், சிவசிந்தனையும் கொண்ட கௌரி மருமகளாக வந்தது, அவளது புக்ககத்தார்களுக்கு கட்டோடுபிடிக்கவில்லை. அவளைமிகவும்துன்புருத்தினர். கௌரியும், தான்சிவத்தொண்டுஏதும்செய்யஇயலாமல்போனதைக்குறித்துமிகவும்வருந்தினாள்.

கௌரியின்வாட்டத்தைப்போக்கஎண்ணியசிவபெருமான்வேதியர்வேடம்தரித்து,அவள்இல்லம்சென்று, தன்பசியாற்றும்படிகேட்டார். அச்சமயம்கௌரியின்மாமியாரும்மாமனாரும்அவளைத்தனியேவிட்டுவிட்டு, வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியூரில் நடக்கும்திருமணத்திற்குச் சென்று விட்டனர். கௌரி இதனால் தன்னால் ஏதும் செய்ய இயலாமையைசிவனடியாரிடம் கூறி வருந்தினாள். சிவனடியார், கௌரி பூட்டைத் தொட்டதும் பூட்டுதானாகவே திறக்கும், பிறகு அவள் உணவு சமைக்கலாம் என்றார். அவ்விதமே செய்து கௌரிசிவனடியாருக்கு அன்புடன் உணவு படைத்தாள்.

தேவாமுதம்போல்இருந்தஉணவைஅருந்தியதும்வேதியர்மூப்புநீங்கி மன்மதனைப் போல்காட்சியளித்தார். வாலிபனைக் கண்ட கற்பில் சிறந்த கௌரி நடுங்கினாள்.

அச்சமயம்வெளியூர்சென்றஅவளதுமாமிமுதலானோர்திரும்ப, காலின் பெருவிரலைச் சுவைக்கும் பாலகனாய், விரித்த ஆடையின் மீது கிடந்தார் அதே வேதியர். தாயை பிரிந்தசேயைப் போல் குழந்தை அழ, குழந்தையைப் பற்றிய விவரம் கேட்டாள் அவள் மாமி. கௌரி தேவதத்தன் என்பவன் தன் மனைவியுடன்அங்குவந்து, குழந்தையைசிறிதுநேரம்பார்த்துக்கொள்ளுமாறுவேண்டியதாகச் சொன்னாள். சிவனை ஆராதிப்பவனுடைய குழந்தையின் மேல் அன்புக் கொண்டதால் கௌரி தங்களுக்கு வேண்டாதவளாகி விட்டதால் குழந்தையுடன் வீட்டை விட்டு துரத்தினாள் கௌரியின் மாமியார்.

வருந்திய கௌரி சோமசுந்தரரை மனத்தில் தியானித்து, உமா தேவியாரின் மந்திரத்தை உச்சரித்தாள். அழுத குழந்தை மறைந்து ரிஷபவாகனத்தில் சிவபெருமானாக மாறிஉமாதேவியுடன் ஆகாயத் தில் காட்சியளித்தார். இக்காட்சியைக் கண்ட கௌரி ஆனந்தகடலில் மூழ்க ஐயன் உமாதேவியின் சாரூபப் பதவியை அளித்தார்.

**பல்லவி**
பராசக்திமந்திரத்தைமகள்கௌரிக்குஉபதேசித்து
வைணவனுக்குமணமுடித்தான்விரூபாக்கன்
**அனுபல்லவி**
நிராதரவாய்வீட்டில்தனியாய்கௌரிஇருக்க
நீண்டதாடிகொண்டசிவனடியாகிபிட்சைக்கேட்டாய்
**சரணம்**
தொட்டேபூட்டைத்திறந்துஇட்டஉணவைஅருந்தி
சட்டெனகுமாரனுமாகிவிரல்சப்பும்பாலனுமாக
மட்டற்றகோபமுடன்மாமிஅவர்களைத்துரத்த
மங்கைஉமையுடன்சேரகுழந்தையும்நீயானாய்

24 கால் மாறி ஆடிய

அறுபத்து நான்கு கலைகளில் எம்பெருமான் ஆடும் திருநடனத்தை தானும் ஆடுவதுஉகந்ததல்ல என்ற எண்ணம் கொண்டு, அதனை நீங்கி மற்ற அறுபத்து மூன்று கலைகளைமட்டும் பயின்றான் ராஜசேகர பாண்டியன்.

ஒரு சமயம் கரிகால சோழனின் அரண்மனை புலவர், பாண்டியனது அவைக்கு வந்து, தன்னுடைய அரசன் அறுபத்து நான்கு கலைகளையும் கற்ற வரென்றும், பாண்டியன் கலைகள்முற்றும் அறிந்தவனல்ல என்று ஏளனமாக கூறினார்.

வெகுண்ட பாண்டியன் ஐயன் ஆடுகின்ற திருநடனத்தை தானும் ஆடிவதற்கு தன் மனம் இடம்தரவில்லை என்பதை எண்ணி, இருப்பினும் புலவரின் ஏளன ம் செய்ததால், ஐயன் ஆடும்ஆட்டத்தை தானும் ஆடுவது ஐய்யனின் திருவுள் ளம் போலும் என தெளிவுப் பெற்றான் .தக்க ஆசான் கொண்டு கசடர கற்று தேர்ந்தான்.

கூத்தினை பயிலும் போது பாண்டியனுக்கு அயர்வு ஏற்பட்டது. தன்னை போலவே எம்பெருமானுக்கும் அயர்வு ஏற்படாதா? என மிகவும் வருந்தி, பல நாட்களாக ஆடி வரும் ஐய்யனது திருவடிகளில் ஒன்றானது எவ்வளவு சோர்வினை அடைந்திருக்கும்? இவ்வாறு ஆடும் கூத்தினை எவ்வாறு நிறுத்துவது? நிறுத்தாவிடில் ஐய்யனது திருவடி வலிக்குமே என்று வருத்தத்தில் உழன்றான் பாண்டியன். இதற்கோர் முடிவு கட்ட எண்ணம் கொண்டான் மன்னன்.

சிவராத்திரி நன்னாளில் விஷேஷ பூஜைகளை முடித்து ஆடலை தரிசித்த பின், இரு கைகளையும் தலைக்கு மேல்கூப்பி, எம்பெருமானிடம், ஊன்றிய திருவடியை எடுத்து மேலே வீசி, தூக்கிய திருவடியை நிலத்தில் ஊன்றி, தான் காண, கால் மாற்றி ஆடி தனக்கு அருளவேண்டினான். அப்படிச் செய்யா விடில் தான் இறப்பது நிச்சயம் என்று கூறி வாளை எடுத்து தன்னை மாய்த்துக் கொள்ள துணிந்தான் பாண்டியன்.

உடனே சிவபெருமான் இடது காலை கீழே ஊன்றி, வலது காலை மேலே எடுத்து வீசி, கால் மாறி ஆடிக்காட்டி பாண்டிய மன்னனுக்கு அருளினார். இந்த திருகூத்தை யாவரும் தரிசிக்கும்படி எக்காலத்தும் இவ்வாறே நின்று அருள் செய்திட வேண்டும் என்று வேண்டினான் பாண்டியன். அன்று முதல் சோம சுந்தர கடவுள் கால் மாறி நின்ற கோலத்திலேயே நின்று அனைவரையும் காத்தருளுகின்றார்.

**பல்லவி**

பாண்டியன்சோழனைப்போலஎல்லாக்கலைகளையும்

அறிந்தவனல்லஎனசோழப்புலவன்சொல்ல

**அனுபல்லவி**

ஆண்டவன்ஆடும்பரதக்கலையதனை

அன்றேபயின்றிடஆவலோடுஆரம்பித்தான்பாண்டியன்

**சரணம்**

ஆட்டத்தில்அயர்வுகொண்டுஅண்ணலைநினைத்துவருந்தி

கால்மாறியாடிடவேஇறைஞ்சினான்பாண்டியன்

ஆட்டத்தின்அழகைஅனைவரும்கண்டிட

அரசன்வேண்டவேஅந்தகோலத்தில்நின்றாயே

**25 பழியஞ்சினபடலம்**

குலோதுங்க பாண்டியன் ஆண்ட காலத்தில் திருப்பத்தூரிலிருந்து ஓர் அந்தணர் தம் மனைவி குழந்தையுடன், மதுரையை நோக்கி வந்துக் கொண்டிருந்தான். அவர்களுக்கு தாகம்ஏற்பட்டதால், குழந்தையையும் மனைவியையும் ஓர் ஆலமரத்தடியில் இளைப்பாற செய்துஅவன் குடிக்க தண்ணீர் தேடிச் சென்றான்.

அந்த ஆலமரத்தின் என்றோ ஓர் வேடனால் எய்யப்பட்ட கூறிய அம்பு ஒன்று சிக்கிக்கொண்டிருந்து. காற்றின் அசைவால் அந்த அம்பு மர நிழலில் சோர்வுடன் படுத்திருந்தஅப்பெண்ணின் வயிற்றில் பாய்ந்து அவள் இறந்து விட்டாள். அச்சமயம் ஓர் வேடன் அதேமரத்தின் மறு பக்கம் இளைப்பாற அமர நிழலில் அமர்ந்தான்.

தண்ணீர் கொண்டு வந்த அந்த அந்தணன் தன் மனைவியின் நிலைக்க கண்டு, வெகுண்டு, மரத்தின் கீழ் இளைப் பாற வந்த வேடன் மீது ஐயம் கொண்டு, அரசரிடம் சென்று முறையிட்டான்.

அரசன்விசாரணைசெய்ததில்தான்இளைப்பாறத்தான்அம்மரத்தடிக்கு வந்ததாகவும், தான்அம்புஎய்யவில்லை எனவும், அந்த அம்புயாருடையது என்பது தனக்குத் தெரியாது என்று கூறினான். கடும் தண்டனைப் பெற்றும் அவன் கூறியதையே திரும்பத் திரும்ப கூறினான். அரசனுக்கும் அவன் கூறுவதில் உண்மை இருப்பதாகவே தோன்றிற்று. வேறு எவரேனும் மிருங்கங்களை வேட்டையாட எறிந்த அந்த அம்பு, அந்தணனின் மனைவி மீது பட்டிருக்கும் என்ற ஐயம் தோன்றிற்று. அந்தணனிடம் தான் தீர ஆராய்ந்த பின் தீர்ப்பளிபதாக கூறி, அந்த வேடனை சிறையில் அடைத்தான்.

மனைவியின் ஈமக் கடன்களை முடித்து திரும்பிய அந்தணனுடன், சோமசுந்தரகடவுளின் திருக்கோயினுள் சென்று உண்மையை யறி ய தனக்கு அருளுமாறு வேண்டினான் மன்னன்.

அப்போது விண்ணிலிருந்து அந்நகரில் நடக்கும் செட்டி வீட்டுத் திருமணத்திற்குஅந்தணனோடு சென்றால் அவன் சந்தேகம் நீங்கும் என்று அசரீரி குரல் கேட்டது. அங்கு சென்றஅவர்களுக்கு சோம-சுந்தரரின் அருளால் எமதூதர்கள் இருவர் உரையாடுவது காதில் வீழ்ந்தது.

ஒரு நோயும் இல்லாத அந்த மணமகனை எவ்வாறு தங்களது தலைவனது ஆணைப் படி இறக்கச் செய்வது என்று ஒருவன் வினவினான். மற்றவன் அதற்கு அன்றைய பகலில், ஆலமரத்தின் முன்பே சிக்கிக் கிடந்த அம்பை, காற்றின் அசைவைக் கொண்டு வீழ்த்தி அந்தணனின் மனைவியின் உயிரைக் கவர்ந்ததுபோல், கன்றை ஈன்ற பசுவினை மணவிழாவின் ஆரவாரத்தினால்

கயிற்றை அறுத்துக் கொண்டு, வெகுண்டு ஓடச் செய்து மணமகனின் உயிரைக் கவரலாம் என்றான். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த அரசனும், அந்தணனும் அவர்களின்கூற்றின் படி நடந்தால் அந்தணனின்  மனைவி இறந்ததும் அவ்வாறே என்று எண்ணினர்.

சிறிதுநேரத்தில்கட்டியகயிற்றினைஅறுத்துக்கொண்டு, அலறியவாறு பசு ஒன்று மணமகனை முட்டி கொன்றது. இதனைக் கண்ட அந்தணனும் மன்னனும் உண்மையை அறிந்தார்கள். வேடனுக்கு இழைத்த அநீதிக்கு வருந்திய மன்னன் அவனுக்கு பல பரிசுகள் கொடுத்தனுப்பினான். தனக்கு உண்மையை உணர்த்தி அருளிய ஆண்டவனை மனமாற துதித்தான் பாண்டியன்.

**பல்லவி**
மரத்தினின்றுவீழ்ந்தஅம்புமனைவியைமாய்த்திட
மரத்தின்பின்இருந்தவனைகொலைகாரன்எனநினைத்து
**அனுபல்லவி**
அரசன்முன்அழைத்துச்செல்லஅவனும் - குழம்பியதால்
அசரீரியாகஓர்மணமேடைசெல்லச்சொன்னீர்
**சரணம்**
எவனோஎய்தஅம்புமரத்தில்தொங்கிவீழ
இறந்தபெண்ணைப்போலவேஇவனும் - மணக்கோலத்தில்
சவமாகவீழவேபசுவைமுட்டச்செய்ய
சதிபேசினயமதூதர்பேச்சினைக்கேட்கச்செய்தாய்

**26 மாபாதகம் தீர்த்த படலம்**

குலோதுங்கன் ஆட்சி புரிந்தகாலத்தில் அவந்தி என்னும்நகரில்ஓர் அந்தணன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒழுக்கம் கெட்ட மகன் இருந்தான். அவன் செய்யாத குற்றம் ஒன்றும் இல்லை. அவன் தன் தந்தையின் எதிரிலேயே தாயுடன் கூடி பின்னர் ஓர் நாள் தந்தையையும் கொன்றான். தந்தையை தகனம் செய்துவிட்டு, தாயுடன் தன்னால் சுமக்கக்கூடிய பொருட்களை எடுத்துக்கொண்டு நீண்ட பயணம் தொடங்கினான்.

வழியில் வேடர்கள் அவனது பொருட்களையும் தாயையும் கவர்ந்துச் சென்றனர். அவன் செய்த பாப செயல்களால் மாபாதகம் அவனைப் பற்றிக் கொண்டது. படாதப் பாடுப் பட்டபின், பாவம் தீரும் நாள் வந்ததும், சிவனாரின் அருளால் மதுரை மாநகரைஅடைந்தான்.

அப்பொது அம்மையும் அப்பனும் வேட்டுவச்சியாகவும், வேடனாகவும் திருவுருவம் கொண்டு, வாதாடிக்கொண்டிருந்தனர். பெருமான் அம்மையிடம், அம்மாபாதகனைக் காட்டி, காமம், மனிதனின் பண்பாட்டை சீர்குலைத்து, கொலை, கொள்ளைகளைச் செய்யத் தூண்டி, முடிவில் நரகத்திற்கே கொண்டு செல்லும் என்றார்.

பின் சிவவேடுவர் அப்பாதகனிடம் அவன் துன்பத்திற்கான காரணம் கேட்டார். அவனும் தன் தந்தையை கொன்றது வரை தான் செய்த எண்ணற்ற பாப செயல்களைக் கூறி அழுதான்.

அவன் மீது இரக்கம் கொண்ட ஐயன் பாபம் நீங்கும் வழிகளையும் கூறியருளினார்.

பிச்சை எடுத்து ஒரு பொழுது உண்ணுதல், சிவனடியார்களுக்கு தொண்டு புரிந்தல், சூரியன்உதிக்கும் முன் எழுந்து கோயில் குளத்தில் நீராடி, அருகம்புல் பறித்து பசுவிற்கு கொடுத்தல், சிவபெருமானை நூற்றெட்டு முறை வலம் வருதல் போன்ற தவ நெறிகளை கடைப்பிடித்தால்கொலை பாதகம் நீங்கும் என்று கூறியருளினார்.

இதனைக்கேட்டவேட்டுவச்சி, இக் கொடியவன் செய்த பாவத்திற்கு உய்யும் வழியே இல்லாத சமயம், ஐயன் இவனுக்கு அருளிய காரணம் யாது என வேடுவனிடம் வினவினாள். கொலைக்கும் பழிக்கும் அஞ்சாத எவன் தன் பாவம் நீங்கும் வழி தெரியாமல் தம்மை சரண்டையும் சமயம் அவர்களை காப்பதே தம் கடமையாகும் என்று உமையவளுக்கு ஐயன் உணர்த்தி பின் இருவரும் மறைந்தனர்.

மாபாதகன் வியந்து, அவர்கள் கூறிய தவநெறியை மேற்கொண்டு, மூன்று மாதத்திலேயே பாபம் நீங்கி, ஐயன்மீது பாமாலைகள பாடி, அவரது பாதாரவிந்தம் அடைந்தான்.

**பல்லவி**

தாயிடம்கூடிபின்தந்தையைக்கொன்றவன்

மாபாதகம்தீர்க்களண்ணம்கொண்டனை

**அனுபல்லவி**

நாயின்காவலுடன்அம்மையோடுவேடுவனாய்

நல்லுபதேசம்செய்துகடைத்தேறச்சொன்னீர்

**சரணம்**

ஒருபகல்பிச்சையுண்டுசிவனடிக்குதொண்டுசெய்து

அனுதினம்நூற்றெட்டுஅங்கப்பிரதக்ஷணம்செய்து

திருக்கோயில்புறத்தொட்டியில்தினமும்நீராடியபின்

அருகம்பில்ஆவினுக்கீந்துபழிதீர்ந்திடச்சொன்னீர்

## 27 அங்கம் வெட்டின படலம்

குலோத்துங்கன் ஆட்சி காலத்தில் ,சோமசுந்தர கடவுளின் பக்தன் ஒருவன், வாட்போர் விந்தையில் சிறந்தவனாய் பல இளைஞர்களுக்கு பயிற்றுவித்து அவர்களுக்கு குருவாய் இருந்து வந்தான் இவனிடம் பயின்ற சத்தன் என்பவன் தனியாகவே பலருக்கு வாட்போர் கற்பித்து வந்தான்.

பல பேர் அவனை மதித்ததாலும் தன் குருவை விட அதிக வருவாய் ஈட்டியமையால் கர்வம் கொண்டான். மேலும் அவருக்கு பலவகையில் இன்னல்கள் செய்தான். அத்தோடு நில்லாமல் ஒரு சமயம் குரு வெளியூர் சென்றிருந்த சமயம், அவரின் மனைவியை இடன் உண்டோ என்று கேட்டு கையை பிடித்து இழுத்தான். கற்பில் சிறந்த அம்மாது, அவனை வெளியே தள்ளி தாளிட்டு, இதனை கணவனிடம் கூடக்கூறாமல் கூடல்பிரானிடம் தன் குறையை கூறி அழுதான்.

நீச்சனாகிய சித்தன் செய்த செய்கையை அறிந்த சுந்தரர், சித்தனை தண்டிக்க எண்ணம் கொண்டு குருவினைப் போல் வேடம் தரித்து சித்தனிடம், இருவரின் வலிமையும் மறுநாள் போரிட்டு அறியலாம் என்று அழைத்தார். இதற்கு உடன்பட்ட சித்தனும், குருவேடம் தரித்த ஈசனிடம் கடும் போரிட்டான். குருவின் பத்தினியை விரும்பின உள்ளத்தையும், தகாது பேசின் நாவையும், தொட்ட கையையும், அங்கம் அங்கமாக வெட்டியபின் தலையையும் வீழ்த்தி மறைந்தார் ஐயன்.

அவருடைய மாணவர்கள் குருவை அவர் வீட்டில் தேடினர். எல்லா இடங்களிலும் தேடி குருவைக் காணவில்லை. கோயிலுக்குச் சென்ற அவர்கள் குருவை அங்கு கண்டார்கள். சித்தனைக் கொன்றபின் அவர் எங்கு சென்றார் என்று அவரிடம் வினவ, குரு தான் சித்தனைக் கொல்லவில்லை எனவும், இது சோமசுந்தர கடவுளின் செயலாக இருக்கலாம் என்றார். அப்போது குருவின் மனைவி சித்தன் தன்னிடம் இடம் உண்டோ என்று கேட்ட விவரம் கூறினாள். அங்கு இருந்தோரும் வாள்வீரர் சித்தனை கொல்லும் பொழுது, இதனைச் சொல்லியே கொன்றதாக கூறினர். குரு இதனை ஐயனின் திருவிளையாடல் எனக் கூறிது தித்தார்.

இதனை அறிந்த குலோதுங்க பாண்டியன் ஐயனின் அருளை எண்ணி உருகி, குழுவிற்கும் அவர் மனைவிக்கும் மாணிக்க மாலை அணிவித்து, யானையில் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்றார். சில காலம் சென்ற குலோத்துங்கன் பின் தன் மகன் அனந்த குணபாண்டியனுக்கு, முடிசூட்டி பின் சிவபதமடைந்தான்

**பல்லவி**

வித்தைகற்றகுருவின்பத்மினியைசித்தன்

இடன்உண்டோ எனக்கேட்டுகையைப்பிடித்திழுத்தான்

**அனுபல்லவி**

சித்தத்தில்உன்னையேநினைத்தவனைக்காக்க

சீடன்முன்குருவேடத்தில்மல்யுத்தத்திற்குஅழைத்தீர்

**சரணம்**

சித்தனைவென்றதுதானில்லையென்றும்

சிவன்செயல்எனகுருபார்த்தவரிடம்சொல்ல

பத்தினியும் இடன்உண்டோ என்ற பாவியின் சொல்லைச் சொல்ல

அதனைச்சொல்லியேஅவனைக்கொன்றதாகச்சொல்லினர்

**28 நாகம்எய்தபடலம்**

அனந்தகுணபாண்டியன் அரசாண்டகாலத்தில்சைவம்செழித்து, மதுரைமாநகர்சிவபெருமானின்திருகைலாயம்போல், பொலிந்துவிளங்கிற்று.இதைக்கண்டுபொறாமைக்கொண்ட சமணர்கள் பெரிய யாகம் ஒன்றுச் செய்தனர். அதனின்று கிளம்பின அவுணனை சோமவார விரத பலத்தால் சுந்தரிகாந்திமதியும் சயந்தனன் என்னும் வீரபாண்டியனைப் பெற்றாள் மதுரைக்குச் சென்று, பாண்டியனையும் மதுரையையும் அழித்திடும்படி ஏவினார்கள். உடனே அவன் கொடிய விஷப்பாம்பாக மாறி மதுரையின் மேற்குதிசையை அடைந்தான்.

பாம்பினைக் கண்ட மக்கள் மன்னனிடம் அறிவித்தார்கள். மன்னனும் முன்பு மதயானையை அனுப்பிய சமணர்களே இதனையும் அனுப்பியுள்ளனர் என்று அறிந்து, பாம்பினை அணிகலனாக அணிந்த ஐயன் காப்பாற்றுவார் என அவர்களுக் குதைரியம் கூறி, இறைவனை வணங்கினான். ஐயனும் பாண்டியனிடம் தான் உடன் இருப்பதாக் கூறி, பாம்புடன் போரிடுமாறு பணித்தார்.

சுந்தரரை மனத்தால் தியானித்து, பிறை போன்ற வடிவுள்ள கணையால் பாண்டியன் பாம்பினைத் தாக்க, பாம்பானது துடிதுடித்து விஷத்தைக் கக்கி இறந்தது. ஆனால் அதன் நஞ்சின் நெடியால் மதுரை முழுவதும் தீயால் பாதிக்கப்பட்டது. அனந்தகுணபாண்டியன் எம்பெருமானிடம் மக்களை காக்கும் படிவேண்டிநின்றான். அருட்கடலாகிய எம்பெருமான் தன் திருச்சடையில் அணிந்த இளம்பிறைஉள்ள அமுதத்தினின்று ஒரு சிறு துளியை சிந்தியருளினார். அச்சிறு துளியானது மதுரை மாநகரம் முழுதும் பரவி முன் போல் மதுரை மாநகரைதூய்மைபெறச்செய்தது.

அனந்தகுணபாண்டியன் சோமசுந்தர கடவுளை நாள்தோறும் வணங்கி நெடுங்காலம் சிறப்புற அரசாண்டு வந்தான்.

**பல்லவி**

மதுரையோடுமன்னனைஅழித்திடச்சொல்லி

சமணர்கள்யாகம்செய்துஅவுணனைஏவினர்

**அனுபல்லவி**

அதுகேட்டஅனந்தகுணன்உந்தன்அருளால்

கொடியநாகமானவனைபிறைக்கணையால்வதைத்தான்

**சரணம்**

கக்கினநஞ்சின்நெடிதாங்காமலேமக்கள்

கஷ்டப்படுவதைக்கண்டுஉன்னைவேண்ட

அக்கணமேஉன்தலையில்உள்ளமதியின்

அமுதத்தைச்சிந்திஅனைவரையும்காத்தீர்

## 29 மாயப்பசுவை வதைத்த படலம்

சமணர்கள் ஒன்று சேர்ந்து பாண்டியனை வெல்ல அனுப்பிய மதயானையும், விஷப்பாம்பினையும் பாண்டியன்கொன்றதால்வேறுசூழ்ச்சிசெய்யஎண்ணினர். வைணவர்கள்பசுவதைசெய்யமாட்டார்கள்என்றுஅறிந்தசமணர்கள்முன் போலவே பெரியயாகம் ஒன்றுசெய்தார்கள். அதினின்று பசுவடிவம் கொண்ட அவுணன் தோன்றினான். அவனை விட்டு மதுரையை அழிக்க ஏவினர் சமணர்கள்.

அந்தமாயபசுவானதுஅதிவேகமாய்கண்டவர்அஞ்சும்படிமதுரையைஅழிக்க வந்து. இதனை அறிந்த பாண்டியன் சோமசுந்தரக் கடவுளிடம் காக்கும் படி வேண்டினான். ஐயன் திருவுள்ளம் கொண்டு நந்தியை, சமணர்கள் அனுப்பிய பசுவை வென்று வர அனுப்பினார். நந்தி தனது அடியினால் நிலத்தைக் கிளறி, அண்டத்தையும் எட்டுத் திக்கையும் மறைக்குமாறு புழுதியை எழுப்பியது. கண்களில் தீயைச் சிந்திய படி வேகமாக நடந்தது. அதன் அழகில் மயங்கிய பசு அதன் மீது இச்சைக் கொண்டு, காமம் மிகுந்து வீரியத்தையும் விட்டு கீழே வீழ்ந்து இறந்தது.

மதுரை மக்கள் கொடிய பசுவிடமிருந்து தப்பியதை எண்ணி மகிழ்ந்தனர். அனந்தகுணன் தன் குலபூஷணனிடம் அரசாட்சியை ஒப்படைத்து சிவபதம் அடைந்தான்.

### பல்லவி

பசுவதைசெய்திடமாட்டார்கள்எனச்சூதாய்,

சமணர்களைக்கொண்டுயாகம்செய்துமாயப்

### அனுபல்லவி

பசுவைஏவிபாண்டியநாட்டையும்அரசனையும்

அழித்திடவேசோழன்எண்ணங்கொண்டான்

### சரணம்

உந்தன்ஆணையால்திருநந்தியும்அந்தப்பசுவை

உந்திஉந்தித்தள்ளிதொந்திரைச்செய்தபின்

அந்தமுகுந்ததன்அழகினைக்காட்டிகாம

ஆசைமிகக்கொண்டுஆவும்அழிந்திடச்செய்தாயே

## 30 மெய்க்காட்டியபடலம்

குலபூஷண பாண்டியன் ஆண்ட காலத்தில் சேனைத் தலைவனாக இருந்த சவுந்தரசாமந்தன். அவன் சிவனடியார்களையே சிவபெருமானாக பாவித்து தொண்டு செய்து வந்தான். அச்சமயம் வேடர்களுக்கு தலைவனான சோதிராயன், பாண்டியன் மீது படையெடுக்கப் போவதாக அறிந்த மன்னன், சேனைத் தலைவனான சாமந்தனிடம் பெரும் நிதி கொடுத்து சேனையை விரிவு படுத்தச் சொன்னான்.

மன்னனால் அளிக்கப்பட்ட பொன்னையும் பொருளையும் எடுத்துக் கொண்டு சென்ற சாமந்தன், அனைத்தையும் சிவ புண்ணிய காரியங்களில் செலவழிக்கத் தொடங்கினான்.

சாமந்தன் பல தேசங்களுக்கு பொருளை அனுப்புவது போலவும், வீரர்களை அனுப்பச் சொல்லி ஓலை விடுவது போலவு ம்நடித்தான். இதனை ஒற்றன் மூலம் அறிந்த மன்னன் மறுநாளே வீரர்கள் அனைவரும் வர வேண்டும் என்று கட்டளையாட்டான் மன்னன்.

இதை அறிந்த சாமந்தன் செய்வதறியாது ஐயனிடம் சென்று, தனது பணிவிடைகளை ஏற்ற ஐயனே தனக்கோர் வழிக்காட்டி அருள வேண்டினான். ஐயனும் தாமே சேனையோடுட்ட வருவதாக வாக்களித்து சேனைகளை எதிர்நோக்கி காத்திருக்கக ட்டளை இட்டார். மறுநாள் காலை சாமந்தன் அரசசபையில் ஐயன் வரவை நோக்கி காத்திருந்தான்.

சிவகணங்களும், பூதகணங்களும், திருநீரும் போர் கவசம் அணிந்து, வாளேந்திய குதிரை வீரர்களாக தம்மை சூழ்ந்து வர, போர்களம் வந்தார் ஐயன் சவுந்தரசாமந்தன் பாண்டியமன்னனிடம் சேனையின் சிறப்புக்களைக் கூறி, பல நாட்டு வீரர்களையும் அறிமுகப்படுத்தினான். சோமசுந்தர கடவுளுக்கு, மன்னன்ஆடைஅணிகலங்கள்கொடுத்தான். ஐயனும் அதனை சாமந்தன் பொருட்டு வாங்கி தரித்து, தனது பரிவாரங்களுக்கும் அளித்து, தாமே குதிரையை பலவிதங்களில் நடத்திக் காண்பித்தார்.

அப்போது அங்கு வந்த ஒற்றன் மூலம் சேதிராயன் காட்டில் புலியால் தாக்கப்பட்டு இறந்த சேதியை அறிந்தனர் . முரசு முழங்கி ஆர்பரிக்கும் சேனையைக் கண்ட மன்னன் மகிழ்ந்து ,சாமந்தனுக்கு பல சிறப்புக்கள் செய்து, சேனைகளை தத்தம் நாடுகளுக்குச் செல்ல விடைக் கொடுத்தான். சவுந்தர சாமந்தனும் சேனையை அனுப்புவதுப் போல் பாவ னைச் செய்ய, ஐயனும்அந்நிலையிலேயே மறைந்தருளினார்.

இதனைக்கண்டபாண்டியன்இதுகூடல்பெருமானின்திருவிளையாடலேஎன்று உணர்ந்துஆனந்தக் கண்ணீர்வடித்துமகிழ்ந்தான்.
ஐயனையேசேனையுடன்வரவழைத்தசாமந்தனுக்குஅவனையேதனக்குகடவு ள்எனசவுந்தரசாமந்தனைவணங்கி,
சிறிதுகாலம்மகிழ்ச்சியுடன்ஆண்டுவந்தான்குலபூஷணபாண்டியன்.

..

**பல்லவி**

சோதிராயனைவெல்லகுலபூஷணன்மந்திரி

சவுந்தரசாமந்தனைசேனைதிரட்டச்சொன்னான்

**அனுபல்லவி**

பாதிக்குமேல்உந்தன்பணிக்காகநிதியனைத்தும்

பயன்பட்டதையறிந்துகோபம்கொண்டான்மன்னன்

**சரணம்**

சேனைகளைஉடனேவரச்சொன்னபின்காட்டில்

சேதிராயன்இறந்தசேதியைஅறிந்தமன்னன்

சேனையைத்திரும்பச்சொல்லஉடன்அங்குமறைந்தமாயம்

கண்டுமன்னன்மந்திரியைதெய்வமாகக்கொண்டான்

**31 உலவாக் கிழி அருளிய படலம்**

குலபூஷணபாண்டியன் சோமவார விரதத்தை  விடாது கடைப் பிடித்து பல சிவகாரியங்கள் செய்துவந்தான். இதனால் செருக்குற்று மறையவர்களை மதிக்கமறந்தான். இதன் காரணமாக நாட்டில்  மழை வளம் குன்றி பாண்டியநாடு வறுமையில் வாடியது.  அந்தணர்களும் மறுமையினால்  வேதம் ஓதுதலை மறந்து, வேள்விகளும் செய்யாமல் இருந்தனர். இதனால் மக்கள்   கடும் பஞ்சத்தால் வாடினர்.

அரசன் சோம வாரத்தன்று விரதமிருந்து, சோமசுந்தர கடவுளிடம், மக்களின் துன்பம் தன்னை மிகவும் வாட்டுவதாகவும், தனது செல்வங்கள் அனைத்தும் சிவபுண்ணிய வழிகளில் செலவாகி விட்டதாகவும், இந்நிலை போக்க தனக்கு அருளுமாறு வேண்டினான். எம்பெருமானும் அரசனது பிழையை மனத்தில் கொண்டு வாளாய் இருந்தார். அரண்மனைச் சென்ற அரசன் ஐயனையே எண்ணிய வண்ணம் தரையில் படுத்த படி உறங்கி விட்டான்.

ஐயன் அவன் கனவில்  சித்தர் வடிவுக்  கொண்டு தோன்றி, வேதம் ஓதும் அந்தணர்களை அவன் மதியாமல் மறந்ததால் இந்நிலை ஏற்பட்டது என்பதை உணர்த்தினார். வேதமே சகலமும். அந்தணர்கள் செய்யும் வேள்வியாலும், ஓதும் வேதத்தினாலும்  மழை பொழிகிறது. ஆகையினால் அந்தணர்களை ஆதாரிக்குமாறு கூறினர்.

ஐயன் எடுக்க எடுக்க வற்றாது கொடுக்கும் பொன் நிறைந்த  ஓர் உலவாக் கிழியை மன்னனிடம் கொடுத்து,   அதனைக் கொண்டு நாட்டின் வறுமையை நீக்கிக் கொள்ளுமாறு கூறி மறைந்தார்.

கண்ட கனவு நனவானதைக் கண்ட அரசன் மகிழ்ந்து, உலவாக் கிழியை மந்திரிகளிடம் காட்டினான். அதனை பூஜித்து, அதனின்று பொன்னை அந்தணர்களுக்கும் , மக்களுக்கும் வாரி வாரி அளித்தான். அப்பொன்னைக் கொண்டு கோயில் பணிகளும் செய்தான். பாண்டிய நாட்டு மக்கள் வறுமையின்றி இனிதே வாழ்ந்தனர். அதனைக்கண்டு குலபூஹணபாண்டியனும் இன்பமுடன் பல காலம் மகிழ்ச்சியுடன் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தான்.

**பல்லவி**

மறையோதும்மறையவர்களைமன்னன்மறைந்ததால்

மழையின்றிவறுமையில்தவித்தனர்மதுரைமக்கள்

**அனுபல்லவி**

குறைதீர்க்கவேண்டிஉன்னிடம்வந்த

குலபூஷணன்கனவில்தோன்றிவிளக்கினாய்

**சரணம்**

பொன்னும்பொருளும்தந்துபார்பப்பனர்களைக்கொண்டு

வேதம்ஓதிமழைபெய்தால்வறுமைநீங்கிடும்என்றாய்

பொன்னைப்பெற்றிடஓர்பொற்கிழியும்வற்றாத்தாய்

தந்தவன்இன்னலைத்தீர்த்துவைத்தாயே

## 32 வளையல்விற்றபடலம்

தாருகா வனத்தில் வாழும் முனிவர்கள் தாங்கள் செய்யும் தவ வலிமையால் எதையும் அடையலாம், அதற்கு இறை அருள் தேவையில்லை என்ற எண்ணம் கொண்டிருந்தனர். முனி பத்தினிகளும் தங்கள் கற்பினால் எதையும் சாதிக்கலாம் என ஆணவமுற்றனர். அவர்களின் அறியாமையையும் ஆணவத்தையும் போக்க எண்ணினார் ஐயன்.

திரு ஓட்டை கையில் ஏந்தி, பட்டுக் கோவணம் தரித்து, புலித்தோலை போர்த்தி, திருநீரு அணிந்து அழகிய இளைஞர் வடிவுடன் பிச்சை எடுக்க வீதியில் வந்தார் சிவபெருமான். அவர் வரும் ஓசையைக் கேட்டதுமே அவர் அழகில் மயங்கி தம்மை மறந்த ரிஷிபத்தினிகள் பிச்சையிட வந்தனர்.அவருடைய அழகில் காமமயக்கத்துடன் பிச்சையிட்டனர். காமமயக்கத்தில் உடல் இளைத்ததால் அவர்களின் கைவளையல்கள் பிச்சையுடன் நழுவி பிச்சைப் பாத்திரத்தில் விழுந்தன.

அவர்கள் எல்லோரும் காதல் பித்தர்களாகி வாய்க்கு வந்தபடி சல்லாப வார்த்தைகளை பேச ஆரம்பித்தனர். தங்களது தவ வலிமையால் இதனை அறிந்தரிஷிகள், தன்னிலை மறந்த மனைவியர்களின் கற்பினையும் வளையல்களையும் கவர்ந்தவர் சிவபெருமானே என்பதை உணர்ந்தனர். கற்பு தவறி கருத்து இழந்த மனைவியரை, மதுரையில் வணிகப் பெண்களாகப் பிறக்கும் படி சபித்தனர்.

அந்த பெண்கள் தன் கணவர்களிடம் தாங்கள் மீண்டும் முனிபத்தினி பத்தினிகளாக வரம் கேட்டனர். மதுரையில் அவர்கள் வணிகப் பெண்களாக வாழும் போது சிவபெருமானின் கைப்பட்டு சாப விமோசனம் கிடைக்கும் என்றனர்.

சோமசுந்தரர் அவர்களுக்கு அருள எண்ணம் கொண்டு வளையல் வியாபாரி போல் வேடமேற்றும துரையில் அப்பெண்கள் வசிக்கும் தெருவில் வந்து வளையல்களின் பெருமைகளை விளக்கி கூவி விற்றார். வெளியே வந்த வணிகப் பெண்களின் கைத்தொட்டு வளையலிட்ட ஐயன் கோயிலுக்குள் சென்று லிங்கத்தில் ஐக்கியமானார். வந்தவர் சோமசுந்தரர் என்பதை உணர்ந்த வணிகப் பெண்கள் மீண்டும் முனி பத்தினிகளாகும் பாக்கியம் பெற்றனர்.

**பல்லவி**

அழகியபிச்சாடனராய்வேடம்தரித்துதாருகா

வனத்துமுனிபத்தினிகள்கற்பைச்சோதிக்கச்சென்றீர்

**அனுபல்லவி**

அழகில்வசமிழந்தமனைவிகளைக்கண்டவர்கள்

ஆடலரசர்செயல்என்றேஅறிந்தனர்

**சரணம்**

கோபங்கொண்டமுனிவர்கள்தாபமுற்றபெண்களை

வணிககுலமகளிராய்பிறந்திடவேசபிக்க

சாபம்அகன்றிடவளைவிற்கும்வணிகராகவும்

சென்றவர்கள்கையைத்தொட்டுசாபம்நீக்கினீர்

## 33 அட்டமாசித்திஉபதேசித்தபடலம்

ஒரு சமயம் சிவபெருமான் போக மூர்த்தியாய் இருக்கும் போது, சிவகணத் தலைவர்களுக்கும், சனகர் சகோதரர்களுக்கும் சிவபுராணங்களை கூறிக் கொண்டிருந்தார். அருகில் முருகப் பெருமானுக்கு பால்கொடுத்துக் கொண்டிருந்த கார்த்திகைப் பெண்கள் அறுவரும்தங்களுக்கும் அட்டமா சித்திகளை உபதேசித்து அருள வேண்டினர்.

பராசக்தியாய் எங்கும் நிறைந்திருக்கும் உமாதேவியை எப்பொழுதும் சிந்திக்கும்படிக் கூறினார். அவர்களின் ஊழ்வினையின் வலிமையால் உமாதேவியை சிந்திக்காமல் ஐயன் அருளிய மந்திரத்தை மறந்தனர்.

இதனை அறிந்த சிவபெருமான் சினந்து அப்பெண்களை பட்டமரங்கள் போல் தங்களது அழகு, ஐஸ்வர்யம் இழந்து பட்டமங்கை என்னும் தலத்தில் ஆலமரத்தின் கீழ்ப் பாறையாகக் கிடக்க சபித்தார். மனம் தளர்ந்த பெண்கள் தங்கள் சாபம் தீருவது எப்பொழுது என வினவ, ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் மதுரையிலிருந்து தாமே வந்து அவர்கள் சாபத்தை நீக்கி அட்டமா சித்திகளையும் ஓதுவதாக கூறியருளினார்.

சிவகங்கை மாவட்டத்தில் இன்றும் பட்டமங்கை என்னும் தலத்தில் அவர்கள் பாறைகளாக கிடைப்பதாக கூறுகின்றனர்.

ஆறுபெண்களும் ஆயிரம் வருடங்கள் ஆலமரத்தடியில் பாறையாகக் கிடந்தனர். அவர்கள் சாபத்தை தீர்ந்திட திருவுள்ளம் கொண்ட ஐயன் அவர்களின் சிரசின் மீது தம் திருக்கையை வைத்து அட்டமா சித்திகளை உபதேசித்தார். அட்டமா சித்திக்கள் அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞானத்தை அடையும் மார்கமாகும். கார்த்திகைப் பெண்கள் உமாதேவியை தியானித்து அட்டமாசித்திகளைப் பயின்று கயிலாயம் அடைந்தனர்.

**பல்லவி**
அட்டமாசித்திதன்னையேகார்த்திகைபெண்களுக்கோதி
அன்னையைசிந்தித்துசித்திஅனைத்தையும்அடையச்செய்தாய்
**அனுபல்லவி**
தணியாதகோபம்கொண்டுஅன்னையைநினையாத
அறுவரைபட்டமங்கலத்தனில்கீழ்க்கல்லாக்கினீர்
**சரணம்**
ஆயிரம்ஆண்டிற்குப்பின்அகந்தைநீங்கிதூய்மை
அடைந்திடவேஅவர்கள்முன்ஞானஆசானாயத்தோன்றி
தாயின்தயவுடனேநீயும்அவர்களின்
தலைமீதுகைவைத்துஓதியருளினீர்

**34 விடை இலச்சினை இட்ட படலம்**

காஞ்சியிலுள்ள காடுகள் அனைத்தையும் வெட்டி நகரமாக்கிய காடுவெட்டி சோழன் ஓர் சிறந்தசிவ பக்தன். சிவ புரணங்களை தவறாமல் நாள் தோறும் கேட்பான்.

காடுவெட்டி சோழனுக்கு மதுரையில் வாழும் அங்கயற் கண்ணியையும், சோமசுந்தர்ரையும் தரிசிக்க மிகுந்த ஆசை உண்டாயிற்று. அதே நினைவில் படுத்த சோழனின் கனவில், வெள்ளி அம்பலத்தான் சித்தர் வடிவில் தோன்றி அன்றிரவே தன்னந் தனியனாக வந்து தன்னை தரிசித்துச் செல்லுமாறுகூறியருளினார்.

சோழனும் தனியாக அன்றிரவே மதுரை மாநகர் நோக்கி புறப்பட்டான். வழியில் வைகை ஆற்றை அடையும் போது வெள்ளம் கரை புரண்டோடியது. வெள்ளத்தைக் கண்ட மன்னன் உள்ளம் கலங்கினான். மறுபடியும் சிவபெருமான் சித்தர் வடிவில் தோன்றி, வெள்ளத்தை வற்றும்படி செய்தார். பின் மன்னனை அழைத்துக் கொண்டு வைகை ஆற்றினைக் கடந்து, வடக்குமதில் வாயிலை திறந்து, கட்டுக் காவல்களைத் தாண்டி சோழனை கோயிலினுள் அழைத்துச் சென்றார்.

அவன் பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடிய பின் ஐயனின் கருணையைப் போற்றி நீண்ட நேரம் துதிபாடினான். சித்தர், பாண்டிய மன்னன் இதனை அறிந்தால் ஆபத்துநேரிடும் என்று துரிதப்படுத்தி சோழனை வைகையாறு வரை சென்று நெற்றியில் திருநீறு இட்டு வழி அனுப்பினார். பின் திரும்பவும் கோயிலுக்குச்
சென்று, வடக்கு மதில் வாயிலை மூடி, ரிஷப முத்திரையிட்டார்.

காலையில் வாயில் திறப்பவர்கள், வடக்குவாயிலில், ரிஷபக்குறி பொறிக்கப்பட்டுள்ளதைக் கண்டு அஞ்சினர். குலபூக்ஷண பாண்டியனிடம் சொல்ல, பாண்டியனும் இந்தமாயையைச் செய்தவர்யாராக இருக்கக்கூடும் என்றுகவலைக் கொண்டு சிந்தித்துக்கொண்டு, அன்றிரவுதரையில்படுத்துஉறங்கினான்.

அன்றிரவு சிவபெருமான் குலபூஷணின் கனவில் தோன்றி, காடு வெட்டி சோழன்தன்னைக்காணமிகுந்தஆசைக்கொண்டதால், தானே வடக்கு வாயிலைத் திறந்து, தரிசனம் செய்து வைத்ததாக கூறினார். அவனை அனுப்பிய பின் வடக்கு வாயிலை தாழிட்டு ரிஷப குறியையும் தானே இட்டதாக கூறினார்.

மன்னனும் ஐயனின் திருவிளையாடலை அனைவரிடத்தும் கூறி மகிழ்ந்தான். சில காலத்திற்கு பின் குல பூஷண பாண்டியன்
தன் மகன் இராஜேந்திரனுக்கு முடி சூட்டிய பின் இறைவன் திருவடி அடைந்தான்.

**பல்லவி**
கனவில்சித்தராய்வந்துகாடுவெட்டிசோழனை
தனியனாய்வந்துன்னைதரிசிக்கச்சொன்னாய்
**அனுபல்லவி**
மனவலிமையுடன்வந்தவனைவழியில்
வைகைவெள்ளம்வந்துதடுத்திட்டது
**சரணம்**
திரும்பவும்சித்தவடிவில்சோழன்கைபிடித்துன்னை
தரிசிக்கசெய்தபின்விபூதியிட்டனுப்பினீர்
திருக்கோயில்வடக்கதவில்இடபக்குறிகண்டு
இடிந்தபாண்டியன்கனவில்நடந்ததைஉரைத்தீர்

**35 தண்ணீர் பந்தல்வைத்த படலம்**

இராஜேந்திர பாண்டியன் செங்கோல் ஆட்சி செய்யும் காலத்தில் காடு வெட்டி சோழன் வெளிப்படையாகவே சோமசுந்தர்ரை வணங்க எண் ணி, பாண்டியனின் நட்பைப் பெற்றிட தன் மகளைஇராஜேந்திரனுக்கு திருமணம் செய்துக் கொடுக்க எண்ணம் கொண்டான். வஞ்சக நெஞ்சம் கொண்ட அவன் தம்பியான அரச்சிங்கன் தமயனை வஞ்சித்து அவனுக்குப் பேசிய சோழன்மகளை தானே மணந்தான்.

காடு வெட்டி சோழன் தன் மருமகனே நாட்டையாள வேண்டும் என்ற ஆசையில் தன் மருமகன் துணைக் கொண்டு பாண்டியன் மீது படை எடுத்தான். இதனை அறிந்த பாண்டியன் சோமசுந்தரர் திருவடிகளை வணங்கி அன்று சோழனின் வேண்டுதலுக்கு இசைந்து அவனை அழைத்து வந்து தரிசிக்க வைத்ததை நினைவு கூர்ந்தான். இப்போது தனது தம்பியுடன் பகைவனாய் படையெடுத்து வந்துள்ளதைக் கூறி, அவனுக்கு துணை போவது நியாயமா என்று வருந்தினான். ஐயன் மறுநாள் சோழனைப் போருக்கு வருமாறு அழைக்கும் படி கூறி, எப்படியும் வெற்றி பாண்டியனுடையதே என்று கூறினார்.

மறுநாள் பாண்டியனும் சோழனும் கடும் போர் புரிந்தனர். அப்போது வேனிற் காலம் ஆகையால் நீர் நிலைகள் வற்றின. இரு சேனைகளும் நீர் வேட்கையால் வாடித் தவித்தனர். இவ்வாறு அனைவரும் வருந்தும் சமயத்தில் கூடற்பெருமாள் இராஜேந்திரன் படை இருக்கும் இடத்தில் நான்கு வேதங்களும் நான்கு தூண்களாக பொருந்தியஒருதண்ணீர் பந்தல் அமைக்கும்படி கட்டளையிட்டார். அதன் கீழ்சிவகோலம் பூண்டு அனைவருக்கும்தாகத்தை தீர்த்து அருளினார்.

தாகம் தீர்ந்தவுடன் பாண்டியன் படை வீரர்கள் புத்துணர்ச்சியுடன் போரிட சோழர் படை புறமுதுகிட்டோடியது. வெற்றி பெற்ற பாண்டியன் ஐயனிடம் தான் என்ன செய்யட்டும் என வேண்டினான். ஐயனும் அவனுக்கு இசைந்ததை செய்யுமாறு பணித்தார்.

தஞ்சமடைந்த சோழனுக்கு பரிசு பொருள்கள் கொடுத்து அனுப்பி வைத்தான் பாண்டியன். அரசச்சிங்கனின் ஆணவம் நீங்க அவனை ஒதுக்கிவைத்தான். இராஜேந்திரன் இவ்வாறு எல்லோருக்கும் நல்லவனாய் வாழ்ந்து வந்தான்.

**பல்லவி**
அண்ணனுக்குப்பதிலாய்தம்பிக்குதன்பெண்ணை
மணமுடித்துவைத்தான்காடுவெட்டிசோழன்

**அனுபல்லவி**
மண்ணையும்தன்மருமகனேஆண்டிட
எண்ணம்கொண்டசோழன்பாண்டியன்மேல்போர்தொடுத்தான்
**சரணம்**
தஞ்சமென்றடைந்தஇராசேந்திரபாண்டியனுக்கு
அஞ்சேல்என்றசொல்லிஅபயம்தந்தருளினீர்
வெஞ்சமரில்சேர்ந்தவீரர்களுக்குதண்ணீர்
பந்தல்வைத்துதாகசாந்திசெய்தீர்

**36 இரசவாதம் செய்த படலம்**

பாண்டிய நாட்டில் சிறந்த சிவதலமாகிய திருப்பூவணத்தில் பொன்னனையாள் என்ற மங்கை சிவ தொண்டு புரிந்து வந்தாள். அழகிய வடிவம் கொண்ட அவள் ஆடல் பாடல்களில் வல்லவளாக இருந்தாள். அவள் தினந்தோறும் நீராடி சிவனை பூஜித்து, கோயில் சென்று கோயிலை சுத்தம்செய்து, சிவனடியார்களுக்கு உணவளித்தப் பின் தான் உணவருந்தி வந்தாள்.

அவளின்அன்பைஉலகத்தாருக்குஅறிவிக்கஎண்ணம்கொண்டஐயன் அவள் உள்ளத்தில் தங்கத்திலான் ஐயனின் திருவுருவத்தை உருவாக்கும் ஆசையை புகுத்தினார். ஆடல், பாடல்களில் மூலம் வரும் வருவாய் அனைத்தையும் அடியார்களின் தொண்டிற்கேபயன்படுத்தியதால் பெருமானின் திருவடிவத்தை உருவாக்க பொருள் அவளிடத்தில் இல்லை. இதனால் வருத்தமுற்ற பொன்னனையாள் தனக்கு அருளுமாரு ஐயனை வேண்டியனாள்.

ஒரு நாள் சிவபெருமான் அடியார்களது கூட்டத்தில் சித்தர் ஒருவராய் பொன்னனையாள் இல்லம்வந்து உணவருந்தாமல் தனியாக வீற்றிருந்தார். தாதிகள் அதை உணர்ந்து அவரை உணவருந்த அழைத்தனர். அதற்கு மறுத்த சித்தர் அவர்களின் தலைவியானபொன்னனையாளை அவரிடம் அழைத்து வருமாறு கூறினார். தாதிகள் இதனைபொன்னனையாளிடம் கூறினர். அவள் உடனே சித்தரிடம் சென்று வணங்கி, அவரது திருவுள்ளம்படி தொண்டு புரிவதாகக் கூறி உள்ளே வரும் படி வேண்டினாள். ஐயன் மனத்துள் நகைத்து, பேரழகுடைய அவள் இளைத்திருக்கும் காரணம் கேட்டார். அதற்கு அவள்தனதுஆசையைக்கூறி, அவள் பொருள்கள் எல்லாம் சிவனடியார்களின் தொண்டிற்கே செலவாகி விடுவதால், தன் எண்ணம் நிறைவேற எனவும், அதனால் அவள் இளைத்ததாக கூறினாள்.

உடனே சித்தர் சிறுவயதிலேயே வாழ்வில் இளமையும் செல்வமும் நிலையற்றவை என்பதை உணர்ந்து, சிவனை வழிபட்டு, சிவ தொண்டு செய்தமையால் அவள் இம்மைப் பயனையும்மறுமைப் பயனையும் பெற்று விட்டதாக கூறினார். மேலும் அழிவில்லாத ஐயனின் திருவுருவைஅவள் செய்வாள் என உறுதி கூறி, வீட்டிலுள்ள பித்தளைப் பாத்திரங்களைக் கொண்டு வரச்சொன்னார். அவற்றின் மீது சித்தர் திருநீற்றை தூவி அவையாவும் பொன்னாகுக என தியானித்துபொன்னனையாளிடம் அன்றிரவு இவை அனைத்தையும் நெருப்பிலிட்டால் அவை பொன்னாக மாறும் என்றும் அவற்றைக் கொண்டு ஐயனின் திருவுருவை அவள் வடியமைக்குமாறு கூறி யருளினார்.

இரவு அங்கேயே தங்கிகாரியத்தை முடித்துத் தர வேண்டிய பொன்னனையாளிடம் தான் மதுரைத் சித்தர் எனக் கூறி மறைந்தருளினார். பொன்னனையாளும்அவர்கூறியபடிசெய்ய, பாத்திரங்கள் அனைத்தும் ஐயன் கூறியது போல் பொன்னாயிற்று. அந்த பொன்னால் ஐயன் திருவடிவம் அமைத்து பிரதிஷ்டைசெய்தாள். சில காலத்திற்கு பின் சிவபதம் அடைந்தாள்.

**பல்லவி**

திருபுவணத்துக்கணிகைபொன்னனையாள்
திருவுருவம்பொன்னால்அமைத்திடஆணைக்கொண்டள்

**அனுபல்லவி**

வருவாய்அனைத்தும்உந்தன்வழிபாட்டிற்கேசெல
வானதால்விருப்பம்நிறைவேறாமல்மெலிந்தாள்

**சரணம்**

சித்தனாய்வந்துஅத்தனைப்பாத்திரத்தையும்
அன்றிரவேஅனலிலிட்டால்வேண்டியபொன்கிடைக்குமென்றாய்
மொத்தபொன்னைக்கொண்டமைத்தமோகனவடிவைக்கண்டு
முத்தமிட்டுமும்முறைபிரதட்சணம்செய்தாய்

**37 சோழனை மடுவில் வீழ்த்திய படலம்**

சுந்தரேசபாத சேகர் பாண்டியன் ஓர் சிறந்த சிவபக்தன். வேற்படையால் பல குறுநிலமன்னர்களை வென்றவன். மிகுந்த சிவபக்தனான அவன் ஓரளவு சேனைகள் வைத்துக்கொள்ளபணத்தை வைத்துக் கொண்டு, மற்றவற்றை சிவகோயில்திருமணிகளுக்கே செல விட்டான். இதனையறிந்த சோழ மன்னன் பாண்டியன் மீது படுயெடுத்தான் வந்தான். பாண்டியன் ஐயனிடம் சென்று தான் என்ன செய்வது என வேண்டினான் பாண்டியனை சோழனுடன்போரிடுமாறுகூறி, தாம் வந்து போரில் உதவி புரிவதாக ஓர் அசரீரி ஒலித்தது.

பெரும் கடல் போல் திரண்டுருந்த சோழனுடைய படைக்கு முன் பாண்டியனது படை ஓர் சிறு ஓடைப் போல் தோற்றத்தை அளித்தது. அச்சமயம் எம்பெருமான் வேடுவன் திருவுருவம் கொண்டுகுதிரை மீது அமர்ந்து, வேற்படையேந்தி சோழ மன்னனுக்கு எமன் போல் கட்சி தந்தார். வேடுவனாக வந்த ஐயன் முதலில் தன்னிடம் போரிட்டு பின் பாண்டியனுடன் போரிட சோழனை அழைத்தார்.

இருவரும் பயங்கரமாக மோதினார்கள். முடிவில் சோழப்படை பயந்து புறமுதுகிட்டு ஓடிற்று. உடனே வேடன் வேடம் தரித்த எம்பெருமான் மறைந்தார்.சற்றே திரும்பிய சோழன் வேடுவனைக் காணாத்தால் பயம் நீங்கி மீண்டும் மதுரையை நோக்கி பாண்டியனை துரத்தினான். பாண்டியன் செய்வது அறியாமல் ஓர் மடுவில் வீழ்ந்தான். துரத்தி வந்த சோழனும் குதிரையோடு மடுவில்வீழ்ந்தான் சுந்தரனாரின் பேர்ருளால் பாண்டியன் கரை சேர்ந்தான். சோழன் மடுவில் ஆழ்ந்து இறந்தான். சோமசுந்தரர் அருளால் பல்லாண்டு சுந்தரேசபாத சேகரன் நல்லாட்சி புரிந்தான்.

**பல்லவி**
சேனைச்செலவைக்குறைத்துஉன்பணிசெதிட்டான்
சுந்தரேசபாதசேகரபாண்டியன்
**அனுபல்லவி**
சேனைபலம்அறிந்துபாண்டியனைவீழ்த்தவந்த
சோழனுக்குயமனாய்காட்சியளித்தீர்
**சரணம்**
மறைந்தீர்எனத்தெரிந்துதிரும்பியசோழனைக்கண்டு
பயந்தபாண்டியன்ஓடிமடுவில்வீழ்ந்தான்
பிறைமதியணிந்தோன்உன்அருளால்பின்தொடர்ந்த
சோழனும்வீழ்ந்திறக்கபாண்டியன்பிழைத்தெழுந்தான்

**38 உலவாக் கோட்டை அருளிய படலம்**

மதுரை மாநிலத்தில் வேளாளர் குடியிலே அடியார்க்கு நல்லானும் அவனது மனைவிதருமசீலையும் வாழ்ந்து வந்தனர். நல்லவனுக்கு கிடைக்கும் ஊதியத்தில் ஆறிலொரு பங்கைஅரசுக்கு செலுத்தி விட்டு மீத முள்ளதை சிவனடியார்களுக்கு அமுது படைப்பதில் செலவழித்து அதனையே விரதமாகக் கொண்டு வாழ்ந்து வந்தான். நல்லானின் நற்குணத்தை உலகறியச்செய்ய எண்ணம் கொண்ட ஈசன் அவனது நிலத்தில் விளைச்சல் குறையுமாறு செய்தார்.

செல்வம் இல்லாமல் போனாலும் மனம் தளறாத நல்லான் கடன் வாங்கி அடியார்களுக்குஅன்னமிட்டான் நல்லான். இறுதியில் மனைவியுடன் பட்டினியும் கிடக்க நேரிட்டது. தமதுவிரதத்தை முடிக்க முடியாததால் தான் உயிரோடு இருப்பதில் அர்த்தமில்லை என்ற முடிவுடன், ஐயனிடம் தனது சிவ வழிபாடு தடைப்பட்ட பின் இறப்பதே மேல் என வருத்தமுடன்முறையிட்டான்.

அப்போது அவனது இல்லத்தில் எடுக்க எடுக்க குறையாத அரிசிக் கோட்டையை தாம் அமைத்துள்ளதாகவும் அதிலிருந்து தானியங்கள் எடுத்து சிவனடியார்களுக்கு அமுது படைத்து தடையில்லாமல் சிவ தோண்டு புரியலாம் என ஓர் அசரீரி ஒலித்தது.

ஐயனை வணங்கி வீடு சேர்ந்த நல்லான் அசரீரி கூறியபடி அவனது இல்லத்தில் அரிசிக் கோட்டையைக் கண்டு மகிழ்ந்து வந்தவர்களுக்கு எல்லாம் அமுது படைத்து இறுதியில் மனைவியுடன் சிவபதம் அடைந்தான்.

**பல்லவி**
அடியார்க்குநல்லான்சிவனடியார்களுக்கு
அமுதுபடைப்பதில்தன்பொருளைச்செலவழித்தான்
**அனுபல்லவி**
பிடியரிசியும்இன்றிகடனும்கொடுப்பாறின்றி
மனைவிதர்மசீலையுடன்பட்டினிகிடந்தான்
**சரணம்**
வாட்டமுற்றிறக்கத்துணிந்தநல்லானைத்தடுத்துநிறுத்தி
வற்றாதஅரிசிக்கோட்டைஅளிப்பதாய்விண்ணில்உரைத்தீர்
வீட்டையடைந்துதான்யகோட்டையைக்கண்டதும்நல்லான்
விருந்துசமைத்துபடைத்தான்

**39 மாமனாக வந்து வழக்குரைத்த படலம்**

மதுரையம் பதியில்  குபேரனைப்  போல செல்வமுடைய தனபதி என்ற வணிகனுக்கு குழந்தை இல்லாத்தால் தன் தங்கையின் மகனையே தன் மகனாக ஏற்றுக் கொண்டான். தன் பிள்ளையை தத்து தந்த தங்கையிடம் நன்றி பாராட்டாத தனபதி தன் மனையின் தூண்டுதலால் தங்கையிடம் சதா சண்டையிட்டு வந்தான். தன் மகனால் இம்மை, மறுமைப் பயனை அடையும் தன் அண்ணுக்கு ஏன் இத்தனைச்  செருக்கு என தன் அண்ணை ஏசினாள் அவனது சகோதரி. சகோதரின் சொல் தாளாமல், மறு பிறவியிலாவது மகப்பேறு பெற, அவன் தன்னிடம் உள்ளசொத்துக்கள் அனைத்தையும் தன் தத்துப் பிள்ளைக்கு உரிமையாக்கி தவம் செய்ய கானகம்சென்றான்.

தனபதி இல்லாததால் அவனுடைய பங்காளிகள் சொத்துக்கள் அனைத்தையும் பறித்துக்கொண்டனர். செய்வதறியாது தனபதியின் தங்கை சோமசுந்தர கடவுளை வணங்கி தன்நிலையைக் கூறி தனக்கு யாருமில்லாத்தால் ஐயனே கதியென தஞ்சமடைந்தாள்.

வருத்தத்துடன் உறங்கிய தங்கையின் கனவில் ஓர் அந்தணனாக தோன்றிய ஐயன் மறு தினம்அவளது பங்காளிகளை தரும சபைக்கு அழைத்து வந்தால் அறிவில் சிறந்த பெரியோர்கள் அந்தபொய் வழக்கினை தீர்த்து அவளது சொத்துக்களை மீட்டு தருவதாக கூறிய-ருளினார். மறு நாள்பங்காளிகளை தருமசபைக்கு அழைக்க, அவர்கள் அவளை தகாத முறையில் பேசிகொடுமைப் படுத்தினர்.

தரும சபையில் நடந்த வற்றை தனபதியின் சகோதரி கூற, ஏவலாளர்கள் மூலம் பங்காளர்கள்அழைத்து வரப்பட்டார்கள். அச்சமயம் சிவபெருமான் வணிகன் வேடன் பூண்டு அங்கு வந்தார். அந்த சபையில் தர்மம் இல்லையோ, செங்கோல் ஆட்சி கொடுங்கோல்லாக மாறிற்றோ என்ற கேள்விகளை எழுப்பினார். பின் தனபதி தன் தங்கையையும் மருமகனையும் தேற்றினார். பங்காளிகளுடன் இட்ட வழக்கில் தருமசபை மன்றத்தாரிடம் நியாயம் கேட்டார்.

மன்றத்தார் இரு தரப்பினரது வழக்கையும் ஆராய்ந்து பங்காளிகளின் வழக்கு பொய் வழக்கு எனக் கூறினர் இதனைக் கேட்ட பங்காளிகள வந்தவன் வணிகன் தனபதி அல்ல என வாதிட்டனர்.  உடனே  சிவபெருமான்  குடிப்பெயர்,  பட்டப்பெயர் வழிவழி வம்சப்பெயர்,  யாவற்றையும் முறையாக கூற, மன்றத்தார் இவன்  தனபதியே என முடிவுக் கூறினார்கள். பயத்தில் பங்காளிகள் ஓடி மறைத்தார்கள். மன்றத்தார் தனபதி சொத்துக்கள் அனைத்தும்மருமகனையேச் சேரும் என தீர்ப்பு கூறினார்கள்.

அனைவரும் காணும் வண்ணம் மாமனாகிய வந்த சோமசுந்தர கடவுள் கோயிலினுள் சென்று மறைந்தார். இச்செய்தியை அறிந்தமன்னன் சுந்தரேசபாதசேகர பாண்டியன் தனபதியின் மருமகனுக்கு பல பரிசுகள் அளித்து மகிழ்ந்தான். சில ஆண்டுகளுக்குப் பிறகுதன் மகன் வரகுண பாண்டியனுக்கு முடிசூட்டிய பின் சிவபதம் அடைந்தான்.

**பல்லவி**

தனத்தைதனபதியும்தத்தெடுத்தமருமகனுக்கீந்து
மகப்பேறுபெற்றிடவேதவமியற்றமனைநீங்கினான்

**அனுபல்லவி**

தனத்தைசூதாகவேதாயத்தார்பறித்துக்கொள்ள
தங்கையும்மருமகனும்உன்னைச்சரண்அடைந்தனரே

**சரணம்**

தனபதிதங்கையும்உந்தன்சொற்படிகேட்டு
தருமசபைஅமைத்துஉன்னைநினைத்தாள்
தனபதியாகவேவந்துவழக்குரைத்தபின்மறைந்த
மர்மத்தையறிந்தமன்னனைஅடிபணியச்செய்தாய்

**40 வரகுணனுக்கு சிவலோகம் காட்டிய படலம்**

வரகுண பாண்டியன் சிவபெருமானின் உண்மை பக்தன். ஒரு நாள் வேட்டையாடி திரும்பும்நேரம் சோர்ந்து நித்திரைச் செய்யும் ஓர் அந்த ணன் மீது அவனது குதிரை ஏறி, அந்த அந்தணன் இறந்தான். அவன் இறப்பிற்கு காரணமானான மன்னனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்து வாட்டியது பிரம்மஹத்தி தோஷம் நீங்க பல வகையான தான தர்மங்கள் செய்தும் தோஷம் நீங்கவில்லை. மேலும் பரிகாரங்களும், பிராயசித்தங்களும் செய்தான். அந்தணர்களின் அறி-வுரையின்படி ஐயனின் கோயிலில் ஆயிரத்தெட்டு பிரதட்சணங்கள் செய்தான். இதில் மகிழ்ந்த ஐயன்சோழனோடு போரிடுகையில் சோழனை துரத்திச் செல்கையில் திருவிடைமருதூரில் அவனது கொடிய பழி நீங்கும் என அசரீரியாக கூறியருளினார்.

சிலகாலத்திற்குப்பின்சோழனுக்கும்பாண்டியனுக்கும் போர் மூண்டது. புறமுதுகிட்டு ஓடியசோழனை பாண்டியன் துரத்திச் சென்று காவிரியை அடைந்தான். பூசத்துரையில் நீராடி, திருவிடைமருதூரில் உள்ள மகாலிங்கத்தை வணங்க கிழக்கு வாயில் வழியாக உள்ளே நுழைந்தான். அப்போது அவனைத் துரத்தி வந்த பிரம்மஹத்தி உள்ளே செல்லாமல் வெளியேநின்றது. வரகுணன் லிங்கத்தை கண்ணாரக் கண்டு துதித்தான். அப்பொழுது ஜோதி வடிவமானஜயன் பிரம்மஹத்தி கீழக்கு வாயிலில் நிற்பதால் அவ்வழிச் செல்லாமல் மேற்கு வாயில் வழியாகச்மதுரைச் செல்லுமாறு கூறியருளினார்.

வரகுணபாண்டியன் சிலகாலம் அங்கு தங்கி மேலை கோபுரத்தைக் கட்டி, தன்பழியைத்தீர்த்ததெய்வத்தைஇடைவிடாதுதொழுதான். ஓர் சிவராத்திரியன்று சிவலோகத்தில் ஐயன்அன்பர்களுடன் எழுந்தருளியிருக்கும் எழிலைக் காண அருளும் படி ஐயனை வேண்டினான். உடனே சிவபெருமான் சிவகணங்களுக்கு தலைவனானநந்தியிடம்வரகுணனுக்குசிவலோகத்தைக்காட்டும் படி பணித்தார். நந்திதேவரும் வரகுணனுக்கு சிவலோகத்தைக் தரிசனம் காட்டி மகிழ்வித்தார். ப்ரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலியோரின் இருப்பிடங்களையும் சுட்டிக் காட்டி ஒவ்வொன்றையும் விளக்கினார்.

பின்பு சிவலோகம் மறைந்து பழைய மதுரையாக மாறியது. அன்றிலிருந்து மதுரை மாநகர் பூலோக சிவலோகம் என்று புகழுடன் விளங்கி வருகிறது.

**பல்லவி**
வரகுணன்வேட்டையாடிதிரும்புகையில்அவன்
குதிரையால்அடிபட்டுஇறந்தான்ஓர்அந்தணன்
**அனுபல்லவி**
விரதமெடுத்துன்னைஆயிரத்தெட்டுமுறை
வலம்வந்தால்பிரம்மஹத்திவிலகும்என்றறிந்தான்
**சரணம்**
திருவிடைமருதூரில்பிரம்மஹத்தியைகோயில்
கீழ்வாயில்இருக்கச்செய்துமேல்வழிமன்னனைஅனுப்பி
திருகைலாயத்தைமதுரையிலேஓர்
சிவராத்திரியன்றுகண்டிடச்செய்தீர்

**41 விறகு விற்ற படலம்**

வட நாட்டினின்று வந்த ஏமநாதன் என்னும் யாழ்ப்பாணன், வரகுண பாண்டியனால் மிகவும்கௌரவிக்கப்பட்டு பல பரிகளையும் விருது களும் பெற்றன். இதனால் அவன் இறுமாப்படைந்தான். தன்னோடு இசை பாட வல்ல யாழ்ப்பாணர் பாண்டியநாட்டில் இல்லைபோலும் என இறுமாப்போடு இருந்தான்.

மதுரையில் வசிக்கும் பாணபத்ரர் எனும் யாழ்ப்பாணரை அழைத்து போட்டியிடுமாறுவேண்டினான் பாண்டியன். கடவுளின் அருளாலும் அரசனின் ஆசியாலும் ஏமநாதனைவெல்வதாக கூறினான் பாணன். ஐயனிடம் தன்னைக் காக்கும் படி வேண்டினான்.

அவனுக்கு அருள ஐயன் விறகு வெட்டி வேடம் ஏற்று ஏமநாதன் தங்கி இருந்த வீட்டின் முன்இனிமையாகப் பண்ணிசைத்தார். இந்த இசையில் உலகமே அசைவற்று நின்றது. இதனைக்கேட்ட ஏமநாதன் அவரின் விவரம் கேட்டான். இளைய வயதில் தான் பாணனிடம் இசைப் பயிலசென்றதாகவும், என்ன கற்பித்தும் தன் புத்தி ஏற்காததால் பாணர் தன்னை துரத்தி விட்டதாகக்கூறினான். அதன் பின் தான் விறகு வெட்டி பிழைத்து வாழ்வதாகக் கூறினான். திரும்பவும்பாணபத்திரன் விறகு வெட்டியை அதே பாட்டை பாடச் சொன்னான். முன்பு பாடியதை விடஅழகாகப் பாடினான் விறகு வெட்டி.

சாதாறிப் பண்ணில் அவன் பாடியது ஏமநாதனை உலுக்கியது. அப்படியே அவன் மயங்கிவிட்டான். எவருக்கும் தெரியாத சாதாறிப் பண்ணை சர்வ சாதாரமாகப் பாடியவனையே தனதுசீடனாக ஏற்றுக் கொள்ளாத பாணபத்திரன்மறுத்ததால், பாணன் எப்படி பாடுவானோ என பயந்த ஏமநாதன் போட்டியிடாமலேயே இரவோடு இரவாக தன்னுடைய சீடர்களோடு பொருள்களுடன் வடதிசையை நோக்கி சென்று விட்டான்.

பாணன் வரகுண பாண்டியனிடம் நடந்தவற்றைக் கூறினார். தன் வேண்டுதலின் பொருட்டு விறகு சுமந்து, தான் பாணரின் அடிமை என எல்லோரும் கூறும் படி செய்த ஐயனை நினைத்து உருகிவருந்தித் துடித்தான் பாண்டியன். பாணர் மூலம் விவரமறிந்த மன்னன் சோமசுந்தரின்திருவிளையாடலை எண்ணி மகிழ்ந்தான். பாண பத்திரனிடம் பல தேவர்களும் தமக்கு ஏவல் புரியகாத்து நிற்கும் சிவபெருமான் பாணருக்காக விறகு சுமைத்தூக்கி பாணரின் அடிமை என்று தன்னை உரைத்தது எண்ணி மகிழ்ந்து, பாணரே தமக்கு தலைவர் என்றான். பல பரிசுகள்கொடுத்து சோமசுந்தர்ரைப் பாடுதலே இனி பாணபத்திரனின் கடமையாகும் என வேண்டிக் கொண்டான் பாண்டியன்.

**பல்லவி**
ஏமநாதன்கர்வம்அறிந்தபாண்டியன் - பாண
பத்ரனைஅவனுடன்போட்டியாய்பாடச்சொன்னான்
**அனுபல்லவி**
ஏமன்வாசல்திண்ணையில்விறகுவெட்டிச்சென்று
சாதாறிபண்ணைவெகுசாதாரணமாய்இசைத்தீர்
**சரணம்**
பாடியபின்உன்னைநீபாணன்அடிமைஎன்றதும்
ஏமநாதனும்விரைவில்ஏகினான்ஊரினின்றும்
நாடியபாண்டியனுக்குஅருளியவிதம்தனை
நாடாளும்மன்னனிடம்கூறினான்பாணபத்ரன்

**பல்லவி**
ஏமநாதன்கர்வம்அறிந்தபாண்டியன் - பாண
பத்ரனைஅவனுடன்போட்டியாய்பாடச்சொன்னான்
**அனுபல்லவி**
ஏமன்வாசல்திண்ணையில்விறகுவெட்டிச்சென்று
சாதாறிபண்ணைவெகுசாதாரணமாய்இசைத்தீர்
**சரணம்**
பாடியபின்உன்னைநீபாணன்அடிமைஎன்றதும்
ஏமநாதனும்விரைவில்ஏகினான்ஊரினின்றும்
நாடியபாண்டியனுக்குஅருளியவிதம்தனை
நாடாளும்மன்னனிடம்கூறினான்பாணபத்ரன்

**42 திருமுகம் கொடுத்த படலம்**

வரகுண பாண்டியனின் வேண்டுதலால் இதர இடங்களில் பாடுவதை அறவே ஒழித்துசுந்தரேசரின் கோயிலில் மட்டும் மூன்று வேளையும் தவறாமல் பாடி வந்தான் பாணபத்ரன். இதனால் வறுமை அடைந்தான் பாணபத்ரன். தன் பக்தன் வறுமையில் வாடுவதைப் பொருக்காத ஐயன் பாண்டியன் கருவூலத்திலிருந்து செல்வங்களை கவர்ந்து ஒவ்வொரு நாளும் பாணன் முன்வைப்பார். அதனைக் கொண்டு வாழ்ந்து வந்தான் பாணபத்ரன்.சிலநாட்கள்சென்றபின்ஐயன்தான் கொடுப்பதை நிறுத்திவிட்டார். மீண்டும் பட்டினியால் வாடினான் பாணன்.

ஒரு நாள் பாணன் கனவில் சிவபெருமான் தோன்றி, இதுநாள் வரை தான் பாண்டிய மன்னனின்க ருவூலத்திலிருந்து பெருளைக் கவர்ந்து வந்து தந்ததாகவும், இதனை மன்னன் அறிந்தால் கருவூலத்தின் காவலாளிக்குஅல்லவா தண்டனை கிடைக்கும். அதனால் தன்னிடம் அன்புக் கொண்டுள்ள சேரனிடம் தான் கொடுக்கும் ஓர் ஒலையைக் (திருமுகம்) கொண்டு தருமாறுகூறியருளினார் விழித்தெழுந்த பாணன் மகிழ்ந்தான்.

ஐயனுடைய திருமுகத்தை எடுத்துக் கொண்டு பாண பத்ரன் சேரமாநாட்டிற்குச் செல்லும் வழியில் ஓர் தண்ணீர் பந்தலில் தங்கினான். ஐயன் அன்றிரவு சேரன் கனவில் தோன்றி,
தான் மதுரை சித்தர் என்றும் தன்னுடைய பக்தன் பாணபத்ரனுக்கு திருமுகம் கொடுத்துள்ளதாகவும், அவனுக்கு பொருட்கள் கொடுத்து அனுப்புமாறு கூறினார்.

கனவில் தான் கண்டபடி பாணனைத் தண்ணீர் பந்தலுக்குச் சென்று சந்தித்து அந்த திருமுகத்தை பொற் பீடத்தில் வைத்து பாணனை யானையில் அரண்மனக்கு அழைத்துச் சென்றான் சேரன்.

சேரன் பாணனை நன்கு உபசரித்து, வேண்டிய மட்டும் பொருட்கள் அளித்து மதுரைக்கு வழி அனுப்பி வைத்தான். பொருளுடன் மதுரை திரும்பிய பாணன் பலருக்கும் உதவி செய்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தான்.

**பல்லவி**
அரசசபைநீங்கி <u>அனவரதமும்</u> உந்தன்
அருகில்பாடியபாணன்வறுமையில்வருந்தினான்
**அனுபல்லவி**
அரசுபௌக்கிஷத்துபொருள்களைகவர்ந்து
அவன்முன்னேவைத்துவறுமைநீக்கினாய்
**சரணம்**
அரசன்அறியவந்தால்பலருக்கும்துன்பமென்று
பாணபத்ரன்கனவில்தோன்றிசொல்லியபின்
சேரநாட்டரசனுக்குதிருமுகம்தந்துபின்
அவன்கனவிலும்சொல்லிபொருள்கிடைக்கச்செய்தாய்

**43 பலகையிட்ட படலம்**

சேர மன்னனிடமிருந்து பொருள் பெற்ற பின்னர் பாணன் மூன்று வேளையும் பாடுவதல்லாமல், அர்த்த ஜாமத்திலும் பாடி வந்தான். அவனது நியமநெறியை உலகறியச் செய்ய திருவுள்ளம்கொண்ட சிவபெருமான் பெரு மழை பெய்யுமாறு செய்தார்.

பெருமழையையும்பொருட்படுத்தாமல்கோயிலுக்குச்சென்றுஜயனை வணங்கினான். மழையில் நனைத்த விரல் விரைப்புடன் யாழை மீட்டி நடுங்கும் குரலுடன் உடல்மயிர்சிலிர்க்க அமுதமாய் இசைப் பொழிந்தான். பாணனின் இசைத்தொண்டில் மகிழ்ந்தசுந்தரர் பாணனிடம் நவமணிகள் இழைத்த பொற் பலகை ஒன்றை கொடுத்தருளினார் பாணன் இறைவன் ஆணைப்படி அதன் மேல் நின்று பாடினான். பாணபத்ரன் பாடலுக்கு சோமசுந்தரர் அருளிய அருட்கொடையை அறிந்தான் வரகுணன். பாணனை மதுரை நாயகன் என்று போற்றி, அப்பலகையின் மீது இருக்கச் செய்து பரிசுகள் பல அளித்து மகிழ்ந்தான் மன்னன்.

**பல்லவி**
திருக்கோயில்தினமும்சென்றுஅர்த்தயாமத்திலும்
இசைபாடும்பாணனைஉலகறியஆசைக்கொண்டு
**அனுபல்லவி**
பெருமழைபெய்யச்செய்தும்பிறழாமல்அதனையும்
அருள்மழையாகக்கொண்டுஉன்திருக்கோயில்
**சரணம்**
நவமணியிழைத்தபொற்பலகைதனையளித்து
அதன்மேல்நின்றுபாட்டுக்கள்பாணனைபணித்தீர்
அவனேஎங்கள்மதுரைநாயகன்என்றுபாணனைபோற்றி
இரவில்நடந்ததையறிந்தவரகுணன்வணங்கினான்

**44 இசைவாது வென்ற படலம்**

பாண பத்திரர் இறந்த பின் யாழிசையில் வல்லவளான அவர் மனைவி அவருடைய பணியைத் தொடர்ந்தாள். இராஜேந்திர பாண்டியன் பெரும் சிவபத்தனானாலும் பெண்களிடத்தில் பலவீனமானவன். அவனுக்குஆசைநாயகிகள்பலர்உண்டு. அவர்களில் ஒருத்தி நன்றாக யாழ் மீட்டி பாடுவாள். அவள் பாணருடைய மனைவியிடம் பொறாமைக் கொண்டாள். பாணன் மனைவிக்கு எதிராக ஓர் பாடகியைப் பாட விட்டு செருக்கை அடக்க எண்ணி அரசனிடம் தன்விருப்பத்தைத் தெரிவித்தாள்.

ஆசைநாயகியால் வரும் பழியை நோக்காமல் அவளை களிப்பூட்ட மன்னன் ஈழ நாட்டினின்று ஓர்பாடிகியை பாணபத்ரன் மனைவியுடன் போட்டியிட வர வழைத்தான். பின்பு மன்னன் பாணன் மனைவியை அழைத்து, வெளியூரிலிருந்து வந்த பாடகி ஒருத்தி, தனக்குச் சமமாக இவ்வூரில்யாரேனும் பாட இயலுமா என்று கேட்டதாகச் சொன்னான். அவளுடன் போட்டியிட வேண்டினான். அதற்கு, பாணனின் மனைவி சிவபெருமானின் கிருபையாலும், தன் கற்பின்மகிமையாலும் அவளைத் தன்னால்வெற்றிக்கொள்ள முடியும் என்றாள்.

மறு நாள் அரச சபையில் இருவரும் சந்தித்தனர். பாடுவதற்கு முன் இசையைப் பற்றியல்லாத பல கேள்விகளைக் கேட்டாள் ஈழ நாட்டு பாடகி. அவளுடன் இசைவாத்திற்கே தான் வந்துள்ளதாகவும், நாவாதத்-திற்கு அல்ல என்று கூறினாள் பாணனின் மனைவி. தோற்றவர் வென்றவருக்கு அடிமை என்று கூறினான் இராஜேந்திர பாண்டியன் முதலில் ஈழ நாட்டி பாடகிபாட பின் பாணன் மனைவி பாடினாள் .அரசன் நோக்கத்தை அறியாது முதலில் சபையினர்பாணன் மனைவியைப் பாராட்டினர். பின் அரசனின் நோக்கமறிந்தும் ஈழ நாட்டுப் பாடகியின்பாடலுக்கு தலை அசைத்தனர். ஒரே நாளில் தீர்ப்பு கூறுவது கடினமென்று மறு நாளும் பாடச்சொன்னான் அரசன்.

தன் பாட்டை அவையோர் மெச்சுவதால் மகிழ்ந்தாள் ஈழத்துப் பாடகி. உண்மைக்குப் புறம்பாகயாவரும் நடந்துக் கொண்டதால் வருத்தமுற்ற பாணனின் மனைவி சோமசுந்தரரிடம் தன்னைக் காத்தருள வேண்டினாள்.மறுநாள் அவளை வெல்லும் படி செய்வதாக ஓர் அசரீரி ஒலித்து.

மறு நாள் இருவரும் பாடினார்கள். முதல் நாள் போலவே எல்லோரும் ஈழத்துப் பாடகியை மெச்சினர். அப்போது பாணனின் மனைவி எழுந்து, இங்கு அனைவரும் மன்னனின் கருத்தையே ஆமோதிக்கின்றனர். ஆகையால் இருவருக்கும் நியாயம் கிடைக்க சோமசுந்தர கடவுள் முன் பாடலாம் என்றும்,

அப்போது யாராவது ஒருவர் இருவர் பாட்டையும் கேட்ட பின்னர் மனம் துணிந்து இருவருள் ஒருவரை வென்றதாக அறிவிக்கட்டும் என்றாள்.

அனைவரும் ஒப்புக் கொண்டனர். கோயிலில் பல இசைப் புலவர்கள் கூடினர். அவர்கள் நடுவில்சோமசுந்தர்ரும் முதிய புலவர் வேடம் தாங்கி வந்து அமர்ந்திருந்தார். முதலில் ஈழத்து பாடகிபாடினாள். ஒரு சிலர் கைத்தட்டினர். பின்பு சங்கீத சாஸ்திரப்படி பிழை இல்லாமல் யா வரும் மெய்யுருகும் படி பாடினாள் பாணனின் மனைவி.
அவையே அதிரும் படி அனைவரும் கைத்தட்டி ஆரவாரம் செய்தனர். அச்சமயம் முதியவர் வேடம் தாங்கிய புலவர் எழுந்து பாணபத்ரன் மனைவியே சிறப்பாகப்பாடினான், அவளையே வெற்றிப் பெற்றவாக அறிவிக்க வேண்டும் என்று மன்னனைப் பார்த்துக்கூறிவிட்டு மறைந் தார். முதியவர் போல் வந்த அவர் சோமசுந்தர பெருமானே என்று இரா ஜராஜபாண்டியன் உணர்ந்தான். தன் ஆசைநாயகியின் சொல் கேட்டு, நீதி தவறி இவ்வாறு ஒருபோட்டி நடத்தியதை எண்ணி மனம் கலங்கி னான். இங்கு முதியவராக வந்து தீர்ப்பளித்தஜயனின் தீர்ப்பே தனது மு டிவாகும் எனக் கூறி, ஈழத்து பாடகி இன்று முதல் பாணபத்ரனின்மனை வியின் அடிமை எனக் கூறினான். இருவருக்கும் பல பரிசுகள் அளித்த பாண்டியன்சோமசுந்தரரை வணங்கி மகிழ்ந்தான்.

**பல்லவி**
பாண்டியன்காமக்கிழத்திபாணன்மனைவிதன்
இசைச்செருக்கையடக்க அரசனை வேண்டினாள்
**அனுபல்லவி**
பாண்டியனும்ஈழநாட்டுப்பாடினியுடன்
பாணன்மனைவியுடன்போட்டியிடச்சொன்னான்
**சரணம்**
உன்னைபாணன்மனைவிவேண்டஇசைப்போட்டியில்வென்று
ஈழநாட்டுப்பாடினியின்கழுத்தில்ஏறிக்கொண்டிட
மன்னனும்கூறிடவேஅற்புதம்எனச்சொல்லிநீ
மறைந்ததைக்கண்டுமன்னன்பயந்துநடுங்கினான்

**45 பன்றிக்குட்டிகளுக்கு முலைப்பால் கொடுத்த படலம்**

மதுரை நகரத்து வைகையாற்றிற்கு தெற்கே குருவிருந்துறையில் சுகலன், சுகலை என்ற தம்பதிகளுக்கு பன்னிரண்டு குழந்தைகள் பிறந்தனர். சரிவர வளர்க்காத்தால் பெற்றோர் இறந்த பின் குலத்தொழிலை விட்டு காட்டில் வேட்டையாடித் திரிந்தனர். ஒரு நாள் காட்டில் தவம் செய்து கொண்டிருந்த வியாழ குருவின் மீது கல் எறிந்து அவரது தவத்தைக் கலைத்தனர். கோபம் கொண்ட அவர் அவர்கள் அனைவரும் பன்றிக் குட்டிகளாகப் பிறந்து தாய், தந்தையரை இழந்து தவிக்கும் படி சாபமிட்டார்.

தங்களுடைய சாபம் நீங்குவது எவ்வாறு என குருவிடம் கேட்டனர் அப்பிள்ளைகள். சோமசுந்தரர் ,தாயாக வந்து, முலைப்பால் கொடுத்துக் காத்தருளுவார் எனக்கூறினார் வியாழ பகவான். அதன் படி பன்றி அரிசிக்கு பன்றிக்குட்டிகளாக பிறந்தனர் சகலன் புதல்வர்கள்.

இராஜராஜன் காட்டில்வேட்டையாடி வரும் பொழுது பல மிருகங்கள் பலியாகின. இதனை அறிந்த பன்றியரசன் பாண்டியனுடன் போரிட கிளம்பினான். அங்கேயே தங்கி குட்டிகளை கவனித்துக் கொள்ளுமாறு எவ்வளவு கூறியும் கேளாமல் பன்றியரசி கணவனுடன் போராடச் சென்றாள். வெகு தீவிரமாக போர் நடந்தது. எதற்கும் அஞ்சா நெஞ்சம் கொண்ட பன்றியரசன், தொடர்ந்து யுத்தம் செய்தான். பன்றியரசனை கொல்ல முடியாமல் போகவே பாண்டியன் இரும்புத்தண்டால் பன்றி அரசனின் சிரசில் அடிக்க இரத்தம் பீறிட இறந்தான்.

பின்னர் பன்றி அரசியும் மரணம் அடைந்தாள். பன்றி அரசனும் அரசியும் இறந்த இடம் மலையாகி நின்றது. அம்மலை பன்றிமலை என்று வழங்கலாயிற்று.

பெற்றோரை இழந்த குட்டிகள் குடிக்கப் பாலின்றி, இருக்க இடமின்றி தவித்தன. அச்சமயம் ஐயன் காட்டிற்கு அம்மையுடன் வந்து, பன்றிகுட்டிகளுக்குஅவற்றின்முன்தாய்பன்றியாகிநின்றார். குட்டிகள் ஓடி வந்து பால் அருந்தின. அக்குட்டிகளுக்கு முகத்தை மட்டும் பன்றி முகமாக வைத்து, மற்ற உருப்புக்களை மனிதன் உடல் போல் செய்து அருளினார்.

அதன் பின் தாமெடுத்த பன்றி உருவத்தை விடுத்து மறைந்தார். அறிவில்லாதபன்றிக் குட்டிகளுக்கு முலைப்பால் ஊட்டி அவர்களை அறிவுள்ள மனிதர்களாக்கினார் ஐயன்.

**பல்லவி**
வியாழனுக்குதுன்பமும்செய்தசுகலன்புதல்வர்களை
பன்றிக்குட்டிகளாய்பிறக்ககுருவும்சபித்தார்
**அனுபல்லவி**
கியாகாயுடன் காட்டில் அரசாளும் பன்றியும்
வேட்டையாடும்பாண்டியனைஎதிர்த்துப்போரிட்டது
**சரணம்**
தந்தைதாயிழந்துபரிதவித்தகுட்டிகளுக்கு
தாயாகிபரிவோடுமுலைப்பாலும்தந்தாயே
விந்தையாகஅவைகளின்முகம்நீங்கிமற்றவை
மக்கள்உறுப்பினைப்போலேமாற்றிமறைந்தீரே

**46 பன்றிக்குட்டிகளைமந்திரியாக்கியபடலம்**

பன்றிமலையிலே வாழ்ந்துவந்த, பன்றிமுககுமாரர்கள் பன்னிரண்டு பேரும், சகலகலைகளையும் கற்று சிறந்த வீரர்களாகத்திகழ்ந்தனர். அங்கயற்கண்ணி ஐயனிடம் அறிவி இல்லாத மிககொடிய பன்றிகளுக்கு, முலைப்பால்கொடுத்தின் காரணத்தை வினவினாள்.

சகலநூல்களும், தன்னை எல்லா உயிர்களுக்கும் தாய் எனகூறுவதால் தாயின்றி பசியால் வாடித்துடித்த பன்றிக்குட்டிகளுக்கு மனம் இறங்கி முலைப்பால் அளித்ததாக கூறினார். தன்னிடம் பால் அருந்திய அக்குட்டிகள், வலிமையும், அறிவும், வீரமும் பெற்று சிலகாலம் பாண்டியனுக்கு மந்திரிகளாக இருந்துபின் சிவகணங்களாக ஆவார்கள் என பதில் கூறினார்.

ஐயன் அன்றிரவு பாண்டியனின் கனவில் தோன்றி, பன்றி மலையில் வாழும், பன்றிமுகவீரர்களின் திறமைகளையும், தகுதிகளையும் எடுத்துக்கூறி, அவர்களை அவனின் அவையில் மந்திரிகளாக அமர்த்திக் கொள்ளும்படி அருளி மறைந்தார். பாண்டியனும் அவர்களை அழைத்து வந்து, பழைய மந்திரிகளின் குமாரிகளை அவர்களுக்கு மணமுடித்து மந்திரிகளாக அமர்த்திக் கொண்டான்.

பன்றிமுக வீரர்களும் தங்களது கடமைகளைச் சரி வரச் செய்து, அரசனுக்கு தகுந்த ஆலோசகர்களாக இருந்தனர். எட்டு திக்கிலும் பாண்டியனுக்கு வெற்றியுண்டாக்கி, அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்துவந்தனர். பன்றிமுக வீரர்கள் சிலகாலம் சென்றபின் சிவலோகம் அடைந்து  சிவகணத் தலைவர்களானார்கள். இராஜராஜபாண்டியன் சிவபதம் அடைந்தான்.

**பல்லவி**
பன்றிமுககுமாரர்கள்பன்னிரண்டுபேரும்
பன்றிமலையில்பலகலைகள்பயின்றனர்
**அனுபல்லவி**
மன்னன்கனவில்தோன்றிபன்றிமுகவீரர்களை
மந்திரிகளாக்கச்சொல்லிபின்பூதகணமாக்கிக்கொண்டீர்
**சரணம்**
பன்றியின்அறிவைபோக்கியதெப்படியென்றும்
அன்னையும்அதிசயித்துஉன்னிடம்கேட்டாள்
அன்னையிடம்தனக்குசேதனம்அரிசேதனம்
என்றிரண்டும்ஒன்றேஎன்றஎடுத்துரைத்தீர்

**47 கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம்**

இராஜராஜ பாண்டியனுக்குப் பின் அவனது மகன் சுகுண பாண்டியன் நாட்டை சிறப்புடன்ஆண்டு வந்தான்.

ஒருவன் முப்பிறவியில் நல்லறமே புரிந்தும் சிறிதளவு பாபம் செய்தால் இப்பிறவியில் கரிக்குருவியாகப் பிறந்தான். காகம் முதலான பறவைகள் அக்குருவிக்கு இடையூறு அளித்தது. இதனை நினைத்து வருத்தமுடன் ஓர் மரத்தின் பொந்தில் அமர்ந்திருந்து அக்குருவி. அச்சமயம்அந்த மரத்தினடியில் சிவ பக்தர் வந்துஅமர்ந்தானர். அவர்களுள்ஓர்சிறந்தபக்தர் தலம், தீர்த்தம், மூர்த்தி இம்மூன்றும் சிறப்பாக அமைந்துள்ள ஊர் மதுரயே என்றார். அங்குள்ள மூர்த்தி தன்னை வேண்டுவோற்கு வேண்டிய வரங்களை, இப்பிறவியிலேயே தந்தருளுவார் என்றார்.

இதனைக் கேட்ட கரிக் குருவி ஞானம் பெற்று இப்பிறப்பின் காரணத்தை அறிந்தது. தான் இனி செய்ய வேண்டியதை உணர்ந்து, மதுரையை நோக்கிச் சென்றது. பொற்றாமரைக் குளத்தில் நீராடி ஐயனை தினமும் வழிப்பட்டது.

கரிக்குருவியின் வழிப்பட்டில் மகிழ்ந்த ஐயன் ம்ருத்யஞ்சய மந்திரத்தை உபதேசித்தார். அந்த மந்திரத்தின் மகிமையால் கரிக்குருவி சிற்றறிவுநீங்கி, பேரறிவுப் பெற்றது. அக்குருவி ஐயன் உபதேசித்த மந்திரத்தை இடைவிடாது பயின்று , தன் இன பறவைகளுக்கும் சிறப்பு பெயர் வரும் படி வாழ்ந்து சிவபதமடைந்தது.

**பல்லவி**
தலம்தீர்த்தம்மூர்த்தியிலேமதுரையேசிறந்தென்று
சிவநேசர்சொல்கையிலேகரிக்குருவிகேட்டது
**அமளிப்பப்பனமனக**
வலம்வந்தவணங்கியகரிக்குருவிக்குநீ
ம்ருத்யஞ்சயமந்திரம்உபதேசித்தீர்
**சரணம்**
எளிதாயிருந்தஅதன்இனத்தையெல்லாம்நீ
வலியானாகிடவேஅருள்புரிந்தனயே
களிப்போடுகுருவியும்தன்மரபில்யாவரும்
மந்திரத்தைஓதிஉய்யவரம்தந்தீர்

**48 நாரைக்கு முக்தி கொடுத்த படலம்**

பாண்டிய நாட்டில் ஓர் தாமரைகுளத்தில் உள்ள மீன்களை உண்டு ஓர் நாரை வாழ்ந்து வந்தது. மழையின்மையால் இக்குளம் வற்றி இரைக்கிடைக்காமல் நாரை தவித்தது. இரைத் தேடிசெல்கையில் ஓர் காட்டில் சந்தியாமடம் என்ற தடாகத்தை அடைந்தது. அங்கு எண்ணற்றமீன்கள் இருந்தன. முனிவர்கள் அந்த தடாகத்தில் குளித்து எழும் சமயம் மீன்கள் அவர்கள்மேனியெல்லாம் தழுவிச் சென்றன. அதைக் கண்ட இந்த நாரை இம்முனிவர்களைத் தீண்டிச்சென்ற மீன்களை தான் உண்ணுவது தகாது என்று எண்ணியது.

முனிவர்கள் தடாகத்தில் குளித்து, மதுரைப் புராணத்தை ஓதிவந்தனர். அதில் லிங்கத்தின்சிறப்பும், மதுரைப் பதியின் சிறப்பும், பொற்றாமரைத் தீர்த்தத்தின் சிறப்பும் கூறப்பட்டது. இதைக்கேட்ட நாரை அறியாமை நீங்கி, ஞானம் பெற்றது.

பின் மதுரை அடைந்து பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடி, சொக் நாதரை வலம் வந்தது. இவ்வாறு பதினைந்து நாள் வழிப்பட்டது. பதினாறாம் நாள் நீராடுகையில் துள்ளுகிறமீன்களைப் பிடித்து உண்ண எண்ணம் கொண்டது. ஐயனின் அருளால் அறிவுப் பெற்று, தனக்குஇம்மாதிரியான ஆசை வந்ததை எண்ணி வருந்திற்று. மீன்களை உண்ணுதலை தவிர்த்துஅங்கேயே தங்கியிருந்தது சிவபெருமானிடம் தனக்கு நற்கதிஅருளுமாறு வேண்டி நின்றது. அந்நாரைக்கு எம்பெருமான்காட்சியளித்தார்.

அந்நாரை, தன் இனத்தவர்கள் மீன்களை பிடித்து உண்டு பாவிகளாகாமல் இருக்க, பொற்றாமரைக் குளம் எப்பொழுதும் மீன்களற்றதாக இருக்க வேண்டும் என வேண்டியதுடன், தன்னை சிவலோகத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு ஐயனிடம் வேண்டிற்று. தன் இனம் தவிர மற்றஇனப்பறவைகளும நற்கதி அடைய வரம் பெற்றது. ஐயனும் அவ்வாறே வரம்அருளினார். நாரையும் சிவபதம் அடைந்தது.

பொற்றாமரைக் குளத்தில் அன்று முதல் இன்று வரை எந்த நீர் வாழ் உயிரினங்களும் வாழ்வதில்லை.

**பல்லவி**
முனிவர்கள்நீராடும்தடாகத்தில்உள்ள
புண்ணியமீன்களைநாரைஉண்ணத்தயங்கிற்று
**அனுபல்லவி**
கனிவுடன்அவர்கூறும்உன்கீர்த்தியைக்கேட்டபின்
பதினைந்துநாள்வணங்கிவிரதமிருந்து
**சரணம்**
பதினாறாம்நாளன்றுமீனுண்ணவந்தஆசை
அறவேஅடங்கச்செய்துபரகதியும்தந்துஅப்
பதிநீரைமீனறசெய்துநாரைசொல்படி
பறவைகள்பாபியாகாதிருக்கவழிசெய்தீர்

**49 திருஆலவாய்ஆனபடலம்**

சுகுணபாண்டியனுக்குப்பின்பலமன்னர்கள்பாண்டியநட்டைமிகவும் செம்மையாகஆட்சிப்புரிந்தனர். அந்த பரம்பரையில் வந்த கீர்த்தி பூடண பாண்டியன் ஆண்டு வந்த காலத்தில் ஊழிக் காலம் வந்தது. உலகமே தண்ணீரில் மூழ்கியது. இந்நிலையில் அங்கைக்கண்ணி அம்மையின் கோயிலும் பொற்றாமரைத்தீர்த்தமும் அருகில் உள்ள இடபமலை, யானைமலை, பன்றிமலை, பசுமலை, நாகமலை முதலிய மலைகள் அழியாமல் இருந்தன.

பிரளய நீர் வற்றியதும் வழக்கம் போல் சிவபெருமான் உலகத்தை மீண்டும் படைத்தார். சந்திர, சூரிய, அக்னி ஆகிய குலத்தில இருந்து தமிழ் மன்னர்கள் மூவரையும் படைத்தார்.

சந்திரமரபில் வங்கியசேகபாண்டியன் என்னும்அரசன்தோன்றினான். சோமசுந்தர்ருடைய கோயிலைச் சுற்றி நகர் அமைத்து ஆண்டு வந்தான். மக்கள் தொகைப் பெருக எம்பெருமானிடம் தனக்கு பிரளயகாலத்திற்கு முன்புள்ள நாட்டின் எல்லை தெரியாததால் எல்லா மக்களும் நன்கு வாழநாட்டின் எல்லையைக் காட்டி அருளுமாறு வேண்டினான்.

ஐயன் பாண்டியன் முன் சித்தராகத் தோன்றி தமது திருக்கரத்தில் கங் கணமான பாம்பிடம்பாண்டியனுக்கு நாட்டின் எல்லையை அளந்துக் காட்டுமாறு பணித்தார். உடனே அந்த பாம்பானது, ஐயனிடம் தன்னு டைய பெயர் விளங்கும் படி இந்நகரம் அமைய வரம் பெற்று, நகருக்கு வலமாக உடலை வளைத்து வாலை வாயில் கௌவி, நகரின் எல்லை யைக் காட்டியது. பின்னர் சித்தர் கையிலேயே சுற்றிக் கொண்டது. பாம்பு காட்டிய வழியில் சக்கரவானகிரி என்றமதில் எடுத்தான் பாண்டியன்.

தெற்கே திருப்பரங்குன்றமும், வடக்கே இடபமலையும், கிழக்கே திருபு வணமும், மேற்கேதிருவேங்கடமும் எல்லையாக அமைத்தான். ஆலவாய்என்னும்கொடியநஞ்சுடையபாம்புதன்வாயாலும்வாலாலும் எல்லை அமைத்ததால் அந்நகருக்கு ஆலவாய் என்றும் பெயர் பெற்றது. அப்பெரிய மதில் ஆலவாய் மதில் என்று பெயர் பெற்றது. இந்நகரை வங்கியசேகரபாண்டியன் சீரும்சிறப்புமாகஆண்டுவந்தான்.

**பல்லவி**
பிரளயத்திற்குப்பின்வங்கியசேகரபாண்டியன்
உன்திருக்கோயில்நகர்அமைத்துஆண்டான்
**அனுபல்லவி**
பிரஜைகள்பெருகிடவேஇடமின்றிதவித்துன்னை
பிரளயத்திற்குமுன்உள்ளநாட்டின்எல்லைக்காட்டச்சொன்னான்
**சரணம்**
ந்நஒஊ.வந்துதன்கையில்சுத்தியபாம்பை
எல்லையைக்காட்டச்சொல்லிஏவினவுடனே
பொத்தெனைவீழ்ந்தஅந்தபாம்பெல்லைக்காட்டவும்
பாண்டியன்ஆல்வாய்என்றசுவர்எழுப்பிவிட்டான்

**50 சுந்தரப்பேரம்புஎய்தபடலம்**

வங்கியசேகர பாண்டினுடன் விக்ரம் சோழன் வடதிசை மன்னர் பலருடன் போரிட வந்தான். இதை அறிந்த பாண்டியன் கலக்கமுற்று, தன் துயர் துடைக்க ஐயனிடம் வேண்டினான். சோழனுடன் பாண்டியன் போர் புரியும் சமயம் தான் வந்து வெற்றி பெற துணை புரிவதாக அசரீரியாக ஒலித்தார் ஐயன். ஊரக பெரும் போர் மூண்டது. இந்த கடும் போரில் சோழனுடைய பெரும்படையை, பாண்டிய சேனை தாக்குப் பிடிக்க முடியாமல் திணறின. இத் தருணத்தில் தான் வெற்றிப் பெற்றதாக செருக்குடன் சோழன் சங்கை எடுத்து ஊதினான்.

காலம் கடத்தாமல் எம்பெருமான் வேட மன்னர் உருவம் கொண்டு பாண்டிய சேனைக்குதலைவரானார். சுந்தரேசன் என்ற தன் பெயரிட்ட கணைகளை, சோழனின் படை மீதுதொடுத்தார். ஓர் அம்பு பதினாயிரம் வீரர்களைக் கொன்றதும. ஓர் கணைக்கு இவ்வளவு சக்தியா? என்ற ஐயம் மூவியந்த சோழன், அக்கணைம அந்த அரஇத்த உஅதில் சுந்தரேசன் என்று எழு திருப்பம்மகம கண்டு, இது ஆடலரசனின் செயலே என்று உணர்ந்து, பயந்து நடுங்கினான். படைகளுடன் திரும்பினான் சோழன் வட நாட்டுப் படைகளையும்முறியடித்து சுந்தரப் பேரம்பு.வேடனாய் வகசந்நநைநஞைநைஜந்தஜயனும்பாண்டியனதுமலர்ந்தமுகம்கண்டு புன்னகைத்துஅங்கிருந்துமறைந்தருளினார். பாண்டியனும்சங்கெடுத்திஊதிதன்வெற்றியைக்கொண்டாடினான். சோமசுந்தரகடவுளுக்கு மாணிக்கத்தால் இழைக்கப்பட்ட வில்லும்சுந்த ரேசர் என்ற பெயர் எழுதிய அம்பும் படைத்து சிறப்புற நாட்டை ஆண்டு வந்தான்.

**பல்லவி**

விக்ரமசோழனுடன்வடதிசைமன்னர்பலரும்
வங்கியசேகரனுடன்போர்புரியவந்தனர்

**அனுபல்லவி**

பக்கபலமின்றிபாண்டியன்உன்னிடம்
பதறிவந்தபோதுவிண்ணில்அபயம்என்றுசொன்னாய்

**சரணம்ol**

கோரமாய்போர்புரிந்துவெற்றிசங்கைஊதிய
சோழனைஎதிர்த்திடவேடனாய்நின்றீர்
வீரர்களைக்கொன்றகணையில்சுந்தரேசன்பெயர்கண்டு
சோழன்ஓடபாண்டியனும்வெற்றிச்சங்கைஊதினான்

**51 சங்கப் பலகை கொடுத்த படலம்**

வங்கியசேகர பாண்டியன் மதுரை மாநகரை ஆண்ட காலத்தில் ப்ரம்ம தேவன் காசியில் பத்துஅசுவமேதை யாகங்கள் செய்து முடித்தார். பின் தன் மனைவிகளான சரஸ்வதி, சாவித்திரி, காயத்திரியுடன் கங்கையில் நீராட வந்தார். அப்போது வானில் கந்தர்வ கன்னி யாழ் இழிசைத்துப் பாடிக் கொண்டிருந்தாள். சரஸ்வதி யாழிசை தனது வீணை இசையை விடஇனிமையாக இருந்ததால் தன்னை மறந்து அங்கேயே நின்று விட்டாள்.

ப்ரம்மதேவன் சரஸ்வதி வரகால தாமதமானதால், அவள் இல்லாமல் மற்ற இருவருடனும் நீராடி கரையேறினார். தன்னை விட்டு விட்டு நீராடியதால் சினந்த சரஸ்வதியை குற்றம் அவளிடம் இருக்க எவ்வாறு அவள் தன்னை கோபிக்க முடியும் என்ற ப்ரம்மா அந்த குற்றத்தை மனித பிறவி எடுத்து கழிக்க சாபம் இட்டார். சரஸ்வதி மனிதப் பிறப்பின் துன்பத்தை அறியாத ப்ரம்மாவின் சாபம் எந்த விதத்தில் நியாமானது என வினவினாள்.

சரஸ்வதியின்துயர்துடைக்களண்ணியப்ரம்மா, அவளின் அங்கமான அகர முதலான நாப்பத்தெட்டு எழுத்துக்களும் நாப்பத்தெட்டு புலவர்களாக உலகில் பிறந்து சோமசுந்தரரின் அருளால் ஒன்றிணைந்து தன்னை வந்து அடைவாள் என்று கூறினார்.

ப்ரம்மாவின் சாபப் படி சரஸ்வதியின் நாபத்தெட்டு எழுத்துக்களும் வெவ்வேறு மக்களாய் பிறந்து சிவபக்தர்களாக வளர்ந்தனர். இவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து புலவரகளாய் இருந்தனர். சிவபெருமான் ஓர் புலவர் வடிவம் கொண்டு நாப்பத்தெட்டு புலவர்களிடம் அவர்களைப் பற்றி விவரம் கேட்டார் .தாங்கள் தங்களுக்கு உகர்ந்த தலைவரைத் தேடிக் கொண்டிருப்பதாகவும், ஐயன் பேரில் தாங்கள் இயற்றிய நூல்களை அரங்கேற்ற எண்ணம் கொண்டுள்ளதாக கூறினர்.

அவர்களைத் தன்னுடன் ஐயனை தரிசிக்க அழைத்துச் சென்று, அங்கு லிங்கத்துடன் ஐக்கியமானார். தங்களுடன் வந்தது சுந்தரேச பெருமானே என்றுணர்ந்த புலவர்கள் அவரையே தலைவராக ஏற்றனர். அச்செய்தியை அறிந்த வங்கிய சேகரபாண்டியன் தனது சபைக்கு அழைத்தான். அப்புவலர்கள் மன்னனை வாழ்த்தி பாடினர். அவர்களுக்கு பரிசுகள் அளித்து, கோயிலின் வடமேற்குதிசையில் சங்கமண்டபம் அமைத்துக் கொடுத்தான். இந்த நாப்பத்தெட்டு புலவர்கள் சங்க புலவர்கள் என அழைக்கப்பட்டனர்

அவர்களிடம்பொறாமைக்கொண்டஉள்ளூர், மற்றும் வெளியூர் புலவர்களும், இவர்களுடன் வாதம்செய்துதோற்றனர்.

சங்கபுலவர்கள்ஐயனிடம்சென்றுபுலவர்களுடையதிறமையை அளக்கும் கோலாக ஒரு சங்கப் பலகை தரும் படி வேண்டினர்.

ஐயன் புலவர் வடிவில் தோன்றிமுழ சதுரமுள்ள மந்திர சக்தி வாய்ந்த பலகை ஒன்றை அளித்தார். ஒரு புலவர் அப்பலகையில்அமர்ந்து தன் பாடலைப் பாட, அப்பாடல் சரியானதாக இருந்தால் அது அவர் அமர இடமளிக்கும். அடுத்த புலவர் சரியான பாடலை அளித்தால் பலகை நீண்டு அவருக்கும்இடமளிக்கும், இவ்வாறு நாப்பத்தெட்டு புலவர்களின் பாடலும் சரியான பாடல் கொடுத்ததால்அனைவரும் அமரும் அளவு வளரும் என்றார். மேலும் பிற புலவர்கள் பாட வந்தால் இது அளவு கோலாக அமையும் என்று கூறி மறைந்தார்.

நக்கீரர், பாணர் போன்ற சங்கப் புலவர்கள் முதலில் தங்களது சரியான பாடல்களுடன்பலகையில் அமர்ந்தனர். எல்லா சங்கப் புலவர்களும் அதன் மீது அமர அனைவருக்கும்அப்பலகை இடமளித்து. புலவர்கள் எண்ணற்ற பாடல்களை இயற்றினர். பாடல்கள் யாருடையதுஎன்று தெரியாமல் தடுமாறினர். ஐயன் அவர்களுக்கு முன் தோன்றி அவர் அவர்களின் சரியானபாடல்களைப் பிரித்துக் கொடுத்தார். யாவரும் மகிழ்ந்து அப்புலவரை தங்களுடனேயே தங்கும்படி வேண்ட தானும் சங்கப் பலகையில் ஏறி நடுநாயகமாக அமர்ந்தார் ஐயன்.

**பல்லவி**

நான்முகன்சாபத்தால்நாறபத்தெட்டெழுத்துக்களும்
புலவர்களாய்ப்பிறந்துமதுரைக்குவந்தனர்

**அனுபல்லவி**

சான்றோர்களைநீசோமநாதரைக்கண்டு
வணங்கிடச்செய்துமறைந்துவிட்டாயே

**சரணம்**

சங்கமண்டபத்தைஅரசன்அமைக்கஆற்றலைஆளக்க
சங்கப்பலகையும்தந்துபுலவரகள்ஏறியபின்
சங்கைதனை_தீர்த்திடவேபுலவனாய்வந்து
சங்கப்புலவர்நடுவில்நாயகமணியானாய்

**55 சங்கத்தார் கலகம் தீர்த்த படலம**

சங்கப் புலவரகள் நாற்பத்தெட்டு பேரும் வெவ்வேறு தமிழ் பாக்கள் இயற்றி மிகவும் செருக்குற்றிருந்தார்கள். தங்களுக்குள் வேற்றுமைகள் கொண்டார்கள். அவர்கள் சோமசுந்தரரிடம் சென்று அவர்களுடைய பாடல்களை சீர்தூக்கிப் நிறை குறைகளை எடுத்துக்காட்டி அருளுமாறு வேண்டினர்.

சிவபெருமான் அவர்களிடம் தனபதி என்ற வணிகனுக்கும் அவன் மனைவிக்கும் பகலவன்என்றொரு அழகிய ஊமை பாலகன் உள்ளான். அவன் முருகனது அவதாரம் ஆகும். அவன் முன்இவர்கள் தங்கள் பாடல்களைப் பாடினால் அவன் அவர்களின் பாடல்களின் தன்மைகளைசீர்தூக்கி உணர்த்துவான் என்றார். ஊமையினால் எவ்வாறு நல்லன தீயனக் கண்டு சொல்லமுடியும் என்று ஐயம் கொண்ட புலவர்களுக்கு, பாட்டின் தரத்தை தலையசைத்தே உணர்த்துவான் என்று கூறிய ஐயன் கோயிலினுள் சென்று மறைந்தார்.

சங்கப் புலவர்கள் தத்தம் பாடல்களை பகலவன் முன் பாடினார்கள். அதனதன் சிறப்புகளில் தலையசைத்தும், முகபாவத்தாலும் காட்டினான்

பாலகன். நக்கீரன், பாணன், கபிலன் ஆகியமூவருடைய பாடல்களை கேட்கும் போது கண்ணீர் சிந்தி மெய் சிலிர்த்தான் அப்பாலகன். தராசினைப் போல் புலவர்களுக்கு பேசாமலேயே பாடல்களின் தரத்தை உணர்த்தினான் வணிககுமாரன். புலவர்கள் அனைவரும் குரோதம் நீங்கி நட்புடன் வாழ்ந்தனர். நக்கீரன், கபிலன், பாணன் என்னும் மூவரது பாடல்கள் உலகமெங்கும் பரவின. தெய்வப் புலவரகள் அனைவரும் சிறப்புடன் வாழ்ந்தனர்.

**பல்லவி**
சங்கப்புலவர்களின்பாடலின்தரத்தை
அறிந்துகொள்ளஅவர்கள்உன்னைவேண்டினர்
**அனுபல்லவி**
சங்கைதனைத்தீர்க்கமுருகன்அவதாரமாய்
தனபதிக்கொருஊமைப்பிள்ளைஇருக்கிறான்என்றாய்
**சரணம்**
பாடலைசிறுவனும்மெய்ப்பாட்டினாலேயே
மகிழ்ந்துஇகழ்ந்துபுகழ்ந்துபுலப்படுத்தினான்
பாடல்களில்நக்கீரன், கபிலன், பரணன்இம்
மூவர்பாடலும்மிகசிறந்ததென்றுகாட்டினான்

## 2 தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்

வங்கியசேகர பாண்டியன் சோமசுந்தர கடவுளை அலங்கரிக்க பலவித மான நறுமணமுள்ளமலர்கள் கொண்ட நந்தவனம் ஒன்றை அமைத்தான். இதைத் தவிர சண்பக நந்தவனம்ஒன்றையும் தனியே அமைத்தான். இச்சண்பக மலர்களாலான மாலைகளைச் சூட்டி இறை வனை அலங்கரித்ததால் ஐயனை சண்பக சுந்தரர் என்றும் அரசனை சண்பகபாண்டியன் என்றுஅழைத்தனர்.

இளவேனிற் காலத்தில் பாண்டியன் தன் தேவியுடன் அங்கு சென்று தங்கியிருந்தான் அப்பொழுது நறுமணம் மிகுந்த தென்றல் வீசியது. சண்பகமாறன் மணத்தையும் நுகர்ந்துகாற்றுக்கு மணம் இல்லை, அப்படியிருக்க இந்த மணம் எங்கிருந்து வருகிறது என்று எண்ணி திரும்பிப் பார்க்கையில் தேவியின் கூந்தலிலிருந்து வருவதை உணர்ந்தான்அவனுக்குஅம்மணம் கூந்தலுக்கு இயற்கையா, செயற் கையா என்ற ஐயம் எழுந்தது . பின்னர் அரசன் அரண்மனைக்கு வந்து தனது ஐயத்தைப் போக்குவோருக்கு ஆயிரம் பொற் காசுகளுடைய பொற்கிழ தருவதாகக் கூறி அதனை ஏவலாளிகளிடம் கொடுத்து சங்க மண்டபத்துக்கு வாயிலில் பொன்முடியைக் கட்டச் சொன்னான். பல புலவர்களும் தனித்தனியே ஆராய்ந்தும் அரசனின் ஐயத்தை போக்க முடியவில்லை.

தருமி என்ற பெயருடைய ஆதிசைவ மரபில் தோன்றிய ஏழை பிரம்ம சாரி இளைஞன் தன்திருமணச் செலவிற்காக அந்த பொற்கிழி தனக்கே கிடைக்க, அரசனின் ஐயம் நீக்குமாறுதனக்கும் ஓர் பாடல் இயற்றி தந்தருளுமாறு சோமசுந்தர கடவுளிடம் சென்று வேண்டினான் .
உடனே ஐயன் கொங்கு தேன் என்று தொடங்கும் ஓர் பாடலை இயற்றிக் கொடுத்தார்.

அதனைப் பெற்றுக் கொண்டு தருமி சங்க மண்டபத்தில் உள்ள புலவர்களிடம் கொடுத்தான் புலவர்கள் அச்செய்யுளின் சொல்வளத்தையும், பொருள்வளத்தையும் கண்டு மகிழ்ந்து, அரசனிடம் அப்பாடலைக் கூறி பொருள் விளக்கினர்.

அரசன் தன் கருத்துக்கு அது முற்றும் ஒத்திருந்ததால் பொன் முடியை தருமிக்கு கொடுக்க இசைந்தான். அச்சமயம் நக்கீரன் என்னும் புலவன் இப்பாட்டில் பொருட் குற்றமிருப்பதாககூறினான்.

கைக்கெட்டியதுவாய்கெட்டாதுபோகதருமிவருந்தி, ஐயனிடம்குற்றமுள்ளபாடலைதனக்குதந்துஏமாற்றியதாககுற்றம்சுமத்தினான். ஐயனின் பாடலிலே புலவர் குற்றம் கண்டத்தால் இனி ஐயனை யார் மதிப்பார்கள் என்ற கூறி கண்ணீர் வடித்தான். உடனே சோமசுந்தரர் புலவர் வடிவுக் கொண்டு சங்க மண்டபம் வந்து,

புலவர்களை நோக்கி தன் பாடலில் குற்றம் கண்டவர் யார் என்று வினவினார். உடனே நக்கீரர் பாடலில் பொருட் குற்றம் கண்டது தானே என்றும், கூந்தலுக்கு சூடும் மலர்களினாலே மணம் வருகிறது கூந்தலுக்கு இயற்கையாக மணம் இல்லைஎன்றார்.

தேவமகளிர்களுக்குமா என்ற புலவரிடம், அவர்களின் கூந்தலுக்கும் பூக்களினால் உண்டான செயற்கை மணமேஎன்றார்நக்கீரன். இறுதியில் நக்கீரன் வணங்கும் காளத்தியப்பரின் தேவியான ஞானப்பூங்கோதையின் கூந்தலுக்குமா என்று கேட்டார். ஞானப் பூங்கோதையின் கூந்தலுக்கும் அவ்வாறே செயற்கை மணம் தான் என்றான் அதைக் கேட்டு கோபம் கொண்ட ஐயன் தனது நெற்றிக் கண்ணை சிறிதே திறந்துக் காட்ட, அது கண்டும் அஞ் சாத நக்கீரன்நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என்று கூறினான்.

நெற்றிக் கண்ணின் வெப்பம் தாங்காது பொற்றாமரைப் பொய்கையில் வீழ்ந்தான் நக்கீரன். புலவராய் வந்தசோமசுந்தரர் திடீரென்று மறைந்தார்.

**பல்லவி**

அரசன்ஜயம்தனையும்அதனைத்தீர்ப்பதையும்சொல்வோர்க்
காயிரம்பொன்னைப்பரிசாய்அளிப்பதாகச்சொன்னான்

**அனுபல்லவி**

பரமபக்தன்தருமிபரிசைப்பெற்றிடவேஉன்
பாதத்தில்வீழ்ந்திறைஞ்சஓர்பாடலைத்தந்தாய்

**சரணம்**

சக்திஞானப்பூங்கோதைகூந்தலும்இயற்கைமணம்
அற்றதுஎனச்சொல்லிபாடலில்பொருட்குற்றம்சொன்ன
நக்கீரனைநெற்றிக்கண்ணால்முறைத்துநோக்ககீரனும்
நெற்றிக்கண்திறந்தாலும்குற்றம்குற்றமென்றுபொய்கையில்
வீழ்ந்தான்

**53 கீரனைக் கரயேற்றிய படலம்**

நக்கீரன் இல்லாத புலவர் சங்கம் ஞானமில்லாத கல்வி போன்றது என்ற உணர்ந்த சங்கப்புலவர்கள், எம்பிரானையல்லவா நக்கீரன் எதிர்த்துள்ளான், ஆதலால் ஐயன் அருளினால் தான் இந் நிலைமை சீர்படும் என்று உணர்ந்து ,ஐயன் திருவடியில் வீழ்ந்து நக்கீரன் மன்னித்தருள வேண்டினர்.

சோமசுந்தரர்மீனாட்சிஅம்மையுடன்புலவர்கள்தொடரபொற்றாமரைக் கரைக்குவந்தார். சுட்டெரிக்கும் நெற்றிக் கண்ணால் நோக்கிய ஐயன் நக்கீரனை தற்போது அருட் கண்ணால் நோக்கினார். ஞானப் பூங்கோதை கூந்தலுக்கு பழுதுச் சொன்ன தன்னை எம்பிரான் அன்றி வேறுயார் பொருத்தருளுவார் என்றெண்ணிய நக்கீரன் திருக்காளியப்பர் மீது நேரிசை வெண்பாவினால் கைலைபாதி காளத்திபாதி அந்தாதி பாமாலை பாடினார் அந்த அந்தாதியை கேட்ட ஐயன் நேரில் வந்து கைப்பிடித்து நக்கீரனை கரையேற்றினார்.

பிறவிப் பெருங்கடலினின்று தன்னைக் கரையேற்றிய அம்மையப்பனை போற்றி வணங்கிகோபப்பிரசாதம், திருவொழுகூற் றிருக்கை,பெருந்தேவபாணி என்னும் பாமாலைகள் பாடிவழிப்பட்டான் நக்கீரன். சங்கப்புலவர்களும் தங்களது கவிகளால் ஐயனை வாழ்த்தினர்.

சோமசுந்தரக் கடவுள் நக்கீரனை முன் போலவே புலவர் கூட்டத்துள் இருக்கச் செய்து மீனாட்சி அம்மையோடு திருக்கோயிலினுள் சென்றுமறைந்தார் .பின்பு நக்கீரனும் மற்ற புலவர்களும் பொற்கிழி யை அறுத்து தருமிக்குஅளித்தனர்.

**பல்லவி**
சங்கபுலவரகள்வருந்திஉன்னைவேண்ட
செருக்குள்ளநக்கீரனைஅருட்கண்ணால்நோக்கினீர்
**அனுபல்லவி**
அங்கேகைலைபாதிகாளத்திபாதிஅந்தாதி
பாடியநக்கீரரைகைப்பிடித்துகரையேற்றினீர்
**சரணம்**
கோபப்ரசாதம்என்னும்பாமாலைகீரன்புனைந்து
கோயில்கொண்டுள்ளசோமநாதனைவாழ்த்தினான்
கோபம்நீங்கியதும்தருமிக்குபொற்கிழியைத்
தரச்செய்துகீரனைமீண்டும்சங்கப்புவரில்சேர்த்தீர்

## 54 கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்

சோமசந்தரக்கடவுளால்சங்கப்புலவர்கள்கூட்டத்தில்சேர்க்கப்பட்டநக்கீரன்பொற்தாமரைகுளத்தில்தினமும்நீராடிசோமசுந்தரரைவழிபட்டு வந்தான். நக்கீரனுக்கு தமிழ்இலக்கணத்தை சரிவர யாரைக் கொண்டு போதிக்கலாம் என்று அம்மையுடன் ஐயன் கலந்தாலோசித்தார்.

அகத்தியர் மூலம் நக்கீரனுக்கு இலக்கணம் பயில்விக்கலாம் என்று உமாதேவி ஆலோசனைக் கூறினாள். அதன் படி ஒரே நேரத்தில் ஐயன் கீரனுக்கு இலக்கணம் பயிற்றுவிக்க எண்ணம் கொண்டு லோபாமுத்திரையுடன் அகத்தியர் மதுரைக்கு அனுப்பினார். மதுரை கோயில் வந்தடைந்த அகத்தியர் ஐயனை தரிசித்த பின்னர், தனக்கு முன்பு ஐயன் கற்பித்த இலக்கணத்தை கற்பித்து ஐயனின் ஆணையை நிறைவேற்றினார்.

அகத்தியர் சென்றபின், அகத்தியருக்கு கற்பித்தது போல் ஏன் நக்கீரனுக்கு ஐயனே இலக்கணம் கற்பிக்காத்தின் கரணத்தை ஐயனிடம் அம்மை வினவினாள். இறைவனை நாள் தோறும் வழபடுபவன், இறைவன் பணிக்கு பொருள் கொடுத்து உதவுபவன், சொன்ன சொல் மாறாதவன், பொறாமையில்லாதவன் ஆகியோருக்கு கற்றுத் தருபதே தருமமாகும். ஆனால் நக்கீரன் தன் பாடலில் பொருட் குற்றம் கண்டதால் நக்கீரனுக்கு அகத்தியரரைக் கொண்டு கற்பிக்கும் படி பணித்ததாக அன்னைக்கு பதில் அளித்தார். அகத்யரிடமிருந்து இலக்கணம் முழுவதும் கற்ற நக்கீரன் அதை மற்றவருக்கும் போதித்தான். பல காலம் இறைவனைப் பாடி இறைவனடி சேர்ந்தான் நக்கீரன்.

**பல்லவி**
தேவிநினைவுகூறஅகத்தியரைக்கொண்டு
தமிழ்இலக்கணம்தனைகீரனுக்குகற்பித்தீர்
**அனுபல்லவி**
தேவியும்உன்னைஅகத்தியரைப்போல்
கீரனுக்குகற்பிக்காததுஏன்என்றாள்
**சரணம்**
தன்பாடலில்பொறாமைகொண்டுகுற்றம்கண்டநக்
கீரனுக்குபாடம்சொல்லமனம்இல்லைஎன்றீர்
தன்னிலைஅறிந்தகீரன்மற்றபுலவர்களுக்கும்
பாடம்சொல்லிஉன்திருவடியில்சிந்தைசெலுத்தினான்

**55 சங்கத்தார் கலகம் தீர்த்த படலம**

சங்கப் புலவரகள் நாற்பத்தெட்டு பேரும் வெவ்வேறு தமிழ் பாக்கள் இயற்றி மிகவும் செருக்குற்றிருந்தார்கள். தங்களுக்குள் வேற்றுமைகள் கொண்டார்கள். அவர்கள் சோமசுந்தரரிடம் சென்று அவர்களுடைய பாடல்களை சீர்தூக்கிப் நிறை குறைகளை எடுத்துக்காட்டி அருளுமாறு வேண்டினர்.

சிவபெருமான் அவர்களிடம் தனபதி என்ற வணிகனுக்கும் அவன் மனைவிக்கும் பகலவன்என்றொரு அழகிய ஊமை பாலகன் உள்ளான். அவன் முருகனது அவதாரம் ஆகும். அவன் முன்இவர்கள் தங்கள் பாடல்களைப் பாடினால் அவன் அவர்களின் பாடல்களின் தன்மைகளைசீர்தூக்கி உணர்த்துவான் என்றார். ஊமையினால் எவ்வாறு நல்லன தீயனக் கண்டு சொல்லமுடியும் என்று ஐயம் கொண்ட புலவர்களுக்கு, பாட்டின் தரத்தை தலையசைத்தே உணர்த்துவான் என்று கூறிய ஐயன் கோயிலினுள் சென்று மறைந்தார்.

சங்கப் புலவர்கள் தத்தம் பாடல்களை பகலவன் முன் பாடினார்கள். அதனதன் சிறப்புகளில் தலையசைத்தும், முகபாவத்தாலும் காட்டினான்

பாலகன். நக்கீரன், பாணன், கபிலன் ஆகியமூவருடைய பாடல்களை கேட்கும் போது கண்ணீர் சிந்தி மெய் சிலிர்த்தான் அப்பாலகன். தராசினைப் போல் புலவர்களுக்கு பேசாமலேயே பாடல்களின் தரத்தை உணர்த்தினான் வணிககுமாரன். புலவர்கள் அனைவரும் குரோதம் நீங்கி நட்புடன் வாழ்ந்தனர். நக்கீரன், கபிலன், பாணன் என்னும் மூவரது பாடல்கள் உலகமெங்கும் பரவின. தெய்வப் புலவரகள் அனைவரும் சிறப்புடன் வாழ்ந்தனர்.

**பல்லவி**
சங்கப்புலவர்களின்பாடலின்தரத்தை
அறிந்துகொள்ளஅவர்கள்உன்னைவேண்டினர்
**அனுபல்லவி**
சங்கைதனைத்தீர்க்கமுருகன்அவதாரமாய்
தனபதிக்கொருஊமைப்பிள்ளைஇருக்கிறான்என்றாய்
**சரணம்**
பாடலைசிறுவனும்மெய்ப்பாட்டினாலேயே
மகிழ்ந்துஇகழ்ந்துபுகழ்ந்துபுலப்படுத்தினான்
பாடல்களில்நக்கீரன், கபிலன், பரணன்இம்
மூவர்பாடலும்மிகசிறந்ததென்றுகாட்டினான்

**56 இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்**

இலக்கண இலக்கியங்களில் சிறந்த குலசேகர பாண்டியனுக்கு சங்கப் புலவரகளுடன்சங்கப்பலகை இடமளித்தது. குலசேகரனின் கல்வித் திறமையைக் கேள்விப்பட்ட கபிலனின்நண்பனான இடைக்காடன் தமிழ் நூல் ஒன்று இயற்றி அரசனிடம் சென்றுப் பாடிக் காட்டினான். பொறாமையால் குலசேகரன் தன்னுடைய மகிழ்ச்சியை வெளிக் காட்டாமல் இருந்தான். அரசன்தன்னை மதியாமல் இருந்ததைக் கண்டு மாணஉணர்வு மேலோங்க அரண்மனையை விட்டு ஐயன் கோயிலை அடைந்தான் இடைக்காடன்.

தனக்கு நிகழ்ந்த அவமானத்தை சொல்லின் வடிவமாகிய அன்னைக்கும், அதன் பொருளின்வடிவமான ஐயனுக்கும் நிகழ்ந்ததாக தான் எண்ணுவதாகக் கூறி வட திசை நோக்கிச்சென்றான். இதைக் கேட்ட ஐயன் கபிலனுக்கும் இடைக்காடனுக்கும் அருள எண்ணம் கொண்டு திருவாலவாயில் திருக்கோயிலுக்கு நேர் வடக்கே ஓர் திருக்கோயில் அமைத்துஉமாதேவியுடன் அங்கு சென்றார் தங்கினார். சங்கப்புலவர்களும் சிவபெருமான் போன வழியில்போய் அங்கேயே தங்கிவிட்டனர்.

மறுநாள் கோயிலுக்குச் சென்ற சிவனடியார்கள் லிங்கத்தைக் காணாது வருந்தி மன்னனிடம் முறையிட்டார். செய்தியறிந்த மன்னன் செயலற்று செய்வதறியாது வருந்தினான். அச்சமயம் மக்கள் வைகையாற்றின் தென்கரையில் அய்யன் அம்மையுடன் சங்கப்புலவர்கள் சூழஎழுந்தருளியிருப்பதாக கூறினார்கள். உடனே அங்கு சென்று ஐயனை தரிசித்து, மதுரையைவிட்டு அவர் நீங்கி இங்கு வந்தது யார் செய்த பிழையினால் என்ற காரணத்தைக் கூறுமாறு கண்ணீர் மல்க நின்றான்.

தலங்களில்சிறந்ததாகக்கூறப்படும் திருவாலவாயிலில் எண்ணற்ற சிவலிங்கங்கள் உள்ளன. அவற்றுள் அறுப்பத்தாறு லிங்கங்கள் மிகவும் சிறப்பானவை. அவற்றுள் அஷ்டதிக்பாலகர்களால் பூஜிக்கப்பட்ட எட்டு லிங்கங்கள் குபேரனால் பூஜிக்கட்ட லிங்கம் இத்தலத்தில்உள்ளது. அதனால் தான் அங்கு வந்ததாகக் கூறினார் .இத்தலம் அன்று முதல் வட திருவாலவாய் என்று வழங்கப்பட்டது)

மேலும் மன்னன் தனது பக்தனான இடைக்காடனின் பாடலை அவ மதித்ததால் கடம் வனம் நீங்கிதான் இங்கு வந்தாகக் கூறினார். அரசன் தான்செய்தகுற்றத்திற்குவருந்தியதன்னைப்பொருந்தருளுமாறு அப்பனிடம்வேண்ட, ஐயனும் அவன்குறைப் பொருத்து அருள்கூர்ந்து மீனாட்சி அம்மையுடன் கடம்பவனம் திரும்பினார்.

பாண்டியன் இடைக் காடனை சங்கப் புலவரகளோடு அழைத்து வந்து, அவனுடைய பாடல்களைக் கேட்டு தகுந்த மரியாதையுடன்

சன்மானங்கள் பலகொடுத்து சங்கப் புலவர்களிடம் தான் இடைக்காடனுக்கு செய்த குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டினான். பல காலத்திற்குப் பின் ஆட்சியை மகனிடம் ஒப்படைத்து சிவபதம் அடைந்தான்.

**பல்லவி**
குலசேகரபாண்டியன்தன்முன்இசைபாடியகபிலின்
நண்பன்இடைக்காடனைஅலட்சியப்படுத்தினான்
**அனுபல்லவி**
கிலேசமடைந்தகாடன்சொல்லின்வடிவம்அன்னைக்கும்
பொருள்வடிவம்உனக்கும்இதுஅவமானம்என்றான்
**சரணம்**
காடன்பாட்டைஇகழ்ந்ததால்கடம்பவனம்நீங்கி
குபேரன்பூஜித்தலிங்கத்தில்உறைந்ததாய்ச்சொன்னீர்கள்
காடனைகௌரவித்தமன்னனைமன்னித்து
அம்மையுடன்திருக்கோயில்புகுந்தீர்

**57 வலை வீசிய படலம்**

சோமசுந்தரர் அன்னை மீனாட்சிக்கு தனியிடத்தில் வேதத்தின் அதி ரகசியமாக உட்பொருளை உபதேசித்தார் அன்னை விருப்பமின்றி அதைக் கேட்டமையால், கோபம் கொண்ட ஐயன் , மீனவர் மகளாகப் பிறக்குமாறு சபித்தார். அன்னை அப்பனை பிரிந்து வாழ் வதெப்படி என்று தவித்தார். ஐயன் திருவுள்ளம் இறங்கி மீனவப் பெண்ணாய் வாழ்கையில் தாமே வந்து திருமணம் செய்துக் கொள்வதாக வாக்களித்தார்.

இதை அறிந்த வினாயகரும், முருக்ககடவுளும் இந்நிகழ்வுக்குக் காரணம் இந்தச் வேத சுவடிகளால் தான் நிகழ்ந்தது என்றுஎண்ணிஅவற்றை கடலில் வீசி எறிந்தனர். இந்த சமயத்தில்அவர்களை உள்ளே அனுமதித்த நந்திதேவரை சூறா மீனாக கடலில் வாழ சபித்தார் வினாயருக்கு விதிக்கும் சாபம் தன்னையே வந்துசேரும் என்ற காரணத்தினால் அவரசபிக்காமல முருகனைவணிக குலத்தில் ஊமைப் பிள்ளையாகப் பிறந்திட சபித்தார்.

பாண்டிய நாட்டின் கீழைக்கரை கடலோரம் பாக்கம் என்ற ஊரில் மீனவர்கள் வசித்துவந்தனர்.சிவபெருமானிடம் மிகுந்த அன்பு பூண்ட அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் பலகாலம் மகப் பேரின்றி வாடினான். ஒரு நாள் சுற்றத்தாரோடு அவன் கடலுக்கு செல்லும் போது, ஒரு புன்னை மர நிழலில் அன்னை குழந்தையாகப் படுத்து அழுதுக்கொண்டிருந்தது.

குழந்தையைக் கண்ட மன்னன் தன் குறை நீக்கவே ஐயன் அருளினார் என்று மகிழ்ந்தான். குழந்தையுடன் அரண்மனைக்குளடுத்துச் சென்று தன் மகளாக அக்குழந்தையை வளர்த்தான்.
இறைவன் பணித்த படி நந்தி சுறா மீன் வடிவம் கொண்டு கடலில் வீசப்பட்ட வேத நூல்களைதன் சிரசில் தாங்கி காத்து வந்தது. மிகவும் வலிமையான சுறாமீனாக வளர்ந்துதோணிகளையும், மரக் கலங்களையும் கடலிலே போக முடியாத படி தடுத்தது. மீனவ மன்னன் மிகுந்த சிரம்பட்டும் அச்சுறாவை பிடிக்க முடியவில்லை. எவன் அம்மீனை பிடிக்கிறானோஅவனுக்கே தன் மகளைத் திருமணம் செய்து தருவதாக அறிவித்தான் அந்த அரசன்.

அம்மையை மணக்க ஐயன், ஒரு மீனவன் போல் வடிவம் கொண்டு வலையை தன் தோளில் சுமந்து அங்கு எழுந்தருளினார். தன்னை யாரென்று கேட்ட அரசனிடம், தான் மதுரை மீனவ அரசனின் மகனென்றும், தான் மீன் பிடிப்பதில் வல்லவன் என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டார். அவனை சோதிக்க எண்ணம் கொண்ட அரசன், சுறா

கொடுக்கும் தொல்லைகளைக் கூறி, அதனைப் பிடித்தால் தன் மகளை திருமணம் செய்து தருவதாகக்கூறினான்.

உடனே கடலுக்குச் சென்ற வலைஞன் வலை வீசி மீனைப்
பி டித்துக் கரையில் போட்டார். தான் கூறிய படி அரசன் தன் மகளை வலைஞனுக்கு திருமணம் செய்துக் கொடுத்தார். திருமணம் பூண்ட வலை ஞத்தம் பதியர் சிவனும் உமையுமாக விண்ணில் எழுந்து காட்சி தந்தனர். சுறா மீனாகிய நந்தியும் பழய வடிவம் பெற்றது. மீனவத் தலைவன் இருவரையும் வணங்கினான். ஐயன்அவனுக்கு சிவலோகம் அடைய அருள் புரிந்து நந்தி தேவரோடும் அடியார்களோடும் உத்திரகோசமங்கை என்னும் தலத்தையடைந்தார்.

அங்கு உமாதேவிக்கு வேதத்தின் ரகசிய பொருளை உபதேசித்தார். அப்போது அன்புடன் அறுபதினாயிரம் சிவனடியார்களுக்கும், சிவயோகிகளுக்கும் வேத்தின் பொருளை உபதேசித்தார். எல்லோர் பற்றையும் ஒழித்து வீடு பேற்றை அளித்து அங்கயற் கன்னியுடன் மதுரையம் பதி அடைந்தார்.

**பல்லவி**
வேதப்பொருள்கேட்பதில்அலட்சியமாயிருந்த - மீ
னாட்சியைமீனவகுலபெண்ணாகிடசபித்தீர்
**அனுபல்லவி**
வேதநூலைகோபத்துடன்பிள்ளைகள்கடலில்வீச
வாசல்காவல்நந்தியைசுறாமீனாகிடசபித்தீர்
**சரணம்**
தொல்லைதருமமீனைப்பிடித்துதருபவர்க்குதம்பெண்ணை
மணம்முடித்துத்தருவதாய்மன்னன்சொன்னான்
வல்லவனாகமீன்ப்பிடித்துநந்திவடிவம்பெற
உத்தரகேசமங்கையில்பின்உமைக்குவேதம்ஓதினீர்

**58 வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்**

வைகையாற்றின் கரையில் திருவாதவூர் என்னும் ஊரில் சம்பு பாதசரிதருக்கும், சிவஞானவதிக்கும் வாதவூரான் என்ற ஓர் மகன் பிறந்தான். பதினாறு வயதிலேயே வேதம் முதல் அறுபத்து நான்கு கலைகளையும் வாதவூரான் கற்றுணந்தான். படைக்கலைப் பயிற்சியையும்,நீதி சாஸ்திரங் களையும் கற்றுணர்ந்த அவனை தன் முதல் மந்திரியானான் அரிமர்த்தன பாண்டியன் வாதவூரான் அரசியலில் ஈடுபட்டிருக்கும் போதே அவனுள் உலகில் மெய் பொருளை அடையும் வழிகளை ஆராய்ந்து வரலானான். இறைவனிடம் அன்புக் கொண்டு அவனின் திருவருளைப்பெற்றால் தான் வீடுப்பேற்றை அடைய முடியும் என்பதை உணர்ந்தான். சாஸ்திரத்தில்வல்லோரைசந்தித்துமெய்பொருளைபற்றி ஆராய்ந்தும்அவைஅவன் மனத்தில் நிலைக்கவில்லை. சிவபெருமானி டம் கொண்ட பேரன்பே பதிந்திருந்தது. தன் கடமையையும்செய்து மன்னனின் நன்-மதிப்பைப் பெற்றான்.

குதிரைக் காவலாளர்கள் மன்னனிடம் வந்து வைகையாற்றின் வெள்ளத்தால் பல குதிரைகளும், நோய்வாய்ப்பட்டு பல குதிரைகளும் இறந்து விட்டதாகக் கூறினர். பாண்டியன் வாதவூரானிடம்கருவூலத்தி லிருந்து பொருள் எடுத்துக் கொண்டு நல்ல குதிரைகளாக வாங்கி வரும் படிபணித்தார். வாதவூரானும் பொருள் எடுத்துக் கொண்டு அரசரிடம் விடைப் பெற்றுக் கொண்டுகுதிரைகள் வாங்க புறப்பட்டான் .

திருக்கோயிலுக்குச்சென்றுஐயனைவணங்கிதான்கொண்டுவந்துள்ள பொருள்கள்அனைத்தும்அடியார்களுக்குப்பயன்படும்படிஅருளும்படி வேண்டினான். ஐயன் ஆதிசைவர் போல் வடிவுக் கொண்டு வாதவூரானுக்கு திருநீறு கொடுத்து அருளினார்.

ஐயன் திருப்பெருந்துறையில் ஒரு குருந்த மரத்தடியில் குருவாய் அமர் ந்திருந்துவேதத்தைபோதித்துக்கொண்டிருந்தார். அங்குவந்தவாவூரான் ஐயனை வணங்கினான். ஐயன் வாதவூரானின் சிரம் மேல் கை வைத்து பஞ்சாக்ஷரத்தை ஓதினார். வாதவூரான் ஐயனுக்கு பாமாலை பல சூட்டினான். மகிழ்ந்த ஐயன் அவனுக்கு மாணிக்கவாசகன் எனும் திருநாமத்தைச்சூட்டினார்.

மாணிக்கவாசகனிடம், இன்னும் பல பாமாலைகள் இயற்றவும் சமணர்களை வாதத்தில் வெல்லவும் இன்னும் சில காலம் அவ்வூரில் , அடியார்களோடு மறைத்தார் ஐயன்.

**பல்லவி**
அரிமர்த்தனபாண்டியன்திருவாதவூராரை
முதல்மந்திரியாய்கொண்டுஅரசாட்சிசெய்தான்
**அனுபல**்லவி
பரிக்கானபொருளைபணிக்காகபணித்திடவே
பெருந்துறைகுருந்தமரத்தடியில்ஆசானாய்அமர்ந்தீர்
**சரணம்**
திருக்கரத்தைசிரசில்வைத்துஉய்க்கும்பஞ்சாக்ஷரத்தை
ஓதிமாணிக்கவாசகன்என்றபெயர்சூட்டினீர்
திருமுகத்தைக்கண்டுபயந்தவாசகனுக்கு
வரும்குதிரைஎன்றுபதில்ஓலைஅனுப்பச்சொன்னீர்

**59 நரியைப் பரியாக்கிய படலம்**

வாதவூரான் கூறிய படி பரிகள் வராததால் அரிமர்த்தன பாண்டியன் மிகவும் கோபம் கொண்டுகாவளாளிகளிடம் வாதவூரானை கடுமை யாக தண்டிக்கும் படி கட்டளையிட்டான்.
மாணிக் கவாசகரை எரிக்கும் வெய்யிலில் நிறுத்தினர். அதற்கும் மாணிக்கவாசகர் அசையவில்லை. கைகளிலும் கால்களிலும் பூட்டிட்டு துன்புறுத்தினர். அவனின் மேல்பெரும் சுமைஏற்றினர். மாணிக்க வாசகன் சிவனை தஞ்ச ம்அடைந்தான்.

ஐயனின் திருவடிகளை நினைத்ததும் அவை பெருஞ்சுமையாக தோன் றவில்லை எல்லாக்கொடுமைகளையும் இறைவன் நாமத்தைச் சொல்லியே தாங்கிக் கொண்டான் பின் கொடிய சிறையில் அவரைத் தள்ளினர் காவலாளிகள். வாதவூரான் ஐயன் நாமத்தைக் கூறிக்கொ ண்டே இருந்தான்.

அவரை சிறையிலிருந்து காக்க திருவுள்ளம் கொண்ட ஐயன் சிவ கணங்களை அழைத்துகாட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கி ஓட்டி வரும் படி தானும் ஓர் குதிரைக்காரனாக நரியைப்பரியாக்கி ஆயுதங்களு டன் நின்ற பூதகணங்களுடன் வாள் ஏந்தி வேதமாகிய குதிரையின் மீது எழுந்தருளினார்.

ஐயன் மாயக்குதிரையில் நடுவே செல்ல குதிரைக் கூட்டம் மேற்கு தி சையை நோக்கி நடந்தன. குதிரை வருகையினால் எங்கும் புழிதி படல ம் பதிந்தது. குதிரையின் கனைப்பு கடல் அலைபோல் ஒலித்தது. குதி ரை வரும் விவரத்தை அறிந்த மன்னன் மகிழ்ந்து குதிரைகளை எதிர்க் கொண்டு அழைக்க காத்திருந்தான். சிறுது நேரம் கடந்தப் பின் குதி ரைகள் வந்து சேர்ந்தன. அகமகிழ்ந்து மன்னன் வாதவூரானை வாழ்ந்தி னான். இறைவனே கடிவாளத்தைக் கையில் பிடித்து குதிரையின் சிறப்பை மன்னனுக்கு எடுத்துக்கூறினார். சிவக ணங்களும் அவ்வாறே செய்தன. அவர்களிடம் அவர்களது தலைவன் யார் என்றுமன்னன் வினவ, அவர்களும் இறைவனைக் காட்டினார்கள். மன்னனும் தன் இருக்கைவிட்டுஎழுந்து கை குவித்து வணங்கினான்.

வீரனாகவந்தசோமசுந்தரர்பாண்டியமன்னனிடம், மன்னனுடையபொருட்களைஎல்லாம்தன்னிடம்கொடுத்ததால், தான்மனிதர்களுக்குகிடைப்பதற்குஅறியதானகுதிரைகளைஅவர்களு க்குஅளித்ததாகக்கூறினார்.
மேலும்அக்குதிரைகளை ஒப்படைத்த பின் நாளை எதுநேர்ந்தாலும் அத ற்கு தான் பொறுப்பு ஏற்க முடியாது என்றும் கூறினார்.

கயிறுமாறும்பொழுதுசிவபெருமான்மன்னனுக்கு, குதிரையின்இலக்கணங்களைக்கூறிகுதிரையைசெலுத்திகாட்டினார். மற்றவீரர்களும்அவ்வாறேசெய்தனர்.

வழக்கப்படிமன்னன்குதிரையைபூஜித்தப்பின்அதன்இருப்பிடத்தில்சேர்க்கப்பட்டன.

சிவபெருமான்மன்னன்அளித்தபட்டாடையைமகிழ்வுடன்அணிந்தார். எல்லாக்குதிரைவீரர்களுக்கும்பரிசளித்தான்மன்னன். அதன்பின்குதிரைவீரர்களோடுதலைவனும்மறைந்தார். பாண்டியன்வாதவூரானுக்குவரிசைகள்பலசெய்தான்.

சோமசுந்தரரும்திருக்கோயிலடைந்துமீனாட்சிஅம்மையாருக்குதன்திருவிளையாடலைக்கூறிஇனிதேவீற்றிருந்தார்.

**பல்லவி**
சொன்னபடிபரிகள்வராமையால்அமைச்சரை
அரசனும்கடுமையாகதண்டிக்கச்சொன்னான்
**அனுபல்லவி**
மன்னன்சினம்தணியசிவகணங்களைக்கொண்டு
நரிகளையெல்லாம்சேர்த்துபரிகளாக்கிடச்சொன்னீர்
**சரணம்**
சிவகணங்கள்எல்லாம்குதிரைச்சேவர்களாய்
வேதமாகியகுதிரையின்மீதுஎழுந்தருளினீர்
எவரும்வியக்கும்குதிரையைமன்னனிடம்
கொடுத்துஇன்றுடன்இதன்கணக்குதீர்ந்ததுஎன்றீர்

**60 பரியை நரியாக்கி வையைஅழைத்த படலம்**

அரிமர்த்தன பாண்டியன் அளித்த வெகுமதியுடன் தன் இல்லம் அடைந்த வாதவூரான் தனிமையில் சிந்தித்தான். தாம் வேண்டியபடி இறைவனின் பணிக்கு செலவிட வழிசெய்து, மன்னனுக்கும் நல்ல குதிரைகள் கொடுத்து ,தன்னையும் காப்பாற்றிய ஐயனை வழி படுதல் இன்றி தமக்கு வேறு வேலையில்லை என்ற எண்ணம் கொண்டு சோம சுந்தர்ரை மனத்தில்தியானித்தான்.

இரவு வந்ததும் அரிமர்த்தன பாண்டியன் அரண்மனை லாடத்தில் கட்டியிருந்த குதிரைகள், அவைகளுக்கு பழக்கமில்லாத உணவு வகை களை உண்ண மறுத்தன. ஐயனின் திருவிளையாடலினால் தங்களது உண்மை, நரி வடிவத்தைக் கொண்டன. நரிகளெல்லாம் கட்டப்பட்டிருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு, அங்கு கட்டப் பட்டிருக்கும் குதிரைகளைக்கடித்து அதன் ரத்தத்தைக் குடித்தன. ஊரை நாசமாக்கின.

இதனைப் பார்த்த வீரர்கள் அஞ்சி நடுங்கினர். அரண்மனை வாயிலை திறந்தவுடன் எல்லாநதிகளும் விரைவாக ஓடிகாட்டிற்குள் மறைந்தன. மன்னனிடம்பரிகள்நரிகளாகிநகரைநாசம்செய்ததைவிளக்கினர். இதைக் கேட்ட மன்னன் சீறிசினந்து . மந்திரிகளை அழைத்த அரிமர்த்தனபாண்டியன், தனது மாயத்தால் காட்டிலுள்ள நரிகளை பரியாக்கி தன்னை மோசம் செய்த வாதவூரானை என்ன செய்யலா ம்என்றுஆலோசனைக்கேட்டான்.

ஈஸ்வரத்யானத்திலேயேஇருந்தவாதவூரான்நடந்ததுஎதுவும்அறியாமல் அரசன்முன்செல்ல, அரசன்நடந்ததைக்கூறி, காவலர்களிடம், அவன்தமக்குபணத்தைதரும்வரைக்கடும்காவலில்வைத்துகொடியத ண்டனைகளைஅளிக்குமாறுஉத்தரவிட்டான். காவலர்கள்வாதவூர்ரைநடுப்பகலில்ஆற்றில்சுடும்மணலில்நிறுத்திபல வகையில்துன்புறித்தினார்கள். மாணிக்கவாசகராகியவாதவூரான்படும்துன்பத்தைகாணப்பொருக்கா தஐயன்வைகையைஊழிக்காலகடல்போல்பெருகிவரச்செய்தார்.

பெருகிவந்தவெள்ளத்தால்நகர்மிகவும்நாசமடைந்தது. மக்கள்செய்வதுஅறியாதுதிகைத்துநின்றனர். வாதவூரானைதண்டித்துக்கொண்டிருந்தகாவலர்கள்அவனைவிட்டுநீங் கிதத்தம்உடைமைகளைப்பாதுகாக்கவிரைந்துஓடினர். தனித்துவிடப்பட்டவாதவூரார்திருக்கோயிலுக்குச்சென்றுசோமசுந்தர ரைதஞ்சமடைந்தார்.

**பல்லவி**
பரிகள்நரியாகிநள்ளிரவில்நாட்டையெல்லாம்
நாசம்செய்ததையறிந்தமன்னன்வெகுண்டான்
**அனுபல்லவி**
எரிகின்றவெய்யிலில்இருந்திடஅமைச்சனும்
எம்பெருமானேஎன்றுகதறியேவீழ்ந்தான்
**சரணம்**
வாதவூரனின்செய்கைபாண்டியன்அறிந்திட
வைகையைஊழிக்காலக்கடல்போல்வரச்செய்தாய்
வேதனையுடன்பொருளைவெள்ளத்தினின்றும்காக்க
காவலர்விரைந்தும்கோயில்வந்தான்வாதவூரன்

**61 மண் சுமந்த படலம்**

வெள்ளத்தால்மதுரைமாநகர்அல்லல்படுவதைஅறிந்தஅரிமர்த்தன பாண்டியன்வைகைக்கரையைக்கட்டிவெள்ளத்தின் வேகத்தை தணிக்க முடிவு செய்தான். அதற்குஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட அளவு அளந்து கோடிட்டு அடைக்குமாறு ஆணையிட்டான்.

மதுரைமக்களும்தங்களுக்குஅளந்துவிடப்பட்டபகுதியைஅடைக்க கூலியாட்களைஅமர்த்தினார்கள். அவர்களும் கரையை அடைக்க தொடங்கினார்கள்.

அப்போது மதுரையில் வந்தி என்ற வயதான ஒரு கிழவி பிட்டு செய்து விற்று வாழ்ந்து வந்தாள் சோமசுந்தரரிடம் மிகுந்த பக்தி கொண்டவள். அவள் செய்த பிட்டினை ஐயனுக்குப் படைத்தப் பின்னரே விற்று வந்தாள் அவளுக்காக விடப்பட்ட பங்கினை அடைக்க கூலியாள் கிடைக்காததால் வருந்தினாள். அரச தண்டனைக்கு பயந்த அவள் ஐயனை தனக்கு அருள வேண்டானாள்.

அவளது வருத்தத்தைப் போக்க எண்ணிய ஐயன், அழுக்கான உடையை இடையில் அணிந்து, மண் வெட்டியை தம் தோளில் சுமந்து, சும்மாடு கட்டி அதன் மேல் கூடையைக் கவிழ்த்துக் கொண்டு, கூலிக் கொடுத்து தம்மை வாங்குவோர் உண்டோ என்று கூவி வந்தியின் அருகில் வந்தார். கூலியாக வந்த ஐயனிடம் தனக்கு அளந்து விட்ட பகுதியை அடைத்து தரவேண்டினாள் ஐயனும் வந்தியின் பிட்டிற்கு மண் சுமந்து அடைப்பதாக அவளிடம் உறுதிகூறினார். ஐயன் தாம் மிகுந்த பசியுடன் இருப்பதால் முதலில் பிட்டைத் தின்று, சிறிது இளைப் பாறிய பின் தனது வேலையை தொடங்குவதாகக் கூறி, வந்தி அளித்த பிட்டை உண்டார்.

சோமசுந்தரர் வைகையாற்றிக்குச் சென்று தன்னை வந்தியின் கூலியாகப் பதிவு செய்துக் கொண்டார். வேலையை சரிவர செய்யாது, இதர ஆட்களையும் வேலை செய்யவிடாது நையாண்டி செய்து வந்தார். நன்றாகத்தூங்கிவிட்டு, திரும்பவும் பசித்தவர் போல் வந்தியிடம் போய் திரும்பவும் சூடான பிட்டை வாங்கி ரசித்து உண்டார். திரும்பவும் வித்தைகள் செய்துக் காட்டிக் கொண்டிருக்கையில் வேலை வாங்குவோர், அடைக்கப்பட்ட கரையைப் பார்க்க வந்தனர். வந்தியின் பங்கு அடைக்கப்படாமல் இருப்பதைக் கண்டு, அவளுக்காகவந்தகூலியாளைவிரட்ட, கூலியாக வந்த அண்ணல் இறுமாப்புடன் இருந்தார்.

நடந்ததை மன்னனிடம் முறையிட்டனர். அமைச்சர்களுடன் அங்கு பார்வையிட வந்த மன்னன், வந்தியின்கரை அடைக்கப்படாமல்

இருப்பதையும்,அதனால் அடுத்தக் கரையும் சேதம் அடைவதைக் கண்டு வெகுண்டான். வந்தியின் கூலியாளை வரவழைத்து, தன் பிரம்பினால் கூலியாக வந்த இறைவனின் முதுகில் அடித்தான். கூடையோடு மண்ணை உடைப்பில் கொட்டிவிட்டு உடனே மறைந்தார் ஐயன்.

சிவபெருமான்மீதுப்பட்டஅடித்தழும்பு, அரசன், அவன்குடும்பத்தார், தெய்வங்கள், உலகிலுள்ளஅனைத்துஜீவராசிகளின்மீதும்பட்டது. இதன் காரணம் யாது என அனைவரும் கலங்கி நின்றார்கள். இதற்கிடையில் கரையை அடைக்காது கூலியாள் ஓடி விட்டதால் காவலர்கள் வந்தியை அரசனிடம் அழைத்து வந்தனர். பயந்த வந்தி, ஐயனை தன்னை காத்தருளும்படி வேண்டினாள். தேவ விமானத்தில் சிவகணங்கள் அவளை சிவலோகம் அழைத்துச் சென்றனர்.

கூலிகொட்டிய ஒரு கூடை மண்ணே மலையாகி வையைக் கரையை அடைத்ததையும், அவன் மீது பட்ட அடி எல்லோர் மீதும் பட்டதையும் அறிந்த மன்னன் சற்றே ஐயம் கொண்டான். அதே சமயம் தருமவழியில் தேடப்பட்ட செல்வம் தர்ம வழியில் இறைவனுக்கே வாதவூரார் மூலம்,செலவழிக்கப்பட்டது என அசரீரி ஒலித்தது. அவனைத் துன்புருத்தியதால் நரிகளைப் பரிகளாக்கியதாகவும், மேலும் வாதவூருக்கு துன்பம் கொடுத்ததால், வைகையில் வெள்ளம் பெருகச் செய்ததாகவும், வந்தியின் அன்பிற்காக அவளின் பிட்டிற்கு ஐயன் மண் சுமந்து பிரம்படிப் பட்டதாகவும் ஒலித்து.

இதனை அறிந்த மன்னன் வாதவூரானை கோயிலில் கண்டு, தான் இது வரை செய்ததை மன்னித்து மீண்டும் அரசு திரும்பிட வேண்டினான். அதனைமறுத்து, தில்லைப் பதிக்கு மன்னனிடம் விடைப் பெற்றுச் சென்றான் வாதவூரான். அரண்மனை திரும்பிய மன்னன் திருப்பெருந்துறையில் பல திருபணிகள் செய்து பலகாலம் நல்லாட்சி புரிந்து, ஜகநாதன் என்ற தன் மகனிடம் ஆட்சியை ஒப்படைத்து சிவபதமடைந்தான்.

**பல்லவி**
பெருகும்வெள்ளத்தைத்தடுக்ககுடிக்கொருஆள்வந்து
அடைக்கவேண்டுமென்றுஅரசனும்ஆணையிட்டான்
**அனுபல்லவி**
வருந்தியேவந்தியும்ஆண்மகன்துணையின்றி
கூலியாளும்கிடைக்காமல்அழுதுஉன்னைத்தொழுந்தாள்
**சரணம்**
வந்திவிற்கும்பிட்டைகூலியாகப்பெற்றுவேலைஏற்று
வம்புசெய்துமன்னனிடம்பிரம்படிபட்டாயே
அந்தஅடிமூவுலகமும்படச்செய்துஅரசனுக்கு
உணர்த்தியபின்வந்தியைசிவலோகம்செல்லச்செய்தீர்

**62 பாண்டியன் சுரம் தீர்த்த படலம்**

சந்துருசாதன பாண்டியன் சேர, சோழ, பாண்டிய நாட்டை ஒரு குடையின் கீழ் ஆண்டு வந்தான். தீவினை பயனால் அவனுக்கு முதுகில் கூன் விழுந்தமையால் கூன் பாண்டியன் என்றுஅழைக்கப் பட்டான். சேரன் மிகுந்த செல்வத்தைக் கொடுத்து தன் மலை நாட்டைப் பெற்றுச்சென்றான். சோழன் தன் மகள் மங்கையர்க்கரசி யை மணம் செய்துக் கொடுத்தான். அவளுடன்அறிவில் சிறந்த குலச்சி றையார் என்பவரை அனுப்பிவைத்தான். மனைவியுடன் வந்தவரை கூன்பாண்டியன் தன் முதல் மந்திரியாக்கினான்.

கூன் பாண்டியன் சமணர்களது வலையில் வீழ்ந்து சமணனானான். அரசியும் மந்திரியும் சைவதழுவினர். இந்நிலையில் பாண்டிய நாட்டில் மணம் ஓங்கி, வேத நெறிகள் மறைந்து சைவம்மங்கத் தொடங்கியது. மனம் வருந்திய அரசியும் மந்திரியும் சோமசுந்தரக் கடவுளை அரசனைசமணவலையிலிருந்து காப்பாற்றுமாறு வேண்டினர்.

அந்நேரம் சிதம்பரத்திலிருந்து வந்திருந்த ஓர் சிவனடியாரான ஓர் அந்தணரைச் இருவரும்சந்தித்தனர். அவர் ஞானசம்பந்தரைப் பற்றி இவர்களிடம் கூறினார்
(சீர்காழியில் பிறந்த இவர் மூன்று வயதிலேயே இறைவன் வந்து முலைப் பாலுடன் சிவ ஞானத்தையும் குழைத்துஊட்டியதால் வேதங்களும் சிவ ஆகமங்களும் கற்காமலேயே அவர் ஓதினார். ஞானத்துடன்சம்பந்தர் இருந்தமையால் அவர் ஞான-சம்பந்தர் என்று அழைக்கப்பட்டார். அவர் ஒவ்வொருகோயிலாகச் சென்று வேதங்களை எல்லாம் தமிழ் பாமாலைகளாகப் பாடினார்) பாண்டியநாட்டில் சிவ மணம் கமழ மதுரைக்கு ஞானசம்பந்தர் வருகிறார் என்ற செய்தியை அரசியிடம்கூறினார்.

மங்கையர்க்கரசியும், குலசிறையாரும் மகிழ்ச்சியுடன் அவரை சந்தித்து விவரம் கூறி, சைவத்தைக் காத்திட வேண்டினார்கள். ஞான சம்பந்தரும் சோமநாதரை வணங்கி வாதத்தில் சமணர்களை வெல்லும் வலிமையை தனக்கருள திருப்திகம் பாடினார்.

சம்பந்தர் வரவை அறிந்த சமணர்கள் ஒன்று சேர்ந்து அபிசார யாகம் செய்தனர். ஞானசம்பந்தர்தங்கியிருந்த வாகீச முனிவர் மடத்தை தீக்கடவுளை அழைத்து தீக்கிரையாக்கும் படி வேண்ட, தீக்கடவுள் மறுத்தார் அதனால் சமணர்கள் தாமே தீயை மடத்தில் ஏவினார்கள். உடனே ஞானசம்பந்தர் சமணர்களின் பொய் மொழியைக் கேட்டு பழைய முறைகளைக் கைவிட்டபாண்டியனைத் காக்கும் படி சோமசுந்தரர் மேல் தமிழ் மறைப் பதிகம் பாடினார்.

தீயானது பாண்டியனைப் பற்றியது. வெப்பம் தாங்காது தவித்தான் பாண்டியன். அவன் அருகில்இருந்த பொருட்கள் எல்லாம் கருகின. சமணர்களின் மருந்து மந்திரம் எதிலும் பாண்டியன் குணமாகவில்லை

அரசியும் மந்திரியும் மன்னனிடம் இக்கொடிய நோயைத் தீர்க்க வல்லவர் ஞானசம்பந்தரே என்றனர். முதலில் சமணப் பற்றுடையத் தன்னை சைவர்குணமாக்குவது நியாயமற்ற செயல் என்றான். இந்த நோய் தீர ஒரே வழி இதுதான் என்று அரசி எடுத்துக்கூற, பாண்டியனும் வேறு வழி இன்றி அதற்கு சம்மதித்தான்.

மந்திரியும் அரசியும் ஞான சம்பந்தரிடம் சென்று அரசனின் பிணிவைத் தீர்த்து, சமணம்அழியுமாறு செய்ய வேண்டினர். ஞானசம்பந்தர் பார்வையாலேயே கூன்பாண்டியன் தெளிவடைந்தான். பாவியாகிய தன் நோய் தீர்த்து தன்னை காக்கும் படி வேண்டினான். இதைக் கேட்டு கொதிப்படைந்த சமணர்கள் பாண்டியனது வலப்பக்கத்து நோயை ஞானசம்பந்தரும் இடப்பக்கத்து நோயை சமணர்களும் தீர்த்து வைக்க அனுமதிக்க வேண்டினார்.

மன்னனின் அனுமதியுடன் முதலில் சமணர்கள் தங்களால் இயன்றதைச் செய்தார்கள். நோய் அதிகரித்ததால் சமணர்கள் தலைக் கவிழ்ந்தனர் .திருநீற்றுத் திருப்பதிகம் ஓதி கூடல் பெருமானின் திருமடைப்பள்ளிச் சாம்பலை அள்ளி, பாண்டியன் வலப்புறம் தடவினார் ஞானசம்பந்தர். உடனே வெப்ப நோய் தீர்ந்து வலப்புறம் குளிர்ந்தது.

மனம்மகிழ்ந்தமன்னன்தனதுஇடதுபக்கத்துநோயையும்தீர்த்துஅருளுமாறுவேண்டினார். சம்பந்தர் முன்போல திருநீறுபூச வெப்பம் முழுமையாக நீங்கிற்று. அத்துடன் அவன் கூனும் நீங்கி சூரியனைப் போல் சௌந்தர்யமாக காட்சிதந்தான். அதனால் அவன் சௌந்தர பாண்டியன் என்று அழைக்கப்பட்டான்.

ஞானசம்பந்தரின் நோக்காலும், ஸ்பரிசத்தாலும், வாக்காலும் நோய் தீர்ந்த பாண்டியன் அவர்காலில் வீழ்ந்து வணங்கி, சமணத்திலிருந்து நீங்கி சைவத்தை தழுவினான்.

**பல்லவி**
சோழன்பெண்ணைமணந்துஅவன்தந்தஅறிஞனை
அமைச்சனாக்கிக்கொண்டுஆண்டான்கூன்பாண்டியன்
**அனுபல்லவி**
பாழடைந்தநெற்றியுடன்சமணனாகியமன்னன்
பாலிக்கவேண்டிஅரசிக்குசம்பந்தனைகாணச்செய்தாய்
**சரணம்**
தன்மீதுசமணர்வைத்ததீயைமன்னன்மீதேவ
வந்தநோயைசொன்னபடிசமணர்கள்தீர்க்காத்தால்
மன்னன்சம்பந்தனைவேண்டிடஇருபக்க
நோயுடன்கூனையும்திருநீறுபூசிநீக்கினீர்

**63 சமணர்களைக் கழுவில் ஏற்றியப் படலம்**

சவுந்தரபாண்டியனின்மனைவிமங்கையர்க்கரசியும்மந்திரிகுலசிறை யாரும் ஞானசம்பந்தரிடம் மன்னனின் வேட்கை நோயையும் கூனையும் போக்கியதைப் போல்பாண்டிய நாட்டில் தங்கியுள்ள சமணத்தையும் அழிக்க வேண்டும் என்று வேண்டினர். ஞானசம்பந்தர் ஐயனின் விருப்பத்தை அறிய எண்ணம் கொண்டு மந்திரியையும், அரசியையும் உடன் அழைத்துக் கொண்டு திருக்கோயில் சென்றார். பொற்றாமரைக் குளத்தில் நீராடி ஐயனிடம் தம் எண்ணத்தைக் கூறி தமக்கு அருளுமாறு வேண்டினார்கள்.

அவர்களுடைய விருப்பமே தமது விருப்பம் என்றும், சமணர்களுடன் வாதத்தில் வெற்றி அவர்கள் பக்கமே என்று ஐயன் கூறியருளினார். மூவரும் மன்னனிடம் சமணருடன் வாதம் செய்ய அனுமதிப் பெற்ற பின்னர், வாத செய்யக் காத்திருந்தனர்.

சமணரின் மனைவிமார்கள் தாங்கள் தீயகனவுகள் கண்டதாகவும், அவை கெட்ட சகுனமானதால் வாதத்திற்கு செல்லவேண்டாம் என தமது கணவர்களைத் தடுத்தனர். மனைவியரது வேண்டுகோளை நிராகரித்து, ஞான சம்பந்தருடன் வாதம் செய்ய அரசரவை அடைந்தார்கள்.

ஞானசம்பந்தரிடம்சமணர்கள்அவருடையமந்திரத்தைஒருஏட்டிலும், சைவர்களும் தங்கள்மந்திரத்தை ஒரு ஏட்டில் எழுதி தீயிலிட்டால் எது கருகாமல் இருக்கிறதோ, அது வென்றதாகும்என்றார்கள். மேலும் சிவனது தலமாகிய மதுரையில் இந்த வாதம் நடந்தால், சிவன் நடுநிலைதவறி சைவர்கள் சார்பில் நின்று சமணர்களுக்கு கேடு செய்வான். ஆதலினால் மதுரைக்குவெளியே சென்று வாதம் புரியலாம் என்றனர். எனவே அனைவரும் மதுரைக்கு வெளியே வாதம்செய்ய சென்றனர்.

கீழ் திசையில் ஏழு குழி செய்து நெருப்பை மூட்டினார்கள். எண்ணாயிரம் சமணர்களும்ஒவ்வொருவரும் மந்திரத்தை ஏட்டில எழுதி தீயிலிட்டனர் .அவை யாவும் கருகின. சமணர்கள் மனம் கலங்கினார்கள். ஞானசம்பந்தர் தமது ஏட்டுக்கட்டிலிருந்து "போகமார்த்தபூண்முலையாள்" என தொடங்கும் திருப்பதிகத்தை எடுத்து தீயிலிட்டார். அது பச்சையாகவேஇருந்தது. அனைவரும் மகிழ்ந்தனர். அந்த இடத்திற்கு அன்று முதல் சம்பந்த நத்தம் என்னும் பெயர் வழங்கலாயிற்று. தீயிலிட்ட ஏட்டை மீண்டும் எடுத்து திருமுறையில் சேர்த்தனர். தோல்வியால் கோபம் கொண்டனர் சமணர்கள்.

ஞானசம்பந்தரின் ஏடு அக்கினியால் கருகாது மீண்டதைக்கண்டு, திருப்தி அடையாத சமணர்கள் திரும்பவும் ஏடுகளை வைகை-யாற்றில் விட்டு, எந்த ஏடு நீரை எதிர்த்து வருகிறதோஅந்த ஏடே

வெற்றி பெற்றதாகக் கொள்வோம் என்றனர். தோல்வி அடைந்தவர்கள் வெற்றிப்பெற்றவர்க்கும் அடிமை என்ற முடிவிற்கும் வந்தனர். அதற்கு ஞானசம்பந்தர் தங்களுக்குகுற்றேவல் புரிய ஆட்கள் தேவையில்லை எனவும் தோற்றவர்கள் கழுமுனையில் ஏற வேண்டும்என்றார். ஊழ் வினையால் சமணர்களும் அதற்கு உடன்பட்டார்கள்.

சமணர்கள்தம்ஓலையைநீரில்இட்டார்கள். ஓலையானது நீரில் போக்கில் சென்றது .ஞானசம்பந்தர் "வாழ்க அந்தணர்கள்" என்று ஓலை எழுதி வேதம் கூறும் மெய் பொருள் சிவபெருமான் என்பது உண்மையானால் வெள்ளத்தை எதிர்த்து செல்க என்று கூறி நீரில் விட்ட ஓலை நீரில் எதிர்த்திச் சென்றது. சிவனடியார்கள் அனைவரும் மகிழ்ந்தனர். போட்டியின் விதிப்படி ஞானசம்பந்தரே வென்றார். ஐயனின் அருமை பெருமைகளை மன்னன் உணர்ந்தான். தோல்வியடைந்த சமணர்கள் தானே கழுவிலேறினர். இதர சமணர்கள் தம்மதம் விட்டுசைவராயினர்.

ஆற்றைஎதிர்த்துச்சென்றஏடுமறைந்ததும்முதியவர்வேடமேற்றுசிவபெருமான்அந்தஏட்டைஎடுத்துஞானசம்பந்தரிடம்சேர்த்தார்.
அந்த இடத்தில் பாண்டியன் திருவேடகம் என்ற பதிஉண்டாக்கி ஞானசம்பந்தருடன் ஓராண்டு தங்கியிருந்து, பின் தன் மனைவியுடனும்மந்திரிகளுடன் மதுரை மாநகர் அடைந்தான்.

**பல்லவி**
சம்பந்தருடன்கோபித்துசமணர்கள்போட்டியிட்டு
தன்மந்திரஏடுகள்மட்டும்தீயில்கருகிதோற்றனர்
**அனுபல்லவி**
வம்புக்காகமீண்டும்அவர்கள்வைகையைஆற்றில்ஓலையிட்டு
எதிர்த்துச்செல்லாஓலையினர்கழுவிலேற்றப்படுவர்என்றார்
**சரணம்**
தோற்றசமணர்கழுவிலேற்றப்பட்டிறக்க
சம்பந்தர்சுயம்புலிங்கத்தைதன்ஏட்டைத்தரச்சொல்ல
ஏற்றதலமெங்கும்உன்புகழ்பாடிவீடு
பேற்றையடைவாய்என்றுஏட்டைத்தந்தீரே

**64 வன்னியும் கிணறும் லிங்கமும் வரவழைத்த படலம்**

காவிரி பூம்பட்டணத்தில் வாழ்ந்த ஓர் வணிகனுக்கு தவப்பயனால் ஓர் பெண் பிறந்தாள். அவளை வணிகன் அவளை ஏற்கனவே மணம் முடித் திருந்த தன் மருமகனுக்கே மணம் செய்துகொடுக்கப் போவதாக்க் கூ றிக்கொண்டிருந்தான். தீடீரென வணிகனும் அவனை அடுத்து அவன்ம னைவியும் இறந்தார்கள்.

செய்வதறியாதுமருமகன்தன்மாமன்மகள்நிலைமைக்குவருந்தினான். காவிரிபூம்பட்டிணத்தில்சிலகாலம்தங்கிமாமன்விருப்பத்தைஎல்லோரி டமும்கூறிமிகுந்தசொத்துடையமாமன்மகளை மதுரைக்கு அழைத்துச் சென்று மணம் செய்துக் கொள்ளப்போவதாக சொல்லி அங்குள்ள சொ த்துக்களை எடுத்துக் கொண்டுப் புறப்பட்டான்.

போகும் வழியில் திருப்புறம்பயம் என்னும் ஊரை அடைந்தனர். அன்று இரவு அவ்வூரில் ஓர்கடம்பவன மரத்தின் கீழ் தங்கினாரகள். ஊழ் வி னையினால் பாம்பு தீட்டப்பட்டுள்ளது மருமகன்இறந்தான். செய்வதறி யாது கத்திக்கதறி புலம்பி மயங்கி வீழ்ந்த வணிகனது மகளைப் பார்த் தஅனைவரும் வருந்தினர்.

அப்போது அங்கு ஓர் மடத்திலிருந்த திருஞானசம்பந்தர் அங்கு வந்தார். கன்னியின் நிலைக்கண்டு வணிகனை விழித்தெழச் செய்தார். சம்பந்தர் கன்னியின் மாசற்ற அன்பினைவணிகனுக்கு எடுத்துக் கூறி, வன்னி மரமும், கிணறும், சிவலிங்கமும் சாட்சியாக வைத்துஅன்றே அங்கேயே திருமணம் செய்துக் கொள்ளும் படி அருளினார்.

வணிகன் சம்பந்தர் கூறிய படி திருமணம் செய்துக் கொண்டு மதுரை வந்தடைந்தான். அவன் இல்வாழ்க்கை இனிதே அமைந்தது. இருமனைவியருக்கும் குழந்தைகள் பிறந்தன.ஒரு நாள் குழந்தைகளின் சச்சரவில் தலையிட்டு எங்கிருந்தோ வந்த ஊதாரியின் பிள்ளைகள் என்று இளையவளின் பிள்ளைகளை ஏசினாள் மூத்தவள். மேலும் அக்னி சாட்சியாக வந்தவள் அவள்இல்லை எனவும் ஆசைக் கிழத்திதானே என கூறி இளையவளை ஏசினாள்.

மனம் கலங்கிய அவள் திருபறம்பயத்தில் சிவலிங்கமும், வன்னி மரமும், கிணறும் தன்திருமணத்திற்கு சாட்சியாகஉள்ளதாகக்அவளுக் குபதிலுரைத்தாள். அந்தசாட்சிகள்இங்குவருமாஎன்றுமூத்தவள்கேட்க, தனக்கு கண்கண்ட தெய்வமான சோமசுந்தரரிடம் தனக்கு ஏற்பட்ட அவசொல்லிருந்துகாத்துஅருளிடவேண்டினாள்மங்கை.

இறைவன் யாவரும் காணுமாறு மூன்று சாட்சிகளையும் வடகிழக்கு தி சையில் தோன்றுமாறுசெய்தார். மூத்தாளை பலரும் இகழ்ந்த போதும் இளையவள் அவர்களைத் தடுத்து அவளைத் தன்தாய் போன்றவள்

எனப் போற்றினாள். பின் வணிகனது இல்வாழ்க்கை முன்போல் இனிதே அமைந்தது.

**பல்லவி**
பெற்றோரைஇழந்துதன்அத்தானுடன்மதுரைச்செல்ல
அவனும்வழியிலோர்பாம்புகடித்திறக்க
**அனுபல்லவி**
வற்றாதுகண்ணீர்விடும்கன்னிகைக்கிரங்கிஅவனை
உயிர்ப்பித்துமணமுடித்துவைத்தான்சம்பந்தன்
**சரணம்**
சாட்சியின்றிமணந்துக்கொண்டஆசைநாயகியென்று
மூத்தாள்தன்னைஏசஉன்னைஉருகிவேண்ட
சாட்சியாய்இருந்திட்டவன்னியும்கிணறும்
லிங்கமும்வடகிழக்குதிசையில்தோன்றச்செய்தாய்

**மங்களம்**
மங்களம்சுபமங்களம்
மதுராநாதர்க்கு (மங்களம்)

அங்கயற்கண்ணியை
அடைந்தஆனந்தற்கு
ஆனந்ததாண்டவம்
ஆடியபாதற்கு (மங்களம்)

**மங்களம்**

மங்களம்சுபமங்களம்
மதுராநாதர்க்கு (மங்களம்)

அங்கயற்கண்ணியை
அடைந்தஆனந்தற்கு
ஆனந்ததாண்டவம்
ஆடியபாதற்கு (மங்களம்)